# தமிழா, தமிழைக் காத்திடு!



டாக்டர் ம.ராசநாதன்

961105

# தமிழா தமிழைக் காத்திடு!

(கட்டுரைகள்)

Donated by
International Movement for
Tamil Culture N.Z. (Inc.)

டாக்டர் ம. இராசநாதன்

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447
மின் அஞ்சல் : manimekalai@eth.net
4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 4342926
தொலை நகல் : 044 – 4346082

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | தமிழா தமிழைக் காத்திடு! |
| ஆசிரியர் | : | டாக்டர் ம.இராசநாதன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2001 |
| பதிப்பு விவரம் | : | முதலாம் பதிப்பு |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | : | கிரௌன் சைஸ் |
| அச்சு எழுத்து அளவு | : | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | X + 114 = 124 |
| நூலின் விலை | | 45-00/- |
| அட்டைப்பட ஓவியம் | : | திரு. மோகன் |
| லேசர் வடிவமைப்பு | : | சித்ரா லேசர் பிரிண்டர்ஸ் சென்னை – 15. தொலைபேசி : 433 2272 |
| அச்சிட்டோர் | : | B.V.R. ஆப்செட் சென்னை – 14. |
| நூல் கட்டுமானம் | : | தையல் |



## படைப்பு

எனது தமிழார்வத்தைப் போற்றி வளர்த்த என் வாழ்க்கைத் துணைவியார் சாரதாதேவிக்கு இந்த நூலைப் படைத்து முன்வைக்கிறேன்.



## அஞ்சலி

என்னைப் பெற்றெடுத்த தெய்வங்களுக்கும், சிறு வயதில் மறைந்த என் அருமைத் தங்கை பவானிக்கும் அஞ்சலி.

# பதிப்புரை

டாக்டர் ம.இராசநாதன் எழுதிய 'தமிழா தமிழைக் காத்திடு' என்னும் இந்த நூல் தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் பெருமை சேர்ப்பதாகும்.


தமிழ் தமிழரின் தொன்மையும் சிறப்பும் சொல்லப்பட்டு, இன்றைய நிலைகுலைவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தமிழ், தமிழர், தமிழிசை, புலவர்கள், கவிதைகள், வரலாற்று இடங்கள் – எனப் பல செய்திகள் அடங்கியுள்ளன.

நூலை வாங்கிப் படிக்கின்ற ஒவ்வொரு தமிழரும் மொழிவுணர்வும், இனவுணர்வும் கொள்வது உறுதி.

டாக்டர் ம.இராசநாதனின் இந்த நூலுக்கு வாசகர்கள் மத்தியில் பெரிதும் வரவேற்பு இருக்கும் என நம்புகிறோம்.

– பதிப்பகத்தார்



# முகவுரை

தொடர்ந்து பல்லாண்டுகளாக நான் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து மணிமேகலைப் பிரசுரம் நூல் வடிவில் வெளியிட்டிருக்கிறது. மணிமேகலைப் பிரசுரத்துக்கும் அதிபர் இரவி தமிழ்வாணன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுவயதில் இருந்தே தமிழில் எனக்கு மிகுந்த பற்றும் ஆர்வமும் உண்டு. பத்தாவது வகுப்பு வரை தமிழ் படித்தேன். அதன்பின் மருத்துவப் படிப்பில் எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில்தான் படித்தேன். ஆனால் இறைவன் அருளால் தமிழில் இருந்த ஆர்வம் குறையவில்லை. அதன் விளைவாக எழுந்ததுதான் இந்த நூல். நியூசிலாந்தில் தமிழ்ச் சங்கத்தின் தமிழ் மலருக்கு ஆசிரியராகப் பணியாற்றினேன். அதன்பின் பண்பாட்டு இயக்கத்தின் தமிழ் மஞ்சரிக்கும் ஆசிரியராகப் பல வருடங்களாகப் பணியாற்றி வருகிறேன்.

என்னைப் பொறுத்தவரை தமிழைக் கேட்பது செவிக்கு இன்பம்; தமிழைப் படிப்பது சிந்தைக்கு இன்பம்; தமிழைச் செப்புவது வாய்க்கு இன்பம்; தமிழென்றால் எந்நாளும் இன்ப அலையே! தமிழிலே எவ்வளவு உன்னத இலக்கியங்கள் இருக்கின்றன! உலகில் வேறெந்த மொழியிலும் காணமுடியாத திரவியங்கள் இருக்கின்றன. இது உண்மை. மேலைநாட்டு அறிஞர்கள் பலர் தமிழின் சிறப்பை உணர்ந்து புகழ் பாடியிருக்கிறார்கள் அல்லவா? மேலும் எமது தமிழ் உலகில் மேம்பாடு அடைந்த செம்மொழி (Classical Language) என்பதை நாம் மறக்கலாகாது. உலகில் உள்ள ஆயிரக்கணக்கான மொழிகளில் மிகவும் சில மொழிகளே மேம்பாடு அடைந்த செம்மொழிகள். ஆங்கிலம் கூட ஒரு மேம்பாடு அடைந்த மொழி என்ற பெருமையை அடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படிப்பட்ட மொழியை வைத்துக்கொண்டு தமிழராகிய நாம் தமிழைப் புறக்கணிக்கிறோம். இது ஏன்? ஆங்கிலச் சொற்கள் கலந்து தமிழைப் பேசுவதை நாகரிகமாகக் கருதுகிறோம். இந்த நிலை நீடிக்குமானால் எமது அருமைத் தமிழ் குலைந்து ''தமிங்கிலம்'' என்ற குருவிக் கூச்சலாக மாறிவிடும் அல்லவா?

எனவே, தமிழர்கள் தமிழைப் புறக்கணிக்கும் நிலை மாறவேண்டும். காலத்தால் அழியாத எமது மொழிக்கு மறுமலர்ச்சி அளிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. தமிழர்களுக்கு இதுவே எனது வேண்டுகோள்! தமிழின் பெருமையை உணர்ந்து செயலாற்றுங்கள்! தேவையின்றி ஆங்கிலச் சொற்களைத் தமிழோடு கலக்காதீர்கள்! தமிழின் புனிதத்தைக் காப்பாற்றுங்கள்!

இந்நூலை அழகாக வெளியிட்ட மணிமேகலைப் பிரசுரத்திற்கு மீண்டும் எனது நன்றியை நவில்கிறேன்!

அணிந்துரை வழங்கிய துணைவேந்தர் ஔவை நடராசனுக்கு எனது இனிய நன்றி!

நியூசிலாந்தில் எமது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் உறுப்பினர்களான என் அருமை நண்பர்கள் பலர் எனது தமிழ் ஆர்வத்துக்குப் பெரும் உற்சாகம் அளித்திருக்கிறார்கள். அவர்கள் பல வருடங்களாக எனது தமிழ்ப் பணிக்குப் பெரும் உதவி புரிந்திருக்கிறார்கள்.

அவர்களது ஆதரவுக்கும், உற்சாகத்துக்கும் எனது உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தமிழ்ப்பணிக்கு முழு ஆதரவு தந்த என் அருமை மனைவியார் சாரதாதேவிக்கும், பல உதவிகள் செய்த மைத்துனியார் சிவமணிக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– டாக்டர் **மகேசன் இராசநாதன்**

# அணிந்துரை

நியூசிலாந்து நாட்டில் ஆக்லந்து மாநகரில், புகழ் வாய்ந்த மருத்துவ மாமணியாக டாக்டர் மகேசன் இராசநாதன் திகழ்கிறார். தாமும், தம் அருமைத் துணைவியார் டாக்டர் சாரதாதேவியும், குடும்ப விளக்குகளாகிய நன்மக்களும் மருத்துவச் சுடர்களாக நியூசிலாந்து நாட்டு மக்களுக்கும், தமிழின மக்களுக்கும் ஆற்றும் பணிகள் அளவிடற்கரியன. வாழ்வியற்பணியாக மருத்துவத்துக்கே ஆட்படுத்திக் கொண்டாலும், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை உருவாக்கித் தமிழின மக்களுக்கு ஒல்லும் வகையால் நலங்கள் புரிவதோடு, தமிழார்வம் ததும்ப இயல், இசை, நாடகக் கலை நிகழ்வுகளுக்குத் தூணாக நிற்கும் தோன்றலாவார். தமிழ் மலருக்கும், பண்பாட்டு இயக்க ஏடான மஞ்சரிக்கும் ஆசிரியராக மிளிர்கிறார் நண்பர் இராசநாதன்.

''எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே எந்தை நினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்'' என்னும் திருவருட்பாத் தொடருக்குப் பொருந்துவதாக, எழிற்றமிழின் திருப்புகழை எங்கும் தமிழர்கள் இயம்பி வருவதைத் தமிழ்கூறு நல்லுலகம் போற்றி மகிழ்கிறது. நானும் என் துணைவியாரும் டாக்டர் அவர்களோடு இலக்கிய விழாக்களில் பங்குகொண்டதையும், அவர் இல்லத்தில் விருந்தயர்ந்ததையும் என்றும் நினைவுகூர்கிறேன்.

தமிழையே கல்வியாகக் கொண்ட புலவர்களினும் வேறு துறைகளில் வெற்றிகண்டோர், விருப்பத்தால் தமிழ்க் கலை ஆராயும் அறிஞர்களாக அமைவதால், அவர்தம் நோக்கும் போக்கும் வேறுபட்டே விளங்கும். 'தமிழும் தமிழரும்', 'தமிழ் இலக்கியம்', 'அருளியல்', 'பொதுக் கட்டுரை', 'கவிதை மொழிகள்' முதலிய இயல்களில்

அமைந்த இருபத்தெட்டுக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. 'தமிழர் உலகுக்கு அளித்த செல்வங்கள்' என்று தொடங்கி, அரிய பல செய்திகளை நூலாசிரியர் ஆங்காங்கே சுட்டிக்காட்டியுள்ளார்.

நியூசிலாந்தின் வடபகுதியில், 'வங்கரே' என்ற சிற்றூரை அடுத்த பகுதியில் வாழும் 'மயோரி' இன மக்கள் கண்டெடுத்து, அட்டிற்கலமாகக் காத்து வந்த தமிழ் மணியைக் கண்டறிந்து, தமிழ் மக்களின் உடைமையாகக் கருதப்படும் அம் மணி, தமிழரின் கடல் வாணிகத்தைக் காட்டுவதோடு, கப்பலிற் கட்டிய அச்சரமணியில் காணப் படும் எழுத்துப்பொறிப்பு, தமிழ் எழுத்துகளாகவும் விளங்குவதைக் கண்டறிந்து உலகெங்கும் பரப்பிய பெருமை டாக்டர் மகேசன் இராசநாதனையே சாரும். இன்றும் வெலிங்டன் மாநகரின் அருங்காட்சியகத்தில் அந்த 'மணி' காண்பார்க்கு வியப்பைத் தருவதாகும்.

திருவள்ளுவர், இளங்கோவடிகள், புகழேந்தி, கம்பர் முதலிய புலவர்களின் வாழ்வியலையும், இலக்கியத் திறனையும் ஆசிரியர் தெளிவாக விளக்குகிறார். திருவள்ளுவர் பற்றிய வாழ்வியல் உண்மைகளைப் பலர் ஏற்பதில்லை. கற்பனையால் பிற்காலத்தார் தம் மனம் சென்ற வகையில் திரித்தெழுதினர். அறக்கருத்துகள் பலவற்றை எளிய நடையில் ஆற்றொழுக்காக ஆசிரியர் எழுதிச் செல்வதைப் பாராட்டுகிறேன். சங்க இலக்கியச் சிறப்பைக் கட்டுரை ஆசிரியர் விரிவாக எழுதியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நெடுந்தொலைவும் நெடுநாளும் பிரிந்த நிலையாலும் அயலக மக்களிடையே தாய்மொழிக் காதல் மீதூர்ந்து நிலவுவதை நாம் காண முடிகிறது. தமிழ்மொழிமீது தீராக் காதலோடு நண்பர்கள் திகழ்வதை அயல்நாடுகளில் நான் பலமுறை கண்டு மகிழ்ந்தேன். அறிவியல், தொழிலியல்

வளர்ச்சியால் செல்வப் பெருக்கம் மிகுந்து, செழித்து வாழும் அயல் மக்களிடையே வாழும் நம் தமிழர்கள், தாம் கண்டு, கேட்டு, உற்றறிந்தவற்றைத் தமிழ் மக்கள் பெறவியலாமல் எவ்வாறு தடுமாறுகின்றனர் என்பதை ஆராய்ந்து தமிழுக்குக் கட்டுரைகளாக வழங்குவார்களானால், தமிழ் மொழி புதிய நலங்களையும், வளங்களையும், தகவல்களையும் பெறும். எதற்கெடுத்தாலும் வழிபட்டு வணங்கும் நமது நாட்டில், வழிபாட்டுணர்ச்சி மனத்தளவில் பண்பாட்டை வளர்க்காமல் போவதேன் என்பதை அயலக அறிஞர்கள்தாம் ஆய்ந்துணர வல்லவர்கள். பொருளியல் வாழ்வில் வறுமை அவலத்தில் அழுந்தித் தேம்புகின்றவர்களின் கலையும் மொழியும், இசையும் இலக்கியமும் சவலைப் பிள்ளைகளாகவே வருந்தும். டாக்டர் மகேசன் இராசநாதனின் எழுத்தார்வம், தொடர்ந்து பல நூல்களைப் படைக்கும் திறனை அவருக்கு வழங்கும் என்பதில் ஐயமில்லை.

கையடக்கமாக கலைநலம் வாய்ந்த நூல்களை ஒளிப்படங்களோடு வெளியிட்டு வரும் மணிமேகலை நிறுவனத்தையும் இரவி தமிழ்வாணன் அவர்களும் இந்நூலின் முயற்சிக்குத் துணை நின்றதையும் போற்றுகிறேன்.

*வாழ்க தமிழ்!*

*வளர்க மகேசன் இராசநாதன் தொண்டு!*

– டாக்டர் **ஔவை நடராசன்**

***(முன்னாள் துணைவேந்தர்)***

# பொருளடக்கம்

**தமிழும் தமிழரும்**

| | |
|---|---|
| தமிழர் உலகுக்கு அளித்த செல்வங்கள் | 3 |
| தமிழ் மணி | 8 |
| அருமைத் தமிழ் அழிந்து விடுமா? | 13 |
| தமிழ்க் கொலை – ஆங்கில மோகம் | 16 |
| இன்றைய தமிழர் | 17 |
| **பொதுக் கட்டுரைகள்** | |
| அன்பும், பாசமும் | 21 |
| சொல்லும் செயலும் | 23 |
| அறம் | 25 |
| நாவைக் காக்கும் பண்பு | 27 |
| பரத நாட்டியம் | 28 |
| தமிழிசை | 30 |
| காஞ்சிபுரம் | 32 |
| மாமல்லபுரம் | 37 |
| **தமிழிலக்கியம்** | |
| சங்கத் தமிழ் இலக்கியத்தின் மகிமை | 45 |
| திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு | 61 |
| இளங்கோ அடிகள் | 64 |
| புகழேந்தியின் புலமை | 68 |
| கம்பரின் கவித்திறன் | 72 |
| கொடை வள்ளல் குமணன் பெருமை | 75 |
| கலிங்கத்துப் பரணி | 77 |
| பாரதியார் பாட்டின்பம் | 79 |
| **இறையருள்** | |
| இறைவனின் மகிமை | 93 |
| பக்தி இலக்கியம் | 95 |
| சைவ சித்தாந்தம் | 101 |
| **உரை கவிதை** | |
| புது மொழிகள் | 109 |
| தமிழே! தமிழே! | 110 |
| பாரதியார் | 111 |
| இன்னுமோர் ஆத்திசூடி | 112 |

# தமிழும் தமிழரும்

# தமிழர் உலகுக்கு அளித்த செல்வங்கள்

தமிழர் உலகின் பூர்வ குடிகள். கல் தோன்றி மண் தோன்றாக் காலம் தொட்டுத் தமிழர் தரணியில் வாழ்ந்திருக்கிறார்கள். 2000 வருடங்களுக்கு முன்பாகவே ஐரோப்பியர் காட்டு மிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் தமிழர் நாகரிகமான வாழ்க்கையை நடத்தினார்கள். தமிழர் தமது சரித்திரத்தில் பல சாதனைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது உலகம் அறிந்த உண்மை – வெறும் புகழ்ச்சியில்லை! பிரித்தானிய கலைக் களஞ்சியத்தை (Encyclopaedia Britannica) எடுத்துப் பார்த்தீர்களானால், அது 'தமிழர்கள் தமது சரித்திரத்தில் மகத்தான செயல்களைச் சாதித்திருக்கிறார்கள்' என்று திட்டவட்டமாகச் சொல்கிறது. தமிழர் உலகுக்கு அளித்த செல்வங்களை ஆராய்வோம்.

## பரத நாட்டியம்:

தமிழ்நாட்டில் தோன்றிய பரதக் கலை உலகின் தலை சிறந்த கலைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பரதக் கலை கையைக் காலை அசைத்து ஆடும் வெள்ளையரின் நடனம் போன்றதல்ல. அது தெய்வீகமானது. பரதக் கலையை ஒழுங்குடனும், கட்டுப்பாடுடனும் பல வருடங்களாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றுத்தான் அரங்கேற்றம் செய்யவேண்டும். தமிழ்நாட்டில் தோன்றிய இந்தப் புனிதமான கலையைத் தமிழ் நடனம், தமிழ்க் கலை என்று சொல்ல நாம் ஏன் தயங்குகிறோம்? தென்னிந்திய நடனம் என்றுதான் கூறிக்கொள்கிறோம். இது வருந்தத்தக்க விடயம் அன்றோ? மற்ற இனங்களோ தமது சாதனைகளைப் பற்றிப் பெருமையோடு பேசிக் கொள்வார்கள். ஆனால் தாழ்வு மனப்பான்மை கொண்ட தமிழரோ அப்படியில்லை!

## கணிதக் கலை:

கணிதக் கலையை உலகுக்கு அளித்தவர் தமிழர் என்ற உண்மை தற்போது புலனாகிக் கொண்டு வருகிறது. கிரேக்கருடனும், உரோமருடனும் வர்த்தகம் செய்த ஆதி தமிழர் கணிதத்தில் விற்பன்னராக இருந்தனர். 1/320, 1/640, 1/1280 போன்ற பல பின்னங்களைத் தமிழர் 2000 ஆண்டுகளுக்கு முன்பே உபயோகித்தனர் என்ற உண்மை, தமிழ் வரலாற்றிலிருந்து தெளிவாகிறது. உதாரணமாக 1/320 என்ற பின்னம் 'இம்மி' என அழைக்கப்பட்டது.

## தமிழ் மொழி :

'காலத்தால் அழியாத மொழி', 'ஞாலத்தில் ஒப்பற்ற மொழி', 'ஆழத்தில் அறிவாழத்தில் சிறந்த மொழி' எமது தமிழ் மொழி! பண்டைய மொழிகளான லத்தீனும், சமஸ்கிருதமும் குலைந்துபோகத் தமிழ் மொழி மட்டும் இன்னும் வீறுநடை போடுவது கண்டு மகிழ்ச்சி ததும்புகிறது அல்லவா? மேலும் தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி (Classical Language) என்பதும் குறிப்பிடத்தக்கது! உலகில் பல்லாயிரக்கணக்கான மொழிகளில் பத்துக்கும் குறைந்த மொழிகளே 'மேம்பாடு அடைந்த மொழிகள்' என்பதை உணரும்போது தமிழின் பெருமை விளங்குகிறது. மேலும் மற்ற திராவிட மொழிகள் யாவும் சமஸ்கிருதத்தின் சேர்க்கையால் தமது தன்மையை இழந்துவிட்டபோது, தமிழ் மட்டும் தனித்தன்மையை இழக்காது இருப்பதும் சிறப்பான விடயமன்றோ?

## தமிழ் இலக்கியம் :

உலகின் தலைசிறந்த இலக்கியங்கள் தமிழில் காணப் படுகின்றன என்பது மறுக்க முடியாத, மறைக்க முடியாத உண்மையாகும். திருக்குறளைப் பற்றி அதிகம் கூறவேண்டிய தில்லை. திருக்குறளைப் போன்ற அறிவு நூல் உலகில் வேறெந்த மொழியிலும் கிடையாது என ஜெர்மன் தத்துவஞானி ஆல்பெர்ட்

சுவெட்சர் கூறியிருக்கிறார். ஆனால் திருக்குறளை உலகம் அறியாதிருக்கிறது. ஏன்? தமிழராகிய நாம் எம்மிடம் இருக்கும் அரிய கருவூலத்தை மதிப்பதில்லை. உலகம் போற்றும் திருக்குறளை வைத்துக் கொண்டு அதன் அருமையை அறியாது அவலம் அடைகிறோம். ஒப்பற்ற தமிழ்ப் புலவர்களாகிய திருவள்ளுவர், கம்பர், இளங்கோ ஆகியோர் மட்டும் இங்கிலாந்திலே பிறந்திருந்தால் அவர்கள் உலகப் பெருமையும் கீர்த்தியும் பெற்றிருப்பார்கள் அல்லவா?

திருக்குறள் மட்டுமா? தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், நாலடியார், திருமந்திரம் போன்றவை உலக அறிஞர்களால் போற்றப்பட்டிருக்கின்றன; இதைவிடப் பலவிதமான, நூற்றுக்கணக்கான நூல்கள் தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் அறிவுச் சுடரொளியை வீசிக் கொண்டிருக்கின்றன.

சங்க இலக்கியம் உலகின் தலைசிறந்த இலக்கியங்களில் ஒன்றாக மேலை நாட்டு அறிஞர்களால் கருதப்படுகிறது. ஐந்து அல்லது ஆறு தலைமுறையாகச் சங்கப் புலவர்கள் இயற்றிய இலக்கியங்களுக்கு ஒப்பாக அனைத்து இந்திய மொழிகளின் இலக்கியங்களில் எதுவுமே இல்லை. பக்தி இலக்கியம், உள்ளத்தை உருகவைக்கும் இலக்கியம். நாயன்மார்களும், ஆழ்வார்களும் எலும்பையும் உருக்கக்கூடிய பாடல்களைப் பாடினார்கள் என மேலை நாட்டு அறிஞர்கள் கூறுகின்றனர். தமிழ் இலக்கியம் ஒப்பற்ற இலக்கியம் என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா?

### கர்நாடக இசை:

கர்நாடக இசை தமிழ்நாட்டில்தான் பிறந்தது. மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டிருந்த தமிழ்நாடு அந்நாளில்

கரைநாடு என அழைக்கப்பட்டது. கரைநாட்டு இசைதான் கர்நாடக இசை என மருவிப் பெயர்ந்தது. கர்நாடக இசையை உலகுக்கு அளித்த தமிழ்நாட்டில்தான் இசையின் மும்மூர்த்திகளான தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துச் சுவாமி தீட்சதர் பிறந்து வளர்ந்தனர் என்பதை நாம் மறக்க லாகாது.

### ஒன்றே குலம் ஒருவனே தேவன்:

இந்த மாபெரும் தத்துவத்தை உலகுக்கு அளித்தவர் தமிழர்கள். 2000 ஆண்டுகளுக்கு முன்பே பூங்குன்றனார் என்னும் பெரும் புலவர் பின்வருமாறு பாடினார்.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' இத்தகைய சிறந்த தத்துவத்தை உலகுக்கு அளித்த தமிழர் இன்று சாதி, சமயம், குலம், கோத்திரம் எனப் பிரிந்து அல்லல்படுவதைக் காண மனம் குமுறுகிறது அல்லவா?

### கப்பலோட்டும் கலை:

கப்பலோட்டும் கலையையும், கப்பல் கட்டும் கலையையும் உலகுக்கு எடுத்துக்காட்டியவர்கள் தமிழர் அன்றோ? இயேசு பிறப்பதற்குப் பல காலத்துக்கு முன்பே தமிழர்கள் கப்பலோட்டிக் கிரேக்கர், ரோமர், அரேபியர் ஆகியோருடன் வாணிபம் நடத்தினர். பருவப் பெயர்ச்சிக் காற்றுகளின் தன்மையை உணர்ந்த தமிழர் காற்றின் திசையை அறிந்து உலகின் பல பாகங்களுக்குச் சென்றனர். கி.மு. எட்டாம் நூற்றாண்டில் சால்தியருடன் தமிழர் வணிகம் நடத்தியதாக வரலாறு கூறுகிறது.

### சிற்பக் கலையும், கட்டடக் கலையும் :

தமிழரின் சிற்பக் கலையும், கட்டடக் கலையும் ஒப்பற்றவை என்ற உண்மையை உலகம் உணர்ந்திருக்கிறது. ஆனால் தமிழர் உணராது இருக்கின்றனர். தமிழ்நாட்டில்

தஞ்சாவூர், மதுரை, திருச்சி, காஞ்சிபுரம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள பெருங்கோயில்களின் கட்டடக் கலை கண்டு வியக்காத மேலை நாட்டு நிபுணர்கள் கிடையாது.

இந்தியாவில் சில இடங்களை மட்டுமே 'உலக மரபுரிமை அறக்கட்டளை' (World Heritage Trust) என ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றில் மாமல்லபுரமும், தஞ்சாவூர்க் கோயிலும் சேர்க்கப் பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க விடயம் அன்றோ? இந்தியக்கலை (Indian Art) என்ற நூலை எழுதிய நிபுணர் ரோய் கிரேவன் (Roy Graven) தஞ்சாவூர்க் கோயிலைத் 'தமிழர் கட்டடக் கலையின் பிரமாண்டமான ஒப்பற்ற எடுத்துக்காட்டு' எனப் புகழ் பாடியிருக்கிறார்.

சிற்பக் கலையில் தமிழர் உலகுக்கு அளித்த பெருஞ் செல்வம் வெண்கல(Bronze)த்தால் செய்யப்பட்ட செப்புப் படிமங்கள் ஆகும். இந்த அரும் பெரும் சிற்பங்கள் உலகில் உள்ள பல கண்காட்சிச் சாலைகளில் காணப்படுகின்றன. அவற்றின் வடிவத்தையும் தோற்றத்தையும் கண்டு வியக்காத சிற்ப நிபுணர்களே கிடையாது. 2ஆம் நூற்றாண்டு தொடக்கம் முதல் 11ஆம் நூற்றாண்டு வரையும் சோழ நாட்டில் செதுக்கப் பட்ட இந்த சிற்பங்களில் நடராஜர் சிலையே மிகவும் புகழ் பெற்றது. நடராஜரின் நடனத்தில் உள்ள அரிய தத்துவத்தை எவ்வாறு எடுத்துக் கூறுவது?

**சாகாக் கலை:**


சாகாக் கலையை உலகுக்கு அளித்தவர்கள் தமிழரே. சித்தர்கள் என்னும் ஞானிகள் சாகாக் கலையில் தேர்ச்சி பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்ந்தார்கள். இன்று அமெரிக்கர் சாகாமல் இருப்பதற்கு எத்தனையோ முயற்சிகள் எடுக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் அந்தக் கலை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது என்பதுதான் உண்மை.

தமிழர்கள் அரும் பெரும் செயல்களைச் சாதித்திருக்கிறார்கள். சோழர் காலத்தில் பெரும் எழுச்சியை அடைந்து, மாபெரும் பேரரசைத் தோற்றுவித்து தமது கலையையும், பண்பாட்டையும் தென்கிழக்காசியா முழுவதும் பரப்பினார்கள். ஆனால் கடந்த 600 வருடங்களாக அந்நியரின் வருகையால் மிகவும் தாழ்மையை அடைந்து விட்டார்கள். இந்த நிலையிலிருந்து மீண்டும் எழுச்சி பெறவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக!

## தமிழ் மணி

வெலிங்டன் அருங்காட்சிச் சாலையில் காணப்படும் 'தமிழ் மணி' 1836ல் வில்லியம் கொலன்செ (William Colenso) என்பவரால் நியூசிலாந்தின் வடக்குப் பகுதியில் வங்கரே (Wangarei) என்ற நகருக்கு 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. 'மயோரி' இன மக்கள் வாழும் இக்கிராமத்திற்கு எந்த ஒரு ஐரோப்பியரும் அந்தக் காலங்களில் விஜயம் செய்திருக்கவில்லை என்று திரு. கொலன்செ கருத்துத் தெரிவித்துள்ளார். சமைக்கும் பாத்திரமாகத் தமிழ் மணியை உபயோகித்த 'மயோரி' மக்கள், அந்த மணி பல வருடங்களுக்கு முன் சூறாவளியால் தூக்கி எறியப்பட்ட ஒரு பெரிய மரத்தில் கண்டெடுக்கப்பட்டது எனக் கூறினார்கள். 'புரிரி' (Puriri) என அழைக்கப்படும் அந்த மரத்தில் இந்த 'மணி' பல்லாண்டுக் காலம் மறைந்து கிடந்ததாகக் கருதப்படுகிறது. சமைக்கும் பாத்திரமாகப் பயன்பட்டிருப்பதால் மணியின் விளிம்பு வெடித்துக் காணப்படுகிறது.

தமிழ் மணி நியூசிலாந்தை எவ்வாறு வந்தடைந்தது என்பது இன்னமும் ஒரு புதிராகவே உள்ளது. தமிழ் மணியில் பின்வரும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.




கப்பலின் உரிமையாளர் யார் என்பதற்குப் பல விளக்கங்கள் இருக்கின்றன. இடதுபக்கம் தரப்பட்ட படம் தமிழ் மணியில் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களைக் காட்டுகிறது. எழுத்துப் பொறிப்புக்கு மேலும் கீழும் விளிம்புகள் இருப்பதால் அது இன்னமும் புதுமை மாறா நிலையில் இருக்கிறது. எழுத்துப் பொறிப்பு, மணியின் சுற்றளவில் பாதிக்கு மேல் செல்லவில்லை. எழுத்துக்கள் மணியின் மேற்பரப்பில் இருந்து வெளியே நீட்டிக்கொண்டிருக்கின்றன. மணியைச் செய்தபின் எழுத்துக்களைப் பொறித்திருக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது.

மொத்தமாக 22 எழுத்துக்கள் கொண்ட 6 சொற்கள் இருக்கின்றன. முதல் பத்து எழுத்துக்கள் கப்பலுடைய உரிமையாளரின் பெயரைக் குறிப்பன. நான்கு மெய்யெழுத்துக்களில் புள்ளிகள் இல்லாமை, அவை பழங்கால எழுத்து வழக்கு என்பதைக் காட்டுகின்றது.

பின்வரும் நிபுணர்கள் தமிழ் மணியில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களை மொழிபெயர்க்க உதவினார்கள்.

1. திரு. யேசுதாஸ் – ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி, நாகர்கோயில்.
2. திரு. பன்னீர்செல்வம் – ஸ்காண்டிநேவிய ஆசிய ஆராய்ச்சி நிறுவனம்.

1642ல் 'ஏபல் டாஸ்மன்' (Abel Tasman) என்பவரே நியூசிலாந்தைக் கண்டுபிடித்த முதல் ஐரோப்பியர் என வரலாறு கூறுகிறது. ஆனால் தமிழ் மணியைப் போன்ற சான்றுகள், நியூசிலாந்து 1642க்கு முன்னரே கண்டுபிடிக்கப்பட்டது எனச் சில வரலாற்று ஆசிரியர்களைக் கூறச்செய்திருக்கிறது. தமிழர்கள் பழங்காலத்தில் கப்பலோட்டும் துறையில் சிறந்து விளங்கி உலகின் பல பாகங்களுக்கும் சென்றபோது நியூசிலாந்து என்று தற்போது அழைக்கப்படும் இந்த நாட்டிற்கும் வந்தார்கள் என்றோர் கருத்து கூறுகிறது. தமிழர்கள் மாபெரும் கடலோடிகள் என்பது சரித்திரம் கூறும் உண்மை. கிறிஸ்து பிறப்பதற்குப் பல காலத்திற்கு முன்னரேயே தமிழர்கள், கிரேக்கர், உரோமருடன் வாணிபம் செய்தார்கள். மேலும் பல நூற்றாண்டு காலம் அரேபியருடனும், சீனருடனும், தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனும் வாணிபம் செய்தார்கள் என்பது பலர் அறிந்த உண்மை. தென்னிந்தியாவில் இருந்த தமிழ் அரசுகள் 15ஆம் நூற்றாண்டில் அழிந்தபோது தமிழர் வாணிபமும் முடிவடைந்தது.


மணியில் காணப்படும் எழுத்துப் பொறிப்பு, கப்பலின் உரிமையாளர் ஓர் இஸ்லாமியத் தமிழர் என்பதை எடுத்துக் காட்டுகிறது. அவர், தமிழ்நாட்டின் கிழக்குக் கரையில் உள்ள நாகப்பட்டினத்தின் பிரசித்தி பெற்ற வாணிபக் குடும்பங்களில் ஒன்றைச் சார்ந்தவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. தமிழ் மணியைத் தவிர தமிழர் நியூசிலாந்துக்கு வந்ததற்கான வேறு சான்றுகள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே தமிழ் மணி பற்றிய பிரச்சனை தனித்துவமான ஒன்றாகவும், இதுவரை தீர்க்க முடியாததாகவும் இருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சேர்த்து நோக்கப்பட வேண்டிய இன்னோர் சுவையான விடயம் பிஜி தீவுகளில் உண்டு. அங்குக் கண்டுபிடிக்கப்பட்ட பழங்காலத்துக் கற்பாறைச் செதுக்கு

வேலைகளில் உள்ள எழுத்துக்கள் பழைய காலத்து இந்திய எழுத்துக்கள் எனக் கருதப்படுகின்றன. ஆனால் அவைகள் இன்னமும் அடையாளம் கண்டுபிடிக்கப்படாது இருக்கின்றன. மேலும் அக்கற்பாறைச் செதுக்குகள் எப்படித் தோன்றின என்பதற்கும் விளக்கம் தெரியவில்லை.






2) முகைய்யதீன் வக்குசு
2) உடைய கபல் உடைய மணி

# அருமைத் தமிழ் அழிந்துவிடுமா?

**எ**மது தமிழ் மொழி மிகவும் தொன்மை வாய்ந்தது. உலகின் மிகப் பழைய மொழிகளில் தமிழும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. காலத்தாலும், வெள்ளத்தாலும், நெருப்பாலும், அன்னியர் ஆதிக்கத்தாலும் அழியாத எமது தமிழ் மொழிக்கு இன்று பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

ஆபத்தா? தமிழ் மொழிக்கா? ஆமாம் – தமிழ் மொழிக்கு ஆபத்து தமிழரின் ஆங்கில மோகத்தால் ஏற்பட்டிருக்கிறது. தமிழுடன் அவசியமில்லாமல், அளவுக்கதிகமாக ஆங்கிலத்தைக் கலந்து பேசும் வழக்கமும், எழுதும் வழக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. அதுவும் தமிழ்நாட்டில் இந்த நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. இந்த நிலை நீடிக்குமானால், நாம் அறிந்த சிறப்பு வாய்ந்த தமிழ் அழிந்து ஒரு குருவிக் கூச்சலாக மாறிவிடும்.

**தமிழை அழியவிடாதீர்கள்!**
**தமிழின் புனிதத் தன்மையைக் காப்பாற்றுங்கள்!**
**தமிழை ஆங்கிலத் தமிழாக்காதீர்கள்!**

வெள்ளத்தாலும், நெருப்பாலும், காலத்தாலும், அன்னியராலும் அழியாத எமது தமிழ் மொழி இன்று தமிழராகிய எமது மந்த செய்கையால் குலையப் போகும் நிலையை அடைந்துவிட்டது. இதற்குக் காரணம் ஆங்கிலச் சொற்களை நேரடியாகத் தமிழில் எழுதும் செய்கைதான்! அழகான தமிழ்ச் சொற்கள் இருக்க ஆங்கிலச் சொற்களை ஏன் தமிழில் எழுத வேண்டும்? இந்த வழக்கம் தமிழ்நாட்டில் அதிகரித்துக் கொண்டே வருகிறது. தமிழ்ச் சஞ்சிகைகளை எடுத்துப் பார்த்தால் ஒவ்வொரு வசனத்திலும் 30–40 வீதத்துக்கு மேலாக ஆங்கிலச் சொற்கள் உபயோகிக்கப்படுவதைக் காணலாம்.

இந்த நிலைமை நீடிக்குமானால் நாம் அறிந்த தமிழ் அழிந்துவிடும். நாளடைவில் ஆங்கிலச் சொற்கள் கூடிய அளவு உபயோகிக்கப்படும். தமிழ் அழிந்து ஆங்கிலத் தமிழ் ஆகிவிடும். 2500 வருடங்களுக்கு மேலாக இந்த உலகில் வீறு நடை போட்ட எமது புனிதத் தமிழ் அழிவதா? தமிழைக் காப்பாற்றுவது தமிழராகிய எமது தலையாய கடமை அல்லவா? சமஸ் கிருதத்தையும், இலத்தீனையும் போன்ற பண்டைய மொழிகளின் தலைவிதி தமிழுக்கும் வரவேண்டுமா? மொழி அழிந்தால் இனம் அழிந்துவிடும்! தமிழ் மொழி அழிந்தால் தமிழ் இனம் அழிந்துவிடும் – என்ற உண்மையை உணர்ந்து தமிழர் யாவரும் செயலாற்றுங்கள்! ஆவன செய்யுங்கள்!

தமிழ் ஆங்கிலத் தமிழாக மாறிக் கொண்டு வருவதை எடுத்துக்காட்ட ஒரு உதாரணத்தை ஆராய்வோம்: ''நண்பர் ஒருவர் கார் ஆக்ஸிடெண்டில் சிக்கிக் கோமா நிலையில் சீரியஸாகி ஹாஸ்பிடல் பெட்டில் கிடக்கிறார்.''

இந்த வசனத்தில், 11 சொற்களில், 6 சொற்கள் ஆங்கிலச் சொற்கள் என்பது வெள்ளிடை மலை (car, accident, coma, serious, hospital, bed). இந்த 6 சொற்களுக்கும் தமிழில் அழகான சொற்கள் இருக்கின்றன. அப்படியிருந்தும் தேவையில்லாமல் ஆங்கிலச் சொற்களை உபயோகிக்கிறோம். எழுதும்போது தேவையின்றி ஆங்கிலத்தை உபயோகிப்பது தமிழை மறக்கச் செய்துவிடும்.

தமிழர்கள் தமது மொழியை அவமதிக்கும் விதம் பெரும் மனவேதனையை அளிக்கிறது அல்லவா? கையில் திரவியம் போன்ற மொழியை வைத்துக் கொண்டு அதன் அருமையையோ, பெருமையையோ அறியாமல் அதை அழிக்கும் இன்றைய தமிழரை நினைத்தால் உள்ளம் கொதிக்கிறது அல்லவா? ஆங்கில மாதின் வலையில் சிக்கித்

தமிழன்னையை உதாசீனம் செய்யும் தமிழரை என்னவென்று விவரிப்பது?

ஆங்கிலம் உலக மொழி. அதைப் படித்துத் தேர்ச்சி அடைவதில் தவறில்லை. ஆனால் தமிழை அழிப்பது மாபெரும் தவறல்லவா? தமிழ் ஆங்கிலத்துக்கு சற்றேனும் குறைந்தது அல்ல என்பதைத் தமிழர் உணர்ந்து செயலாற்ற வேண்டும். இனிமேலாவது தமிழராகிய நாம் எமது தவற்றை உணர்ந்து தமிழுக்குப் புத்துயிர் அளிப்போமாக!

**தமிழா, தமிழா, உன் உறக்கத்திலிருந்து விழித்திடு...**
**அமிழ்தினும் இனிய தமிழை அழியவிடாது காத்திடு...**
**ஆங்கில மாதின் மேல் கொண்ட மோகத்தை விட்டுவிடு...**
**மங்காத புகழுடைய எம்மொழியைப் போற்றிடு...**

குறிப்பு : பின்வரும் உதாரணங்கள் தமிழில் அதிகமாக ஆங்கிலம் கலந்து எழுதப்படுவதை எடுத்துக்காட்டுகின்றன.

1. காஷியரிடமிருந்து (cashier) காஷ் (Cash) பெறும் இடம்.

2. வாட்டர் (water) அந்த டேபிளில் (table) இருக்கிறது.

3. ஹாஸ்பிட்டலில் (hospital) நர்ஸ் (nurse) பேஷண்டுக்கு (patient) இஞ்ஜெக்ஷன் (injection) போட்டார்.

4. கிரிக்கெட் பிளே (play) பண்ணும்போது, பால் (ball) அடுத்த காம்பவுண்டுக்குப் (compound) போய்விட்டது.

5. சம்மரில் (summer) ஏ.சி. (A.C.) இல்லாமல் எனக்கு மேனேஜ் (manage) பண்ணமுடியாது.

6. ஹவ் டு யூ டு? (How do you do?)

# தமிழ்க் கொலை – ஆங்கில மோகம்

இன்று தமிழர்கள் பலர், தமது பெயர்களை எழுதும் போது ஆங்கில எழுத்துகளை நேரடியாக மொழி பெயர்த்து உபயோகிக்கிறார்கள். பின்வரும் உதாரணங்கள் இந்தத் தமிழ்க் கொலையை எடுத்துக் காட்டுகின்றன.

| பெயர் | எழுதும் விதம் | சரியான முறை |
|---|---|---|
| மாறன் சுந்தரன் | எம்.சுந்தரன் | மா.சுந்தரன் |
| சாமி கனகலிங்கம் | எஸ்.கனகலிங்கம் | சா.கனகலிங்கம் |
| நாகன் வைரவநாதன் | என்.வைரவநாதன் | நா.வைரவநாதன் |

(இந்தப் பெயர்கள் யாவும் கற்பனையே. யாரையும் குறிப்பன அல்ல)

இந்தத் தமிழ்க் கொலையை உடன் நிறுத்த வேண்டும். இல்லாவிடில் இது நடைமுறை வழக்குக்கு வந்துவிடும். எம் (M), என் (N), எஸ் (S) போன்ற எழுத்துகள் தமிழில் இல்லை. ஆங்கிலத்திலிருந்து எழுத்துகளைக் கடன் வாங்க வேண்டிய நிலையில் தமிழ் இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்தத் தமிழ்க் கொலை தமிழை நிந்தனை செய்வதாகும். எனவே இதை நாம் உடனே நிறுத்த வேண்டும்.

குறிப்பு : சிலர் ஒரு படி கூடி, தமது பெயர்களுக்கு முன்னால் ஆங்கில எழுத்துகளை அப்படியே உபயோகிக் கிறார்கள். உதாரணம் – M.சுந்தரன், S.கனகலிலிங்கம். இதுவும் மிகவும் வருந்தத்தக்க செயல் அல்லவா?

தமிழை ஒழுங்காக எழுதித் தமிழ்க் கொலையை உடன் நிறுத்துங்கள். தமிழை அழிக்காதீர்கள்.

# இன்றைய தமிழர்

**க**ல் தோன்றி மண் தோன்றாக் காலம் தொட்டே தமிழினம் இவ்வுலகில் வாழ்ந்து வந்திருக்கிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, வீரம், மானம் ஆகிய குணங்களில் சிறந்து விளங்கிய தமிழினம் உலகில் ஒப்பற்ற நிலையை அடைந்து பல இனங்களுக்கு முன்னோடியாக விளங்கியது.

தமிழரின் பொற்காலமான இராஜராஜன், இராஜேந்திரன் காலத்தில் தமிழர்களின் செல்வாக்கும், ஆதிக்கமும் கிழக்காசியா முழுவதும் பரந்திருந்தது. ஆனால் இன்று தமிழினத்தின் நிலை என்ன? தமிழர்கள் இன்று மிகவும் சீரழிந்த நிலையை அடைந்து விட்டனர். இதற்குக் காரணம் என்ன? தமிழர்கள் தமது பாரம்பரியத்தையும், சரித்திரத்தையும், பழம்பெருமை யையும் மறந்ததுதான் இந்த நிலைக்குக் காரணம்.

***இன்றைய தமிழர் பலருக்கு...***

ஆங்கிலம் தெரியும். தமிழ் தெரியாது. (ஆங்கிலச் சொற்கள் பலவற்றைச் சேர்த்துத் தமிழைக் கதைத்துத் தமிழைக் கொலை செய்கிறார்கள்.)

ஆங்கிலப் பண்பு தெரியும். தமிழ்ப் பண்பு தெரியாது.

இராமாயணம் தெரியும். சிலப்பதிகாரம் தெரியாது.

மகாபாரதம் தெரியும். மணிமேகலை தெரியாது.

பகவத்கீதை தெரியும். திருக்குறள் தெரியாது.

ஷேக்ஸ்பியரைத் தெரியும். இளங்கோவடிகளைத் தெரியாது.

விவேகானந்தரைத் தெரியும். இராமலிங்கரைத் தெரியாது.

சத்ய சாயிபாபாவைத் தெரியும். இரமண மகரிஷியைத் தெரியாது.

ஐன்ஸ்டைனைத் தெரியும். இராமானுஜத்தைத் தெரியாது.

சொக்ரதீசைத் தெரியும். இராதாகிருஷ்ணனைத் தெரியாது.

நியூட்டனைத் தெரியும். சந்திரசேகர ராமனைத் தெரியாது. ஜூலியஸ் சீசரைத் தெரியும். இராஜேந்திர சோழனைத் தெரியாது.

இப்படி அடுக்கடுக்காகக் கூறிக்கொண்டே போகலாம்.

**தமது மொழியைப் பேசக் கூச்சப்படும் இனம் தமிழினம் ஒன்றுதான்!**

**தமது இனத்தின் சாதனைகளை அறியாத இனம் தமிழினம் ஒன்றுதான்!**

**தமது இனத்தின் சாதனைகளைப் போற்றாத இனம் தமிழினம்தான்!**

இந்த அவல நிலை நீடிக்கும் வரை, தமிழர்கள் தமது பெருமையை உணர்ந்து செயலாற்றும் வரை, தமிழினத்துக்கு விமோசனம் கிடைக்காது என்பது வெள்ளிடை மலை.



# பொதுக் கட்டுரைகள்

# அன்பும் பாசமும்

**அன்பு அளவிலா ஆனந்தத்தை அளிக்கும்!**
**பாசம் தாங்கொணாத் துயரத்தைத் தரும்!**

இது அநுபவத்தால் அறிஞர்கள் கண்டறிந்த பெரும் உண்மை. நாம் உலகில் பிறந்து சகோதர, சகோதரிகளுடன் வாழ்கிறோம். பாசத்தால் பெற்றோர்கள் எம்மைக் கண்ணும், கருத்துமாக வளர்த்து எத்தனையோ சேவைகள் புரிகிறார்கள். நாம் எமது பெற்றோர்களிடமும், சகோதரர்களுடனும் அளவற்ற பாசத்தை வைக்கிறோம். திருமணம் புரிந்த பிறகு கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகியோருடன் அளவு கடந்த பாசத்தை வைக்கிறோம். இவ்வாறாகப் பாசம் என்னும் கயிறு எம்மை வாழ்வுடன் பிணைக்கிறது. அந்தப் பிணைப்பால் எவ்வளவு இன்பம் பெறுகிறோமோ, அதேபோல் பெரும் துன்பத்தையும் அடைகிறோம். இதனால்தான் ஞானிகள், காலம் போகப் போகப் பாசத்தைக் குறைத்து அன்பை வளர்க்க வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார்கள்.

அன்புதான் தெய்வம் என்றும், தெய்வத்துக்கும் அன்புக்கும் வேறுபாடு இல்லை என்றும் பெரும் ஞானியான திருமூலர் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார். அவர் பாடிய கருத்து நிறைந்த பாட்டைப் பார்ப்போம் –

**"அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்**
**அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"**

அன்பே சிவம் என்பதை உணர்ந்தவர்கள் சிலரே. அவர்களே ஞானிகள். அவர்களே கடவுள் தன்மை பெற்றவர்கள் என்பது இந்த பாட்டின் கருத்து.

அன்புக்கும், பாசத்துக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்ப்போம். அன்பிலே சுயநலம் இல்லை. பாசத்திலே சுயநலம் கலந்திருக்கிறது. மேலும் பாசம் உற்றார், உறவினர் என்னும் குறுகிய எல்லைகளுக்குள் இருக்கிறது. அன்போ பரந்த கடலென எங்கும் வியாபித்திருக்கிறது. உலகிலே அன்பு தழைத்து, அருள் பரிணமித்தால் ஆனந்தம் பெருகும் என்பது வெள்ளிடைமலை. ஆனால் பாசத்தை வெல்வது அரிது. வாழ்நாள் முழுவதும் பாசக்கயிறு எம்மைப் பிணைத்துத் துன்பத்தை அளிக்கிறது. இறைவனை அடைவதற்கு ஒரே வழி பாசத்தை வெல்வதுதான் எனத் தமிழ் மறைகள் கூறுகின்றன. பதி அணுகிற் பசு பாச நில்லாவே – என்பது திருமூலர் கூற்று. இறைவன் (பதி) எம்மை (பசுவை) அணுகினால் பாசம் மறைந்துவிடும் என்பது இதன் கருத்தாகும்.

சங்கக் காலப் புலவரான பூங்குன்றனார், ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற மாபெரும் உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறினார். அவர் கூற்றின் கருத்து – சொந்த ஊர் என்று ஒன்றும் இல்லை. எல்லாம் நம் ஊரே. உறவினர் என்று சிலர் மட்டும் இல்லை. உலக மக்கள் எல்லோரும் உறவினரே – என்பது. இவ்வாறு ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்ற மாபெரும் தத்துவத்தை வலியுறுத்தினார் பூங்குன்றனார். உற்றார், உறவினர், சுற்றத்தார், ஊரார் என்ற குறுகிய எல்லைக்குள் இருக்காமல், ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்ற பரந்த மனப்பான்மையை மேற்கொண்டால் உலகில் அமைதியும், சாந்தமும் நிலவும் என்பது தெள்ளிதிற் புலனாகிறதல்லவா?



# சொல்லும் செயலும்

***"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்***
***சொல்லிய வண்ணம் செயல்."***

– என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருவாக்கு. சொல்லுக்கும், செயலுக்கும் உள்ள பெரும் வித்தியாசத்தை இந்தக் குறள் தெள்ளெனத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. எளிதாகச் சொல்லிவிடலாம், ஆனால் செய்வது அரிது என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மை. 'சொல்கிறவனுக்கு வாய்ச் சொல், செய்கிறவனுக்குத் தலைச் சுமை' என்ற பழமொழி சொல்லுக்கும், செயலுக்கும் உள்ள வித்தியாசத்தை மேலும் அழகாக எடுத்துக் கூறுகிறது.

இப்படியாகச் சொல்லுக்கும், செயலுக்கும் உள்ள பெரும் வித்தியாசம் தெளிவாகத் தெரிந்தும், நாம் சொற்களைக் குறைத்துக் கொள்வதில்லை. மக்களிடையே வாய்ச் சொல் வீரர்கள் பலர் இருப்பது வெள்ளிடை மலை. கூட்டங்கள், மகாநாடுகள், அரங்கங்கள் எனப் பலவற்றை வைத்து உலகெங்கும் வாய்ச்சொல் மழை பொழிகிறது. முக்கியமாக உலக அரசியல்வாதிகளில் வாய்ச்சொல் வீரர்கள் பலர் இருப்பது நாமெல்லோரும் அனுபவத்தால் கண்டறிந்த உண்மை. அரசியல்வாதிகள் கூட்டங்களில் மணிக்கணக்கில் பேசி எல்லோருடைய காலத்தையும், நேரத்தையும் வீணாக்கு கிறார்கள். ஆனால் கூட்டம் முடிந்த பின் தாம் சொல்லியதை மறந்து விடுகிறார்கள். அதனால் ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடாமல் இருக்கிறார்கள். இதனால்தான் உலக நாடுகள் பலவற்றில் பொதுமக்கள் அத்தியாவசிய அடிப்படைத் தேவைகள் இன்றி வாழ்கிறார்கள் அல்லவா? இதை நினைக்கும்போது மகாகவி பாரதியாரின் அருமையான பாட்டிலுள்ள பின்வரும் அடிகள் நினைவுக்கு வருகிறதல்லவா?

***"கூட்டத்தில் கூடி நின்று
கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடீ – கிளியே
நாளில் மறப்பாரடீ."***

மூதாட்டி அவ்வையார் எழுதிய ஒரு பாட்டிலே, "சொல்லாமல் செய்பவர் பெரியோர் என்றும், சொல்லிச் செய்வோர் சிறியோர்" என்றும், "சொல்லியும் செய்யாதவர் கயவர்" என்றும் கூறுகிறார். பூவாமல் காய்க்கும் பலாவைப் பெரியோருக்கும், பூத்துக் காய்க்கும் மாவைச் சிறியோருக்கும், பூத்தும் காய்க்காத பாதிரியைக் கயவருக்கும் ஒப்பிடுகிறார். இது ஒரு அழகான உவமான உவமேயம் அல்லவா?

பாட்டைப் பாருங்கள்:

***"சொல்லாமலே பெரியர் சொல்லிச் செய்வர் சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே – நல்ல
குலமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடில்
பலா மாவைப் பாதிரியைப் பார்."***

எனவே வாய்ச் சொல்லிலே ஒரு பயனுமில்லை என்பதை உணர்கிறோம். ஆதலால் நாமெல்லோரும் வாய்ச் சொல்லைக் குறைத்து ஆக்கம் நிறைந்த செயல்களில் ஈடுபடுவோம். வாய்ச் சொல் வீரராக இருக்காமல் செயல் வீரராக இருக்க உறுதி பூணுவோம்.



# அறம்

அறம் என்னும் மகத்துவம் வாய்ந்த மூன்று எழுத்துச் சொல், தமிழ் மொழியில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அந்த மூன்று எழுத்துகளில்தான் எவ்வளவு கருத்து பொதிந்திருக்கிறது? அறம் என்னும் சொல் மிகவும் தொன்மையும், உண்மையும் வாய்ந்தது என்று கூறுவது மிகையாகாது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே, தெய்வப்புலவர் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளின் மூன்று பாகங்களில், அறம் ஒரு பாகமாக இருப்பது குறிப்பிடத் தக்கது அல்லவா? அறத்தைப் பற்றி இக்கட்டுரையில் ஆராய்வோம்.

அறம் என்னும் சொல்லின் கருத்தாவது, குடும்ப வாழ்வும், பொது வாழ்வும் சீராக இயங்க ஒருவர் கடைப் பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் என்பதாகும். எனவே அறம் என்பது பல ஒழுக்க நெறிகளையும், நற்குணங்களையும் குறிக்கிறது. திருக்குறளை ஆராய்ந்தால் அறமானது பின்வரும் பல விடயங்களை உள்ளடக்கியிருக்கிறது:–

அன்பு, அருள், கொடை, விருந்தோம்பல், இனிய வாக்கு, நன்றி, அடக்கம், ஒழுக்கம், கடமை, கற்பு, அழுக்காறாமை, புறங்கூறாமை, பெருந்தன்மை, வெகுளாமை, வாய்மை, இன்னா செய்யாமை – ஆகியன.

இதைவிட இல்லறம், துறவறம், மக்கட்பேறு போன்ற விடயங்களும் அறத்துப் பாலில் அடங்கியிருக்கின்றன. எனவே அறம் என்னும் சொல்லுக்கு கடல் அளவு கருத்து இருப்பது தெரிய வருகின்றது.

அருந்தமிழ்க் காப்பியமான மணிமேகலை அறத்தைப் பற்றி அழகாக எடுத்துரைக்கிறது. சீத்தலைச் சாத்தனார் அறத்தைப் பற்றிப் பாடிய கவிதைகளை ஆராய்வோம்.

துறவறம் பூண்ட மணிமேகலை இந்த உலகில் உயிர்களுக்கு எல்லாம் உணவும், உடையும், உறைவிடமும் கொடுப்பதுதான் அறம் என வலியுறுத்திக் கூறுகிறாள்.

> **"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்**
> **மறவாது இது கேள்**
> **உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
> **கண்ட தில்லை."**

மேலும் அவள், "மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" எனவும் கூறுகிறாள். எத்தகைய உன்னத தத்துவம் இது பாருங்கள்!

சாத்தனார் அறத்தைப் பற்றி மேலும் விளக்கம் கூறுகிறார். மாந்தர் பெற்ற இளமையும், உடலும், செல்வமும், பிறவும் அழிந்துவிடும். கடைசிவரை உதவுவது செய்த அறமே என்ற கருத்தை வலியுறுத்துகிறார் புலவர்.

> **"இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா,**
> **வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா,**
> **புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்,**
> **மிக்க அறமே விழுத்துணையாவது."**

மணிமேகலையின் உயர்ந்த தத்துவங்கள் தமிழரின் திரவியங்கள் என்பதில் சற்றேனும் ஐயமில்லை. பிறவிப் பெருங்கடனைத் தீர்த்து இறைவனை அடைந்து பேரின்பம் அடைய வேண்டுமானால் அறத்தைக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பது தெள்ளிதிற் புலனாகின்றது அல்லவா?



# நாவைக் காக்கும் பண்பு

**நா**ம் எதைத்தான் காக்காவிட்டாலும், எமது நாவைக் காக்கவேண்டும். இல்லாவிட்டால் சிந்திக்காமல் பேசிவிட்டு அதனால் பெரும் துன்பத்திற்கு ஆளாக நேரிடும். இது நுண்ணிய அறிவாலும், முதிர்ந்த அனுபவத்தாலும் கண்டறியப்பட்ட உண்மை. தெய்வப்புலவர் திருவள்ளுவர் நாவைக் காப்பதைப் பற்றி எழுதிய குறளைப் பார்ப்போம்.

**"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு."**

திருவள்ளுவர் ஒரு பெரும் உண்மையை இரண்டே வரிகளில் அழகாக, எளிதாகக் கூறியுள்ளார். அவர் கூறிய குறளை விளக்க, அருந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இருந்து ஒரு சம்பவத்தை ஆராய்வோம். பத்தினித் தெய்வமான கண்ணகிக்கு சேரமன்னன் செங்குட்டுவன், வஞ்சி மாநகரில் ஒரு கோயில் அமைக்க விரும்பினான். கோயில் அமைக்க இமயமலையிலிருந்து கல்லெடுப்பது அவன் திட்டம். வடநாடு செல்லுமுன் அவன் செவிக்கு ஒரு செய்தி எட்டியது.

பலர் குழுமியிருந்த சபையில் கனக விசயர் என்ற இரு வடநாட்டு மன்னர்கள் தமிழர் வீரத்தைப் பழித்துரைத்தனர் என்ற செய்தி கேட்ட செங்குட்டுவன் கடும் சீற்றம் கொண்டான். சேரன் படை திரண்டு எழுந்தது. போரில் எளிதாக வெற்றி பெற்று, வாய் வீச்சில் சிறந்த கனக விசயரை, வாள் வீச்சால் அடக்கினான் சேரர் பெருமான். இமயமலையில் எடுத்த கல்லை, கனக விசயர் தலையில் ஏற்றினான் சேரவேந்தன். வஞ்சி மாநகர் வரை கல்லைச் சுமந்து வந்தனர் கனக விசயர்.

இவ்வாறு நாவை அடக்கத் தெரியாமல் பேசிவிட்டு அதனால் பெரும் துன்பத்திற்கு ஆளானார் கனக விசயர். அன்னார் தலையில் கல் சுமந்து இழுக்குற்ற செய்தியை, வள்ளுவர் வாக்கைத் தழுவி, சிலப்பதிகாரம் அழகாக எடுத்துரைக்கிறது. நாமும் நாவை அடக்கி, வள்ளுவரின் வாக்குப்படி நடப்போமாக.

# பரத நாட்டியம்

தமிழ்நாட்டில் தோன்றிய பரத நாட்டியம் உலகின் தலை சிறந்த நடனங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பிரித்தானிய கலைக் களஞ்சியம் பரத நாட்டியத்தைப் பற்றி என்ன கூறுகிறது என்பதைப் பாருங்கள்.

• QUOTE FROM ENCYCLOPAEDIA BRITTANICA

"Bharatha Natyam has attained world recognition as one of the most exquisite forms of classical dance. Its aspirants go to Tamil Nadu to learn from gurus who still live in villages. It is the principal of the five classical dance styles of India."

தற்போது இந்தியாவில் உள்ள மற்றைய நடனங்களான கதகளி, மணிபுரி, கதக், குச்சுப்பிடி, ஒடிசி (Kathakali, Manipuri, Kathak, Kuchupudi and Odissi) ஆகியனவற்றைவிட பரதநாட்டியம் பழமையானது, தொன்மை வாய்ந்தது என்பது அறிஞர் கண்டறிந்த உண்மை. பரதநாட்டியம் தமிழ்நாட்டில் 2000 ஆண்டுகளுக்கு மேலாகப் போற்றப்பட்ட ஒரு கலையாகும். அது, 16ஆம் நூற்றாண்டில் முகமதியர் தென்னிந்தியாவைக் கைப்பற்றியதும் ஈன நிலையை அடைந்தது. முகமதியர் தமிழ்க் கலைகளை அழித்தனர். பரத நாட்டியம் தமிழ்நாட்டின் கோயில்களில் தஞ்சம் அடைந்தது. கோயில்களில் நடனம் ஆடிய மங்கையர்கள், தேவதாசிகள் என அழைக்கப்பட்டார்கள். எனவே குடும்பப் பெண்கள் பரத நாட்டியத்தில் பங்கு பற்றாத நிலை ஏற்பட்டது.

19ஆம் நூற்றாண்டின் கடைசிப் பாகத்தில் தஞ்சாவூரைச் சேர்ந்த நான்கு சகோதரர்களான சின்னையா, பொன்னையா, வடிவேலு, சிவானந்தம் ஆகியோரது விடாமுயற்சியாலும், அரும் பணியாலும் பரத நாட்டியம் மறுமலர்ச்சி அடைந்தது. அவர்கள் நாட்டிய சாத்திரத்தை நன்கு கற்று முறையாகப் பரத

நாட்டியப் பயிற்சி அளித்தனர். அன்றிலிருந்து பரத நாட்டியத்தின் நிலை படிப்படியாக உயர்ந்து இன்று உன்னத நிலை அடைந்திருக்கிறது. அந்தச் சகோதரர்களது அரும் பெரும் பணியை எவ்வாறு போற்றுவது? எவ்வாறு புகழ்வது? அந்த அமரர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தி அஞ்சல் செய்வோமாக.

20ஆம் நூற்றாண்டில் பரத நாட்டியத்துக்குத் தொண்டு புரிந்தோரில் முக்கியமானவர்கள் பாலசரஸ்வதி, ருக்மணி தேவி, யாமினி கிருஷ்ணமூர்த்தி, சாந்தாராவ் ஆகியோர். ருக்மணி தேவியின் தொண்டு மகத்தானது. மக்களிடையே பரத நாட்டியத்தைப் பரவச் செய்தவர் அவர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. அதே காலத்தில் மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் அவர் மருமகனான சொக்கலிங்கம் பிள்ளையும் நாட்டியத்தின் முக்கிய ஆசான்களாக இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று பரத நாட்டியம் உலகெங்கும் பிரசித்தி பெற்றிருக்கிறது. அதைத் தமிழர்கள் மட்டுமன்றி பல்வேறு இனமக்களும் பயில்கிறார்கள். உலகின் பல பாகங்களில் இருந்தும் தமிழ்நாட்டுக்குச் சென்று பலர் பரத நாட்டியத்தைக் கற்கிறார்கள். சென்னையில் உள்ள கலாசேத்திரா என்னும் கலைக்கழகத்தில் பரத நாட்டியம் செவ்வனே கற்பிக்கப் படுகிறது. தமிழ் நாட்டில் பிறந்த பரதக் கலையைப் போற்றி வளர்ப்பது தமிழராகிய எமது தலையாய கடமையாகும்.



# தமிழிசை

**த**மிழ் இசை மிகவும் புராதனமானது. சங்க காலத்துக்கு முன்பே கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நாட்டில் வளர்ந்து வரும் இசையானது தமிழ் மக்களின் தனியான இசையமைப்பாகும். சிலப்பதிகாரத்தில் 11991 பண் வகைகள் இருந்தனவென்றும், தோற்கருவிகள் 30 இருந்தனவென்றும் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அந்நாளில் கடலால் சூழப்பட்ட தமிழ்நாடு, கரைநாடு என வர்ணிக்கப்பட்டது. தமிழ் நாட்டில் தோன்றிய இசையை கரைநாட்டு இசை எனக் கூறுவாராயினர். கரைநாட்டு இசை என்ற பெயரே மருவிப் பிரிந்து கர்நாடக இசையாக மாறிற்று. தேவார காலம் வரை கர்நாடக இசை தமிழருக்கே உரிமையான தமிழிசையாக விளங்கியது. ஆனால் இன்று திராவிட மொழிகளுக்குப் பொதுவான திராவிட இசையாகக் காணப்படுகிறது. ஆதலால் இன்றைய கர்நாடக இசையை ஈன்றெடுத்த தாய் தமிழிசை என்பது தெள்ளிதிற் புலனாகிறது.

இன்றைய கர்நாடக இசையின் ஆதி குருவாகக் கருதப் படுகிறவர் புரந்தரதாசர் என்பவர். அவருடைய ராகங்கள் தமிழிசைப் பண்களுடன் தொடர்புற்று இருந்தனவெனினும் அவற்றின் பெயர்கள் அனைத்தும் வடமொழிப் பெயர்களாக மாறின. அவற்றைக் கேட்டு மக்கள் தமிழிசைப் பண்களை மறந்து விட்டனர். தியாகராஜர், சியாமா சாஸ்திரி, முத்துச்சாமி தீட்சிதர் ஆகியோர் கர்நாடக இசையின் மும்மூர்த்திகள் என அழைக்கப் படுகிறார்கள். ஆனால் இம்மூவர் தோன்றியதற்கு பல்லாண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக்கவிராயர் ஆகியோர் தோன்றி தமிழில் பல கீர்த்தனைகளைப் பாடினார்கள். இவர்கள்தான் இசையின் ஆதி மும்மூர்த்திகள். மூன்று சரணங்கள்

கீர்த்தனைகளில் அமைய வேண்டும் என்ற மரபுக்கு வழி காட்டியவர் முத்துத்தாண்டவர் என்பதை மறக்கலாகாது.

மும்மூர்த்திகள் தெலுங்கில் கீர்த்தனைகளைப் பாடியதால் தெலுங்குதான் சிறந்தது எனக் கருதுவோர் பலர் இருக்கிறார்கள். இது அர்த்தமற்றது. தமிழிலும் அருமையான கீர்த்தனைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை நாம் ஆதரிக்க வேண்டும். தமிழ்நாட்டில் இன்றும் திருவையாற்றில் தியாகராஜர் விழா நடக்கும்போது, யாராவது சில தமிழ்ப் பாட்டுகளைப் பாடிவிட்டால் அதை ஒரு பெருங்குற்றமாகக் கருதுகிறார்கள். ஆனால் சமஸ்கிருதத்தில் பாடினால் அது குற்றமாகக் கருதப்படுவதில்லை. இது மனதுக்கு எவ்வளவு வேதனையைத் தருகிறது? தமிழரே தமிழைத் தாழ்த்தினால் தமிழின் கதி என்ன? தெலுங்கு போன்ற திராவிட மொழிகளெல்லாம், தமிழிலிருந்து மருவிப் பிரிந்தவை என்ற உண்மையை, ''திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'' என்ற அரிய நூலின் மூலம் உலகிற்கு எடுத்துக்காட்டினார், அறிஞர் கால்டுவெல்.

இந்தியாவின் இரு ஆதிமொழிகள், தமிழும், சமஸ் கிருதமும் என்பது அறிஞர் கண்டறிந்த உண்மை. சமஸ்கிருதம் இப்போது மறைந்துவிட்டது. எனவே தற்போது இந்தியாவில் ஆதிமொழி, சிறப்பு மொழி தமிழ்தான் என்பதை நாம் உணர வேண்டும். மேலும் காலத்தால் அழியாத எமது அருள் மொழியின் இசையில் இருந்துதான், தற்போதைய கர்நாடக இசை தோன்றியிருக்கிறது என்ற உண்மையை நாம் மறக்கலாகாது! எமது அற மொழியைப் பேணிப் போற்று வோமாக!



# காஞ்சிபுரம் – தமிழ்நாட்டின் புனிதத் தலம்

**கா**ஞ்சிபுரம் தமிழ்நாட்டில் ஒரு பிரசித்தி பெற்ற தலமாகும். இந்தியாவின் ஏழு புனித தலங்களில் அது ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது. பல்லவர்களின் காலத்தில் காஞ்சிபுரம் பெரும் சீரும் சிறப்பும் அடைந்து விளங்கியது. பல்லவர்கள் காஞ்சியைத் தலைநகராக்கிக் கொண்டு ஆறு நூற்றாண்டுகள் தமிழ்நாட்டில் அரசாட்சி செய்தனர். பல்லவர்கள் அம்மாநகரில் பல கோயில்களைக் கட்டினார்கள். அதன்பின் பல்லவரை அடுத்து சோழர்களும், விஜய நகர மன்னர்களும் இன்னும் பல கோயில்களைக் கட்டினார்கள். ஒரு காலத்தில் அப்பெரு நகரில் 1000க்கு மேற்பட்ட கோயில்கள் இருந்தன. இன்று அங்கு 125 கோயில்கள் எஞ்சி உள்ளன. அவற்றில் மிகவும் பிரசித்தி பெற்றவை பின்வருமாறு:

**வைகுந்தப் பெருமாள் கோயில் :**

8ஆம் நூற்றாண்டில், இரண்டாம் நந்திவர்மனால் கட்டப் பட்ட இந்த விஷ்ணு கோயில், மூன்று அடுக்குகளில் அழகாகக் கட்டப்பட்டுள்ளது.

**ஏகாம்பரநாதர் கோயில் :**


காஞ்சியில் உள்ள மிகப்பெரிய கோயில் இதுதான். இந்தச் சிவன் கோயிலின் 59 மீட்டர் உயரமான கோபுரத்தையும், பெரிய மதிலையும் விஜயநகர மன்னனான கிருஷ்ண தேவராயன் 1509இல் கட்டி முடித்தான்.


**தேவராஜ சுவாமி கோயில் :**

விஜயநகர மன்னர்களால் கட்டப்பட்ட இந்த விஷ்ணு கோயில் பிரமாண்டமானது. ஒரு தனிக்கல்லில் இருந்து செதுக்கப்பட்ட சங்கிலி, இதன் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### கைலாசநாதர் கோயில் :


தமிழர் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. 7ஆம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் ராஜசிம்மனால் கட்டப் பட்ட இந்தக் கற்கோயில் மிகவும் பெருமை வாய்ந்தது. வட இந்தியாவில் உள்ள மகத்தான கைலாசநாதர் கோயிலுக்கு இது முன்னோடியாக விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. கைலாச நாதர் கோயிலின் ஒப்பற்ற சிற்பக் கலையை எடுத்துக்காட்டும் படங்களை இங்கு காணலாம்.







**காமாட்சி அம்மன் கோயில் :**

காஞ்சியில் மற்றொரு சிறப்பு வாய்ந்த கோயில். அடுத்தப் பக்கத்தில் காணப்படும் படங்கள் அதன் அழகை எடுத்துக் காட்டுகின்றன. பல்லவர்களால் கட்டப்பட்ட இந்தக் கோயிலின் கோபுரங்களும், விமானங்களும், அழகிய நிறங்களால் பூசப் பட்டுக் கண்கொள்ளாக் காட்சி அளிக்கின்றன. கோயிலின் நடுவே இருக்கும் ஒரு கோபுரம் தங்கத்திலானது என்பது குறிப்பிடத்தக்கது.



புனிதத் தலமாக மட்டுமல்லாது, காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்கும் பிரசித்தி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. காஞ்சிப் பட்டு உலகப் பெருமை வாய்ந்தது. அங்கு பட்டுச் சேலைகளை நெசவு செய்யும் பல இடங்களைப் பார்வையிடலாம்.





# மாமல்லபுரம்

**மா**மல்லபுரம் தமிழ்நாட்டின் சிற்பக் கலைக்கு ஒரு சிறந்த உதாரணமாக விளங்குகிறது. சென்னையிலிருந்து நாற்பது மைல் தூரத்தில், கடலோரத்தில் உள்ள இந்தக் கிராமம் சிற்பக் கலையின் சிகரமாகக் கருதப்படுகிறது. இந்த ஊரை மகாபலிபுரம் என்றும் அழைப்பார்கள். ஆனால் இது தவறான பெயர். மாமல்லன் என்ற பட்டப் பெயர் கொண்ட அரசனால் கட்டப்பட்டதால், மாமல்லபுரம் என்ற பெயர் வழங்குவதாயிற்று என்பதே உண்மை.

மாமல்லபுரம் உலகப் பிரசித்தி பெற்றது. இந்தியாவில் உள்ள மிகக் கீர்த்தி வாய்ந்த இடங்களில் மாமல்லபுரம் தலை சிறந்தது என்று கூறுவது மிகையாகாது. நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மாமல்லபுரத்தின் சிற்பங்களைக் காண வருகிறார்கள். வருபவர்கள் எல்லாம் அந்தச் சிற்பங்களின் மகிமையை உணர்ந்து பாராட்டுகிறார்கள்.


மாமல்லபுரத்தில் உள்ள அற்புதமான சிற்பங்கள் பல்லவச் சக்கரவர்த்தி நரசிம்மவர்மனால் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டன. பல்லவர்கள் தமிழ்நாட்டில் கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்கும், கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்கும் இடையே மிகவும் உன்னத நிலையை அடைந்திருந்தார்கள் என்பது நாம் அறிந்த உண்மை. பல்லவப் பேரரசின் ஒப்பற்ற துறைமுகமாக மாமல்லபுரம் விளங்கியது. நரசிம்மவர்மன் கி.பி. 630இல் கற்கோயில்களைக் கட்டுவிக்கத் தொடங்கினான். அதன்பின் படிப்படியாகப் பல கோயில்களும், சிற்பங்களும் கட்டப்பட்டன.



இந்தப் படத்தில் காணப்படும் கற்கோயில் 8ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டது. பல கற்பாறைகளால் கட்டப்பட்ட இந்தக் கோயில் கடற்கரையில் இருப்பதால் அதைக் கடற்கரைக் கோயில் என்று அழைப்பார்கள். ஒரு காலத்தில் ஏழு கடற்கரைக் கோயில்கள் இருந்தனவென்றும், அவற்றில் ஆறு கடலால் அழிக்கப்பட்டன வென்றும், சரித்திரம் கூறுகிறது. கோயிலில் உள்ள கோபுரம் மிகவும் அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. கோபுரத்தின்

மேற்புறத்தில் அந்நாளில் பல அழகிய சிற்பங்கள் இருந்தன. ஆனால் இன்றோ அவை கடல்காற்றாலும், சூரிய ஒளியாலும் அழிக்கப்பட்டுவிட்டன.

பெரிய கோயிலுக்கு அருகே ஒரு சிறு விஷ்ணு கோயிலும் இருக்கிறது. கோயிலைச் சுற்றி ஒரு அழகிய மண்டபம் இருக்கிறது. மண்டபத்தைச் சுற்றியுள்ள மதிலில் பல நந்திகளின் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவை கடற்கரைக் கோயிலுக்கு அழகுக்கு அழகு செய்கின்றன.




இந்தப் படத்தில் ஐந்து கோயில்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு வரிசையில் இருக்கும் நான்கு கோயில்கள் ஒரே கல்லில் இருந்து குடையப்பட்டிருக்கின்றன. மற்றக் கோயில்


தனிக்கல்லில் இருந்து குடையப்பட்டது. இந்தக் கோயில்களை இரதங்கள் என்று கூறுவார்கள். முறையே திரௌபதி ரதம், அர்ச்சுன ரதம், வீம ரதம், தர்ம ரதம் ஒரே வரிசையில் உள்ளன. தனியே இருப்பது சகாதேவ ரதம். இந்த ரதங்களில், மூன்று உப்பரிகைகள் கொண்ட தர்ம ரதம் மிகவும் பெரியது. அது நுணுக்கமான வேலைப்பாடு கொண்டது. எல்லா ரதங்களின் மேற்புறங்களிலும் கண்ணைக் கவரும் சிற்பங்கள் பல செதுக்கப் பட்டிருக்கின்றன. வீம ரதத்தின் கூரை மிகவும் அழகாகக் காட்சி அளிக்கிறது. இந்த ரதங்களைக் கடவுளின் வாகனங்களாகக் கருதிச் செதுக்கினார்கள். அதனால்தான் அவை ரதங்கள் எனப் பெயரிடப்பட்டன.




இந்தப் படம் மாமல்லபுரத்தின் சிற்பக் கலைக்கு ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஒரு பெரிய கல்லின்

மேற்புறத்தே செதுக்கப்பட்ட இந்த ஓவியம் கண்கொள்ளாக் காட்சியை அளிக்கிறது. இந்தக் 'குவி ஓவியம்' 20 அடி உயரமும், 80 அடி அகலமும் கொண்டது. அதில் நூறுக்கு மேற்பட்ட சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஓவியம் கங்கை நதியின் ஓட்டத்தைச் சித்தரிக்கிறது. ஓவியத்தின் நடுவே இருக்கும் பிளவுதான் கங்கை நதி. அதில் குடை விரித்தாடும் நாக அரசனும், அரசியும் நீந்தும் காட்சி கண்ணைக் கவருகிறது. பகீரதன் ஒற்றைக் காலில் நின்று கொண்டு தவம் புரிவதையும், சிவபெருமான் அவனுக்கு அருள்வதையும் காணலாம். இப்படிப்பட்ட குவி ஓவியத்தை உலகில் வேறெங்கும் காணமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது. மாமல்லபுரத்தில் காணப்படும் சிற்பங்கள் உலகில் தலைசிறந்தவை என்பது மறுக்கமுடியாத உண்மை. அவற்றைப் பேணிப் பாதுகாப்பது தமிழ்நாட்டாரின் தலையாய கடமையாகும்!







# தமிழிலக்கியம்

# சங்கத் தமிழ் இலக்கியத்தின் மகிமை

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவதெங்கும் காணோம்''
– என்று பாடினார் அமர கவிஞர் பாரதியார்.

பாரதியார் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை. மேலை நாட்டு அறிஞர் பலர் தமிழினதும், தமிழ் இலக்கியத்தினதும் மேன்மையை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பிரித்தானிய கலைக் களஞ்சியத்தை எடுத்துப் பார்த்தால் தமிழ் இலக்கியத்தையும், தமிழ்ப் புலவர்களையும் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறார்கள். வேறெந்த ஆசிய மொழிக்கும் இல்லாத பெருமையைத் தமிழுக்கு அளித்திருக்கிறார்கள்!

சங்க கால இலக்கியத்தை ஆராயுமுன் சங்க கால இலக்கியம் என்றால் என்ன என்பதை உணரவேண்டும். முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் எனப்படும் மூன்று சங்கங்கள் மதுரையம்பதியில் வீறுநடை போட்டுப் பல உன்னதமான தமிழ் இலக்கியங்களைப் படைத்தன எனத் தமிழ் வரலாறு கூறுகிறது. முதற் சங்கத்தின் இலக்கியம் ஒன்றும் இப்போது கிடையாது. இரண்டாம் சங்கத்தின் இலக்கியங்களில் தொன்மை வாய்ந்த தொல்காப்பியம் மட்டுமே மிஞ்சி இருக்கிறது. மூன்றாம் சங்கத்தின் படைப்புகளான எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும் என்றும் வாடா மலர்களாகத் தமிழ் அன்னையை அலங்கரிக்கின்றன. எட்டுத் தொகையில் எட்டு நூல்களும், பத்துப் பாட்டில் பத்து நூல்களும் இருப்பது வெள்ளிடை மலை. 473 சங்க காலப் புலவர்கள் எழுதிய பாடல்கள் இந்த நூல்களில் இடம் பெற்றிருக்கின்றன.

குறிப்பிட்ட இலக்கியங்களை ஆராயுமுன் சில பழைய மரபுகளை உணர்ந்து கொள்வது அத்தியாவசியமாகும். சங்க கால நூல்கள் மக்கள் வாழ்வை அக வாழ்வு, புற வாழ்வு எனப் பிரித்துரைத்தன. அக வாழ்வு என்பது ஆணும், பெண்ணும் ஒன்றுகூடி அன்போடு வாழும் காதல் வாழ்வாகும். அகத்தில் நிகழும் ஒழுக்கத்தை அகத்திணை என்றனர். புற வாழ்வு என்பது புறத்திலே நிகழும் நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கின்றது. உதாரணமாக அரசாட்சி, போராட்டம், வீரம், கொடை, புகழ், வாணிபம், விவசாயம் போன்ற தொழில்கள் ஆகியன. புறத்திலே நிகழும் ஒழுக்கம் புறத்திணை எனக் கூறப்பட்டது.

சங்க காலப் புலவர்கள் அகத்தையும், புறத்தையும் ஆதாரமாகக் கொண்டு பல அருமையான கவிதைகளைப் பாடினார்கள். அவர்கள் பாட்டுக்குப் பின்னணியாக அமைத்த இயற்கைக் காட்சிகள் பாட்டுகளுக்கு அழகுக்கு அழகு செய்தன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலங்கள் அகவாழ்வைப் பற்றிய பாடல்களில் இடம் பெறுகின்றன. இதைவிடப் பாலை என்ற வறண்ட பகுதியையும் வர்ணிக்கிறார்கள். பாலைக்குத் தனி நிலம் குறிக்கவில்லை. வானம் பொய்த்து வறண்டு போன எந்த நிலத்திலும் பாலை தோன்றலாம். ஆகவே குறிஞ்சியிலும், முல்லையிலும், மருதத்திலும், நெய்தலிலும் பாலை தோன்றலாம்.

ஒவ்வொரு நிலத்திலும் நடைபெறும் ஒழுக்கத்தைத் திணை எனக் கூறினார்கள். வெவ்வேறு நிலங்களையும், காலங்களையும் 'முதல் பொருள்' என விவரித்தார்கள். ஒவ்வொரு திணைக்கும் உரித்தான விலங்குகளும், செடி கொடிகளும், தொழில்களும் இருந்தன. இவற்றைக் 'கருப்

பொருள்' எனக் கூறினார்கள். காதல் வாழ்வின் வெவ்வேறு நிலைகள் (உதாரணமாக ஊடல், கூடல், பிரிவு) ஆகியன வற்றை ஒவ்வொரு வகையான நிலத்துக்கும் குறித்திருந்தார்கள். இவற்றை 'உரிப் பொருள்' எனக் குறிப்பிட்டார்கள். ஒரு காதல் நிகழ்ச்சியைப் பாடும்போது இவ்வாறு அதற்கு உரிய நிலம், பொழுது, காலம், விலங்குகள், பூக்கள், செடி கொடிகள் ஆகியவற்றை அமைத்துப் பாடியதால் பாட்டுகள் சொல்லோவியங்களாகத் திகழ்கின்றன. அவைகளின் இயற்கை வருணனைகள் படிப்பவர்களின் நெஞ்சங்களில் இன்பத்தைப் பதியச் செய்கின்றன. ஒவ்வொரு திணையையும் சற்று விரிவாக ஆராய்வோம்!

பின்வரும் அட்டவணை திணைகளின் மரபுகளை எடுத்துக்காட்டுகிறது.



# அகத் திணை

| | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| முதல் பொருள்: இடம் | மலை | காடு | வயலும், ஊரும் | கடற்கரை | வறண்ட பகுதி |
| பொழுது | நள்ளிரவு | மாலை | காலை | சாயுங்காலம் – இரவு தோன்றும் வேளை | நடுப்பகல் |
| காலம் | பனிக் காலம் | மாரிக் காலம் | எல்லாக் காலங்களும் | எல்லாக் காலங்களும் | வசந்தம் |
| கருப் பொருள்: விலங்குகள் | யானை, குரங்கு | பசு, மான், முயல் | மீன், எருமை | சுறா | ஓணான், வாடிய புலி |
| பறவைகள் | கிளி, மயில் | குருவி, காட்டுக் கோழி | கொக்கு | – | பருந்து, கழுகு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மரங்களும் கொடிகளும் | பலா, வேங்கை, சந்தன மரம், காந்தள் | கொன்றை, குருந்து, முல்லை | மாமரம், மருதம், தாமரை | புன்னை, தும்பை | கள்ளி, கத்தாளை |
| நீர் | நீர்வீழ்ச்சி | ஆறுகள் | குளங்கள் | கடல் | நீரில்லாத கிணறுகள் |
| தொழில் | வேட்டை, தேன் சேர்த்தல் | கமம், வேட்டை | உழவு | மீன் பிடித்தல், உப்பு வளர்த்தல் | கொள்ளை |
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | துர்க்கை |
| உரிப்பொருள்: | காதலரின் கூடல், களவு – திருமணத்துக்கு முதல் | காதலியின் துயரம் – காதலன் பிரிந்தபோது காதலி பொறுமையுடன் காத்திருத்தல் (கற்பு) | ஊடல் – பரத்தையோடு காதலன் உறவு கொண்டதால் காதலியின் துக்கமும் கோபமும் | காதலனின் பிரிவால் வாடிய காதலி அவனது வருகைக்காக ஏங்குதல் உருகுதல் | பிரிவும் துன்பமும் – காதலனும் காதலியும் பலதரப்பட்ட காரணங்களால் பிரியுதல் |

அட்டவணையை உற்று நோக்கும்போது திணைகளும், மரபுகளும் தெளிவாகின்றன. உதாரணமாகக் குறிஞ்சித் திணையை எடுத்துக் கொண்டால் அதன் முதல் பொருள் மலையும் மலை சார்ந்த இடமும். அதற்கேற்ற காலம் பனிக் காலம். பொழுது நள்ளிரவு. உரிப் பொருளோ காதலர்களின் கூடல். பொதுவாக இது திருமணத்துக்கு முன் ஏற்படும் சந்திப்பைக் குறிக்கிறது. களவு வாழ்க்கை எனச் சங்க இலக்கியம் இதை விவரிக்கிறது. குறிஞ்சித் திணைக்கு அமைந்த கருப்பொருளை அவதானித்தால் யானை, குரங்கு போன்ற மிருகங்களும்; கிளி, மயில் போன்ற பறவைகளும்; பலா, வேங்கை, சந்தன மரம், காந்தள் போன்ற தாவரங்களும்; வேட்டையாடல், தேன் சேர்த்தல் போன்ற தொழில்களும் இருப்பதைக் காணலாம். இதைப் போலவே முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற திணைகளுக்கு உரித்தான முதல் பொருளும், கருப் பொருளும், உரிப் பொருளும் இருப்பது கண்கூடு.

காதலின் வெவ்வேறு நிலைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அவற்றிற்குப் பின்னணியாக இயற்கைக் காட்சிகளையும், நில வகைகளையும், காலங்களையும் அமைத்துப் பல அற்புதமான காவியங்களைப் பாடினர் சங்க காலப் புலவர்கள். இதிலிருந்து காதலின் வெவ்வேறு நிலைகளான உரிப் பொருளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது என்பது நன்கு தெளிவாகிறது.

மேலும் 'உள்ளுறை' என்ற சிறந்த கவிதைப் பண்பையும் சங்க காலப் புலவர்கள் கையாண்டார்கள். ஒரு இயற்கைக் காட்சியை விவரிப்பார்கள். ஆனால் பாட்டு உண்மையில் காதலன், காதலி இருவருக்கும் இடையில் ஏற்படும் உறவைத் தான் மறைமுகமாக விவரிக்கும். இதைப் போலவே 'திணை மயக்கம்' என்ற மரபையும் புலவர்கள் உபயோகித்தனர். அதாவது ஒரு திணைக்கு உரிய விலங்கையோ, பறவையையோ,

மரத்தையோ வேறு திணைக்கு உபயோகிக்கும் மரபுதான் 'திணை மயக்கம்'. இந்த மரபு சில பாடல்களில்தான் காணப் படுகிறது.

இவ்வாறாகச் சங்க காலப் புலவர்கள் பல்வேறு திணைகளையும், பண்புகளையும், மரபுகளையும் பயன்படுத்தி உன்னதமான ஒப்பற்ற இலக்கியங்களைப் படைத்தார்கள். உலகின் தலைசிறந்த இலக்கியங்களில் ஒன்றாக எமது சங்க இலக்கியம் மேலை நாட்டு அறிஞர்களால் பாராட்டப் பட்டிருக்கிறது. பிரித்தானிய அறிவுக் களஞ்சியம் தமிழ்ச் சங்க இலக்கியம் மிகவும் சிறந்த இலக்கியம் எனக் கூறுகிறது.

மேலும், சங்கப் புலவர்கள் பல நூற்றாண்டுகளாகப் பாடிய நெஞ்சை உருக்கும் பாடல்கள் எந்த இந்திய மொழியிலும் உள்ள இலக்கியத்தில் கிடையாது என்றும் ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சங்கப் புலவர்கள் அகத்திணையைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என வகுத்ததுபோல், புறத்திணையையும் ஏழு பகுதிகளாக வகுத்துப் பாட்டுக்கள் பாடினர். இந்த ஏழு திணைகள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என அழைக்கப்பட்டன. இந்தப் புறத் திணைகளில் தமிழரின் போர் முறைகள், அரசியல், கொடை, புகழ், வீரம் ஆகியனவற்றை உணரலாம்.

இனிக் குறிப்பிட்ட இலக்கியங்களை உதாரணம் காட்டி சங்க இலக்கியத்தின் மகிமையை ஆராய்வோம்.

**தொல்காப்பியம் :**

தொல்காப்பியம் அன்றும், இன்றும், என்றும் பெருமை குன்றாது விளங்கும் இடைச் சங்க இலக்கியம். அது தொல் காப்பியரால் கி.மு. பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப் பட்டது. தொல்காப்பியம் இன்றைய உலகின் பேசும் மொழிகளில் மிகவும் பழமையான இலக்கியம் என்பதில்

ஐயமில்லை. பழந்தமிழரின் நாகரிகத்தையும், செம்மையையும் எடுத்துக் கூறும் ஒப்பற்ற ஒளிவிளக்குதான் தொல்காப்பியம்.

அகத்திணையியலில் ஒரு பாடல்:

**''மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.''**

இதன் கருத்தாவது: திருமாலால் காக்கப்படும் காடாகிய இடமும், முருகனால் காக்கப்படும் மலையாகிய இடமும், இந்திரனால் காக்கப்படும் வயலாகிய இடமும், வருணனால் காக்கப்படும் மணல் பொருந்திய இடமும், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று முன்னோர்களால் கூறப்பட்டது. எதுகைகள் பலவற்றைத் தக்க முறையில் உபயோகித்து அழகான பாட்டை எழுதினார் புலவர்.

அடுத்ததாகப் புறத்திணையியலில் இருந்து இரு பாட்டுகளை ஆராய்வோம். தற்காப்புப் போரின் மூலம் தங்கள் வாழ்வையும், வீரத்தையும் பாதுகாத்துக் கொள்ளும் பண்புடையவர்கள் பழந்தமிழர் என்ற உண்மையை இந்தப் பாட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

முதல் பாட்டு முல்லையோடு தொடர்புள்ள வஞ்சித் திணையை விளக்குகிறது. அதாவது மண்ணாசை கொண்டு நாடு பிடிக்கப் படையெடுத்து வருகிறான் ஒரு மன்னன். அவன் அஞ்சும்படி இன்னொரு அரசன் பெரும் படையோடு சென்று அவனுடன் போர் செய்கிறான்.

அடுத்த பாட்டு நெய்தலோடு தொடர்புள்ள தும்பைத் திணையை விளக்குகிறது. ஒரு அரசன் தனது பெருமையை உலகம் புகழவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் போர் புரிய

வருகிறான். அவனை எதிர்த்துப் போர் செய்து அவன் திமிரை அழிக்கிறான் இன்னொரு வேந்தன்.

சொல் நயம் மிகுந்த இரு பாட்டுக்களையும் கேளுங்கள்:-

***"வஞ்சி தானே முல்லையது புறனே***
***எஞ்சா மண்ணாசை வேந்தனை, வேந்தன்***
***அஞ்சு தகத் தலைச் சென்று அடல்குறித் தன்றே."***

***"தும்பை தானே நெய்தலது புறனே***
***மைந்து பொருளாக வந்த வேந்தனைச்***
***சென்றுதலை யழிக்கும் சிறப்பிற் றென்ப."***

அடுத்த பாட்டு சங்க காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறையை விளக்குகிறது. தமிழர்கள் இல்லறத்துக்குப் பின்பு தான் துறவறத்தை மேற்கொண்டனர். கிழவனும், கிழவியும் தமது பிள்ளைகளுடனும், உறவினர்களுடனும் சேர்ந்து வாழ்ந்தே நல்ல காரியங்களைச் செய்வார்கள். குடும்பத்தைப் பிரிந்து தனித்து வாழும் துறவறம் தமிழ் மக்களிடம் இருந்த தில்லை. பாட்டு இதனை அழகாக விவரிக்கிறது.

***"காமம் சான்ற கடைக்கோட் காலை,***
***ஏமம் சான்ற மக்களோடு துவன்றி,***
***அறம் புரி சுற்றமொடு, கிழவனும் கிழத்தியும்***
***சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே."***

தொல்காப்பியம் பண்டைத் தமிழர் சிறப்பையும், நாகரிகத்தையும், பண்புகளையும் மட்டும் கூறவில்லை. அது ஒரு இலக்கண நூல் என்பதை நாம் மறக்க முடியாது. செந்தமிழுக்கு உள்ள பழமையான இலக்கண நூல் தொல் காப்பியம் என்பது குறிப்பிடத்தக்கது. எழுத்ததிகாரம், சொல்ல திகாரம் என்ற முதல் இரண்டு பகுதிகளில் தொல்காப்பியர் தமிழ் இலக்கணத்தை மிகவும் சிறப்பாக எடுத்துரைத்திருக்கிறார்.

தொல்காப்பியம் ஆன்றோரும், சான்றோரும் புகழும் ஓர் அற்புத இலக்கியம். தொன்மையும், மேன்மையும் வாய்ந்த

தொல்காப்பியம் என்னும் அரும் பெரும் செல்வத்தின் மகிமை என்றும் மங்காது என்னும் உண்மை தெள்ளிதிற் புலனாகிறது.

**எட்டுத் தொகை :**

எட்டுத் தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை என்ற ஐந்து அகப் பொருள் நூல்களும், புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் என்ற மூன்று புறப்பொருள் நூல்களும் காணப்படுகின்றன. எட்டுத் தொகையின் நூல்களிலிருந்து சில பாடல்களை ஆராய்ந்து அவற்றின் கவிநயத்தையும் சொல் வளத்தையும் காணுவோம்.

முதலில் ஐங்குறுநூறு என்னும் அகவாழ்வு நூலில் இருந்து ஒரு காதல் பாடலை எடுத்துக் கொள்ளுவோம். காதலன், காதலியின் உள்ளத்து உணர்வுகளை இந்தப் பாட்டுகள் அழகாகச் சித்தரிக்கின்றன. காதலன் சில கடமைகளைச் செய்வதற்காக காதலியைப் பிரிந்து செல்வதாகவும், செய்ய வேண்டிய கருமங்கள் முடிந்தபின் காதலியைக் காண வருவதாகவும் தோழிக்குச் சொல்லுகிறான். தோழியோ அவன் பிரிந்து சென்றால் காதலியும் தானும் அந்தப் பிரிவைத் தாங்க மாட்டோம் என்று கூறுகிறாள். மேலும் பனிக்காலத்தில் வாடைக் காற்றும் மிகவும் வருத்திவிடும் என்றும் கூறுகிறாள். பாட்டுக்குப் பின்னணியாக குறிஞ்சியின் மலைக் காட்சிகள் இயற்கை விருந்தை அளிக்கின்றன.

பாட்டைப் பார்ப்போம்:-

**''வருவை யல்லை; வாடை நனி கொடிதே –**
**அருவரை மருங்கின் ஆய்மணி வரன்றி**
**ஒல்லென இழிதரும் அருவி நின்**
**கல்லுடை நாட்டுச் செல்லல் – தெய்யோ!''**

அடுத்து நற்றிணையிலிருந்து ஒரு உணர்ச்சி மிகுந்த பாட்டைக் கேட்போம்.

*"சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவேன்*
*பிறப்புப் பிறிது ஆகுவ தாயின்*
*மறக்குவேன் கொல்என் காதலன் எனவே."*

*"யாக்கைக்கு*
*உயிர்இயைந் தன்ன நட்பின் அவ்வுயிர்*
*வாழ்தல் அன்ன காதல்*
*சாதல் அன்ன பிரிவரி யோரே."*

காதலனைப் பல காலம் பிரிந்து, அவன் வருவதை எதிர்ப்பார்த்து வாடிய காதலி, 'அவனைக் காணாமல் தன் உயிர் நீங்கி விடுமோ' என்று உருகுகிறாள். அவள் தோழிக்குச் சொல்லுகிறாள்: "தோழி, நான் சாவுக்கு அஞ்சவில்லை. ஆனால் நான் இறந்துவிட்டால், மறுபிறப்பில் என் காதலனை மறந்து விடுவேனோ என்றுதான் அஞ்சுகிறேன்" என்று சொல்லுகிறாள். புலவர் காதல் உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு போன்றது என்று உவமானம் கூறுகிறார். காதல் வாழ்தல் போன்றது என்றும், பிரிவு சாதல் போன்றது என்றும் விளக்கம் கூறுகிறார்.

அடுத்ததாகக் கலித்தொகையிலிருந்து வாழ்வின் இயல்பை விளக்கும் ஒரு பாட்டு, உள்ளத்தைத் தொடும் இனிமையுள்ளது. தன் மகள் காதலனுடன் சென்றுவிட்டாள் என்பதை அறிந்த தாய் மிகவும் மனம் கலங்குகிறாள். மகள் சென்ற வழியில் எதிர்ப்பட்ட அந்தணர்களை நோக்கி, "என் மகளைப் பார்த்தீர்களா?" எனக் கேட்கிறாள். அதற்கு அந்தணர் சொல்வதைப் பாட்டின் மூலம் அழகாக எடுத்துரைக்கிறார் கவிஞர்.

*"ஆணெழில் அண்ணலொடு அருஞ் சுரம் முன்னிய*
*மாண் இழை மடவரல் தாயர் நீர் போறிர்;*
*பலவுறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,*
*மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என் செய்யும்?*

*நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!*
*சீர் கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை,*
*நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என் செய்யும்?*
*தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!*
*ஏழ் புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை*
*யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என் செய்யும்?*
*சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!''*

வாழ்வின் இயல்பை அழகான உவமான உவமேயங்கள் மூலம் விளக்குகிறார் கவிஞர். மலையிலிருந்து சந்தணம் பிறந்தாலும் சந்தனம் மலைக்குப் பயன்படாது, பூசிக் கொள்பவர்களுக்குத்தான் பயன்படுகிறது. அதைப்போல் கடலில் பிறந்த முத்து அணிபவர்களுக்குத்தான் பயன் படுகிறது. யாழில் பிறந்த இசை கேட்பவர்களுக்குத்தான் பயன்படுகிறது. இவ்வாறு கூறித் தாயைத் தேற்றுகிறார் கவிஞர். பாட்டின் பொருள் நயத்தை எம்மால் மறுக்கவும் முடியுமோ? மறக்கவும் முடியுமோ?

அடுத்ததாக எட்டுத் தொகையில் புறவாழ்வுப் பாட்டுகள் சிலவற்றை ஆராய்வோம். புறநானூறில் ஒரு பகுதியை எடுத்துக் கொள்வோம். கொடை வள்ளல் பாரி தன் புதல்விகளை மணம் செய்து கொடுக்க மறுத்ததால் அவன் மீது படையெடுக்கின்றனர் மூவேந்தர். அப்போது கபிலர் பெருமான் சொல்கிறார்: ''எவ்வளவுதான் பெரிய படை உங்களிடம் இருந்தாலும், பாரியின் ஊராகிய பறம்பைக் கைப்பற்ற உங்களால் முடியாது. முந்நூறு ஊர்கள் கொண்ட இந்த நாட்டின் ஒவ்வொரு ஊரையும் பாரி கொடை வழங்கி விட்டான். நீங்களும் பாடி வந்தால் நானும் பாரியும் இருக்கிறோம். அவனுடைய மலையும் இருக்கிறது. ஆனால் மகளிர் இல்லை'' என்று மூவேந்தருக்கு அறிவுரை கூறுகிறார் கபிலர்.

மேலும் சொல்கிறார்: ''பெரிய குன்றான இந்தப் பறம்பு வெல்வதற்கு எளிதோ? அதனைப் போர் செய்து வெல்ல ஒரு

நாளும் மூவேந்தர்களுக்கு முடியாது. ஆனால் விறலிக்கோ அவள் பாடி வந்தால் அடைவதற்கு மிகவும் எளிது.''

கபிலர் பாடிய பாட்டுகளைப் பார்ப்போம்:–

***''கடந்து அடு தானை மூவிரும் கூடி***
***உடன்றனிர் ஆயினும், பறம்பு கொளற்கு அரிதே.***
***முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நல்நாடு;***
***முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்,***
***யாமும் பாரியும் உளமே;***
***குன்றும் உண்டு; நீர் பாடினிர் செலினே.''***

***''அளிதோ தானே, பேரிருங் குன்றே!***
***வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே;***
***நீலத்து, இணை மலர் புரையும் உண்கண்***
***கிணைமகட்கு எளிதால், பாடினள் வரினே.''***

அடுத்த பாட்டு பாரியின் மகளிரான அங்கவையும், சங்கவையும், தந்தையையும் இழந்து, பறம்பு மலையையும் இழந்து தவித்துத் துயரால் வாடிப் பாடுவதை இனிமையாக எடுத்துரைக்கிறது.

***''அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்,***
***எந்தையும் உடையேம்; எம் குன்றும் பிறர் கொளார்;***
***இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்,***
***வென்று எறி முரசின் வேந்தர் எம்***
***குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே!''***

எட்டுத் தொகை என்னும் ஒப்பற்ற இலக்கியங்களை ஆராய்ந்தோம். அடுத்ததாக அறிவு மணிப் பேழையான பத்துப் பாட்டையும் அதன் மகிமையையும் நோக்குவோம். பத்துப் பாட்டில் முல்லைப் பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை, நெடுநல்வாடை என்ற அகவாழ்வுப் பாட்டுகளும், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி என்ற புறவாழ்வுப் பாட்டுகளும் அமைந்திருக்கின்றன.

கடைச் சங்கத் தலைவர் நக்கீரர் அருளிப் பாடிய திருமுருகாற்றுப்படையில் பல உள்ளத்தை உருக்கும் பாடல்கள் காணப்படுகின்றன. 'திருஆவினன்குடி' என்ற பகுதியில் நக்கீரர் முருகனை வழிபடும் முனிவர்களின் இயல்புகளைப் பற்றிப் பாடுகிறார், கேளுங்கள்:

**''சீரை தைஇய உடுக்கையர் சீரொடு**
**வலம்புரி புரையும் வால்நரை முடியினர்**
**மாசற இமைக்கும் உருவினர் மானின்**
**உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்**
**என்பெழுந் தியங்கும் யாக்கையர் நன்பகற்**
**பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு**
**செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்**
**கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்**
**தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு**
**கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை**
**யாவதும் அறியா இயல்பினர் மேவரத்**
**துனியில் காட்சி முனிவர்''**

அந்த முனிவர்கள் மரவுரி உடுத்து அழகிய நரைமுடியும், அழுக்கில்லாத மேனியையும் கொண்டவராய் இருப்பார்கள். அவர்களின் உடம்பிலே மார்பின் எலும்புகள் நன்றாகத் தெரியும். பல நாட்களில் அவர்கள் உண்ணாமல் நோன்பு செய்வார்கள். அவர்கள் மனதில் பகையும், கோபமும் கிடையாது. அவர்கள் மெய்யறிவு பெற்றவர்கள். ஆசையையும், கடுஞ்சினத்தையும் நீக்கிய ஞானிகள் அவர்கள். மனவருத்தம் அறியாத இயல்பும், ஒருவருடனும் வெறுப்பில்லாத பண்பும் அவர்களிடம் உண்டு. இவ்வாறு திருமுருகாற்றுப்படையில் வரும் பாடல்கள் பக்தியும், அருளும் நிரம்பியனவாய் இருக்கின்றன.

அடுத்ததாக மதுரைக் காஞ்சியை எடுத்துக் கொள்வோம். பாண்டியன் நெடுஞ்செழியன் 'ஆரியப் படை கடந்த நெடுஞ் செழியன்', 'தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்'

என்றெல்லாம் தமிழ் இலக்கியத்தில் போற்றப்படுகிறான். அவனைப் புகழும் பாட்டைப் பார்ப்போம். ''காற்றுப்போல் விரைந்து சென்று, பகைவர் நாடு கெடும்படி நெருப்பைப் பரப்பி, தலையாலங்கானம் என்ற ஊரிலே படை விட்டிருந்து, ஏழு பகைவர்களைக் கொன்று, மற்றப் பகைவர்களுக்கு அச்சம் தோற்றுவித்து அவர்களது முரசத்தைக் கைப்பற்றிய புகழ்மிக்க வேந்தனே'' என்று புகழ் பாடுகிறார் புலவர்.

பாட்டைப் பாருங்கள்:-

***''காலென்னக் கடிதூர்அய்***
***நாடுகெட எரிபரப்பி***
***ஆலங்கானத் தஞ்சுவரவிறுத்து***
***அரசுபட அமருழக்கி***
***முரசுகொண்டு களம்வேட்ட***
***அடுதிறலுயர் புகழ்வேந்தே.''***

இறுதியாகப் பட்டினப்பாலை என்னும் அரும் திரவியத்தை ஆராய்வோம். பட்டினப்பாலை பழந்தமிழ் நாட்டின் பெருமைக்குச் சான்றாக அமைந்துள்ளது. காதல் பாட்டாக இருந்தாலும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பை அது அழகாக எடுத்துக் கூறுகிறது. தமிழ்நாட்டில் அக்காலத்தில் ஓங்கியிருந்த கடல் வாணிகத்தின் மகிமையைப் பட்டினப் பாலை பறைசாற்றுகிறது. காவிரிப்பூம்பட்டினத்தின் தெருவிலே வந்து குவிந்து கிடக்கும் பொருட்களை ஒரு பாட்டு தெளிவாக விளக்குகிறது. ஊரின் எல்லையில் கடலிலே மரக்கலத்தில் வந்த குதிரைகளும், நிலத்தில் வந்த மிளகுப் பொதிகளும், வட மலையில் தோன்றிய மாணிக்கமும் பொன்னும், குடகு மலையில் தோன்றிய சந்தனமும் அகிலும், தென்திசைக் கடலில் பிறந்த முத்தும், கீழ்த்திசைக் கடலில் பிறந்த பவளமும், கங்கையாற்றில் உண்டாகிய பொருளும், காவிரியாற்றில் உண்டாகிய பொருளும், இலங்கையிலிருந்து உணவுப் பண்டங்களும், கடாரத்தில்


தோன்றிய பொருள்களும் எல்லாம் அகன்ற தெருவில் குவிந்து கிடந்தன என வர்ணிக்கிறார் புலவர்.

''செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பிற்
செல்லா நல்லிசை யமரர் காப்பின்
நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்''

இவ்வாறாக பத்துப் பாட்டிலே உள்ள நூல்கள் அழகு தமிழுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

சங்க கால இலக்கியங்கள் பலவற்றை ஆராய்ந்தோம். அவை தமிழிலக்கியத்தின் ஒப்பற்ற திரவியங்கள் என்ற உண்மை ஐயந்திரிபற விளங்குகிறது. குறுந்தொகையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பேராசிரியர் இராமானுஜன் தமிழர்கள் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக எழுதிய இலக்கியங்களில், சங்க இலக்கியங்களைப் போல் உன்னத மானவை கிடையாது என அறுதியிட்டுக் கூறியிருக்கிறார். சங்க இலக்கியத்தின் மகிமைக்கு இதைவிட அத்தாட்சி வேண்டுமோ?

(இந்த ஆராய்ச்சிக் கட்டுரை சிட்னியில் 1992 மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது.)



# திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு

திருவள்ளுவர் தமிழகத்தில் தொண்டை நாட்டில் உள்ள மயிலாப்பூரில் கி.மு. முதலாம் நூற்றாண்டு பிறந்தார். அவர் தகப்பனாரின் பெயர் மயிலைக் கிழார் என்பதாகும். தமிழ வேள் என்ற உறவினர் அவருக்கு வள்ளுவர் என்ற பெயரைச் சூட்டினார். 'வள்ளுவர்' என்ற பெயருக்கு 'ஞானி' என்று பொருள். இளம் பிராயத்திலேயே எழுத்தாணி பிடித்து, ஏர் பிடித்து, வேலையும் பிடித்து வெற்றி கண்டார் வள்ளுவர்.

காவிரிப் பாக்கத்தில் வேளாளர் தலைவர் ஒருவரின் மகளான வாசுகியைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். தம்பதிகளுக்கு அழகே உருவான ஒரு மகள் பிறந்தாள். முல்லை என்று பெயர் சூட்டி அன்புடன் வளர்த்தார்கள். உலகில் காணப் படும் துன்பங்களுக்கு வறுமையே காரணம் என்பதை உணர்ந்த வள்ளுவர், ஏழைகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்துத் தாமே வறியவராகிவிட்டார். அதனால் தனது மாளிகையைவிட்டு ஒருமண்குடிலில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. குலத்தொழிலான நெசவுத் தொழிலைச் செய்து குடும்பம் நடத்தி வந்தார். அப்போது மயிலைக் கப்பல் வாணிகனான ஏலேல சிங்கனின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. ஏலேல சிங்கன் வள்ளுவரின் திறமையையும், அருமையையும் உணர்ந்து அவருடைய மாணவன் ஆனான்.

ஏலேல சிங்கனின் கப்பல் துறைமுகத்தில் தரை தட்டியிருந்தது. வள்ளுவரின் தவ வலிமையால் அவர் துறை முகத்துக்கு வந்து கயிற்றை இழுத்ததும் கப்பல் நிலையில் நின்றது. அன்றிலிருந்து ஏலேல சிங்கன் வள்ளுவரிடம் மாறாத பக்தி கொண்டான். நாளடைவில் அவனுக்கும், முல்லைக்கும் காதல் ஏற்பட்டது.

வள்ளுவரின் பெருமையை அறிந்து மாணவர் பலர் அவரிடம் கற்க வந்தனர். பாண்டிய மன்னன் உக்கிரப் பெரு வழுதி அவருக்கு "உள்படு கருமத் தலைவர்" என்ற உயர்ந்த வள்ளுவப் பதவியை அளித்தான். தன் கொள்கைகளை நிறை வேற்ற இறைவன் தந்த வாய்ப்பாக எண்ணி வள்ளுவர் அந்தப் பதவியை ஏற்று மதுரை வந்தடைந்தார். மன்னனின் மந்திரிக்கு இது வெறுப்பை உண்டாக்கியது. அவன் பலவிதக் குழப்பங்களை உண்டாக்கி மன்னனுக்கு இன்னல்களை ஏற்படுத்தினான். ஆனால் வள்ளுவரின் துணையால் மன்னனின் துன்பங்கள் நீங்கின. முல்லைக்கும் ஏலேல சிங்கனுக்கும் திருமணம் நடந்தது. பாண்டிய மன்னன் ஏலேல சிங்கனை ரோமாபுரிக்குச் செல்லும் வாணிகத் தூதுக் குழுவுக்குத் தலைவனாக அனுப்பினான். முல்லையிடம் பிரியாவிடை பெற்று ரோமாபுரிக்குச் சென்றான் அவன்.

சோழ மன்னன் கரிகாலன் பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கத் திட்டமிட, தூது சென்று அதைத் தடுத்துச் சமாதானத்தை நிலைநாட்டினார் வள்ளுவர். பாண்டிய நாட்டார் 'பெருநாவலர்' என்ற பட்டத்தையும், சோழ நாட்டார் 'செந்நாப் போதார்' என்ற பட்டத்தையும் அவருக்கு அளித்தார்கள். ஏலேல சிங்கனும் வெற்றிகரமாகத் தூதுக் குழுவை முடித்துக் கொண்டு ரோமாபுரியிலிருந்து மதுரைக்குத் திரும்பி வந்தான். பாண்டியனின் மந்திரியான ஆலவாயர் பாலில் நஞ்சைக் கலந்து கொடுத்து வள்ளுவரைக் கொல்ல முயற்சி செய்தார். ஆனால் வள்ளுவரின் தவ வலிமையால் அந்த முயற்சி பலிக்கவில்லை.

சில காலத்திற்குப் பின் வள்ளுவர் தனது பதவியைத் துறந்துவிட்டு மயிலை சென்று முப்பால் பாட முடிவு செய்கிறார். அதற்கு முன் இலங்கை, வாரணாசி, பாடலிபுத்திரம் ஆகிய இடங்களுக்குச் சென்று தம் கொள்கைகளை விளக்கினார். மயிலையில் மண் குடிசையில் தங்கித் திருக்குறளை இயற்றினார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் முதலில் சங்கப் புலவர்கள் குறளை ஏற்க மறுத்தனர். பின் ஔவையாரின் முயற்சியால் அதனை ஏற்கின்றனர். பண்டைய மரபின்படி குறளைப் பொற்றாமரை வாவியில் போட்டதும், குறள் அழகிய தாமரையில் மிதந்தது என்று ஒரு கதை உண்டு. புலவர்கள் எல்லோரும் குறளின் அருமையைப் புகழ்ந்து பாடினார்கள்.

வாசுகி நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாக இருக்கிறார். வள்ளுவர் அவரைக் கண்ணின் இமைபோல் காக்கிறார். வாசுகி மறைய அவர் துறவு பூணுகிறார். சில நாள்கள் கழித்து அவர் இயற்கை எய்தினார். மயிலையில் வள்ளுவரும், வாசுகியும் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கோயில் எழுப்பினான் ஏலேல சிங்கன். கோயிலை மக்களும், மன்னரும் வந்து வழிபட்டனர்.



# இளங்கோ அடிகள்

சிலப்பதிகாரம் தமிழ்நாட்டின் தலைசிறந்த கலைச் செல்வம். அது முற்காலத் தமிழகத்தின் சீர்மையை விளக்கும்; முத்தமிழின் பெருமையை முழக்கும். இத்தகைய செல்வத்தை எமக்கு வழங்கிய மாபெரும் கவிஞர் இளங்கோ அடிகள்.

சேர மன்னருள் தலைசிறந்து விளங்கிய நெடுஞ் சேரலாதனுக்கு மகனாகப் பிறந்தார் இளங்கோ அடிகள். அவரது அண்ணன் பெயர் செங்குட்டுவன். தனது அண்ணன் முறைப்படி அரசனாக வேண்டும் என்பதற்காகத் தன் இளவரச வாழ்வைத் துறந்து முனிவராக மாறினார் இளங்கோ அடிகள். அவரது மகத்தான தியாகம் தமிழ் உள்ளங்களை நெகிழ வைத்தது.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரம் என்னும் அருஞ்செல்வத்தை இளங்கோ அடிகள் கிட்டத்தட்ட கி.மு. 100ஆம் ஆண்டில் எழுதினார். சிலப்பதிகாரத்தின் கதையைக் கூறுவதன் மூலம் கவிஞரின் கவித்திறனை ஆராய் வோம்.

சிலப்பதிகாரத்தின் கதாநாயகியான கண்ணகி பிறந்த நாடு, புலவர் பாடும் புகழுடைய சோழ நாடு. சோழ வள நாட்டின் தலைசிறந்த துறைமுகமாக காவிரிப்பூம்பட்டினம் விளங்கியது.

**''முழங்கு கடல் ஞாலம் முழுவதும் வரினும்**
**வழங்கத் தவாஅ வளத்த தாகி.''**

எனக் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைக் கவிஞர் பாடுகிறார். பல நாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஒருங்கே சேர்ந்து வந்தாலும் தளராது தாங்கும் தகுதி வாய்ந்த நகரமாக காவிரிப்பூம்பட்டினம் விளங்கியது என்பதே இச்செய்யுளின் கருத்தாகும்.

கண்ணகி காவிரிப்பூம்பட்டினத்திலே பிறந்து வளர்ந்து ஒத்த குலமும், நலமும் வாய்ந்த கோவலனை மணந்தாள். வாணிபத்தால் ஏற்பட்ட செல்வவளம் பெற்று கோவலனும்

கண்ணகியும் இன்புற்று வாழ்ந்தனர். ஆனால் இந்த இன்ப வாழ்க்கையில் விதி விளையாடியது. காவிரிப்பூம்பட்டினத்தில் நிகழ்ந்த விழாவில் மாதவியென்னும் பொதுமகள் நாட்டியம் ஆடினாள். மாதவியின் அழகில் மயங்கினான் கோவலன். மாதவியிடம் கொண்ட மையலால் உத்தம பத்தினியாம் கண்ணகியைத் துறந்தான். மாதவியை மகிழ்விப்பதற்காக அளவிறந்த பொருளைச் செலவிட்டான். தன்னந்தனியாய் இருந்து கவலையுற்றாள் கண்ணகி. இதைக் கவிஞரின் செய்யுள் அழகாக விவரிக்கிறது.

> **"கூடினார் பால்நிழலாய், கூடார் பால் வெய்யதாய்க்**
> **காவலன் வெண்குடைபோல் காட்டிற்றே – கூடிய**
> **மாதவிக்கும் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து**
> **போதவிழ்க்கும் கங்குற் பொழுது."**

வெண்ணிலாவின் ஒளி வீசி போதாக நின்ற பூக்கள் இதழ் விரிக்கும் மாலைப் பொழுதில் கண்ணகி துன்பத்தில் இருக்கும்போது மாதவி மகிழ்ச்சியாய் இருந்தாள் என்பதே இச்செய்யுளின் கருத்தாகும்.

மாதவியின் வலையில் சிக்கிய கோவலன் தன் பொருள் எல்லாம் இழந்தான். கண்ணகியின் ஆபரணங்களும் அணி கலன்களும் ஒன்றன்பின் ஒன்றாய் அழிந்தன. அவள் காலணி யாகிய சிலம்பு ஒன்றே எஞ்சி நின்றது. இந்நிலையில் பொருளில்லாத கோவலனுக்கும் மாதவிக்கும் பிணக்கு ஏற்பட்டு, மாதவி கோவலனைப் பிரிந்தாள். கோவலன் மீண்டும் கண்ணகியைச் சேர்ந்தான். வாழ்ந்துகெட்ட வள நகரில் இருப்பதற்கு நாணி, இருவரும் மதுரைக்குப் புறப்பட்டனர். கோவலன் மதுரையில் கண்ணகியின் சிலம்பை விற்றுப் பிழைப்பிற்கு வழி தேடக் கருதினான். அதற்காக ஒற்றைச் சிலம்பை எடுத்துக் கொண்டு கடைத் தெருவுக்குச் சென்றான். அங்கு அரண்மனைச் சிலம்பைக் களவாடிய கள்வன் என்று பழி சுமத்திக் கைது செய்தனர் காவலர். அதற்குத் தண்டனையாக

அரசன் ஆணையால் கோவலன் கொலை செய்யப்பட்டான். கணவனுக்கு நேர்ந்த கொடுமையை அறிந்த கண்ணகி மனம் துடித்துக் கண்ணீர் வடித்துத் தலைவிரி கோலமாக அரண் மனையை நோக்கி நடந்தாள்.

**''வாயின் கடைமணி நடுநா நடுங்க**
**ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத் தான் தன்**
**அரும் பெறற் புதலவனை ஆழியின் மடித்தோன்**
**பெரும் பெயர்ப் புகார் என் பதியே.''**

அரசன், கண்ணகியிடம் ''மாதே, நீ யார்?'' என வினாவினான். கண்ணகி, புகார் நகரமே (காவிரிப்பூம்பட்டினம்) தனது ஊர், எனக் கூறினாள். கன்றைக் கொன்ற குற்றத்திற்காகத் தன் மகனையே கொன்ற மனுநீதிச் சோழன் ஆண்ட புகார் நகரமே தான் வாழும் நகரம் எனக் கூறினாள்.

அரசன் ஆணையால் கொலை செய்யப்பட்ட கோவலனின் மனைவி என்று தன்னை அறிவித்தாள் கண்ணகி. கள்வனைக் கொல்லுதல் காவலன் கடமை என நீதி முறையை எடுத்துரைத்தான் வேந்தன். அதைக் கேட்ட கண்ணகியின் உள்ளம் கொதித்தது. ''என் கணவன் கள்வன் அல்லன். அவன் கையில் இருந்தது என் சிலம்பு. அதனுள்ளே அமைந்தது பரல் மாணிக்கம்'' எனக் கனன்று உரைத்தாள். உடனே அச்சிலம்பை எடுத்து வந்தான் மன்னன். சிலம்பு உடைபட்டது. உள்ளிருந்த மாணிக்கம் துள்ளி எழுந்து மன்னன் முன்னே விழுந்தது. அதைக் கண்டு திடுக்கிட்டான் அரசன். கோவலன் கள்வன் அல்லன், அவனுயிரைக் கவர்ந்த தானே கள்வன் என உணர்ந்தான். நீதிக்கு முரண்பாடாக நடந்த அதிர்ச்சியால் மயங்கி விழுந்து மாண்டான்.

**''யானோ அரசன் யானே கள்வன்**
**மன்பதை காக்கும் தென் புலங்காவல்**
**என் முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்''**

எனக் கவிஞர் மன்னன் மாண்டதை எடுத்துரைக்கிறார்.

மன்னனின் மனைவியாகிய கோப்பெருந்தேவியும் கணவுன் இறந்த துயரத்தால் உயிர் துறந்தாள்.

வீர பத்தினியாகிய கண்ணகி மதுரையை விட்டு நீங்கி சேர நாடடைந்து தெய்வீகமுற்றாள்.

> "தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுவாளைத்
> தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால் – தெய்வமாய்
> மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
> விண்ணக மாதர்க்கு விருந்து."

என இளங்கோ அடிகள் கற்பின் செல்வியாம் கண்ணகியைப் போற்றுகின்றார். கண்ணகியின் வீர வரலாறு சேர நாடு முழுவதும் பரவியது. அந்நாட்டு மன்னன் செங்குட்டுவன் வஞ்சி மாநகரில் கண்ணகிக்குக் கோவில் அமைக்க விரும்பினான். சேரன் செங்குட்டுவன் இமயத்தில் கல் எடுத்து, கங்கையில் நீராட்டிக் கண்ணகிக்குச் சிலை அமைக்க விரும்பினான். அதற்காக வட நாட்டிற்குப் படை எடுத்தான். வடநாட்டில் தமிழ்ச்சேனைக்கும் வடவர் சேனைக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. போரில் மாபெரும் வெற்றி கண்டான் மாவீரன் செங்குட்டுவன். தமிழ் மன்னர்களின் வீரத்தைப் பழித்துரைத்த கனக விசயர் என்னும் இரு வடநாட்டு அரசர்கள் கைது செய்யப்பட்டனர். அவ்விருவர் தலையிலும் இமயமலையில் எடுத்த கல்லை ஏற்றினான் செங்குட்டுவன். இவ்வாறு வெற்றிவாகை சூடிய தமிழ் மன்னன் வஞ்சி மாநகர் வந்தடைந்து பத்தினித் தெய்வமாம் கண்ணகிக்குச் சிலை அமைத்தான்.

சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்க் காப்பியத்தின் மூலம் இளங்கோ அடிகள் மூன்று உண்மைகளை நன்கு விளக்கினார். நீதி தவறிய அரசரை அறமே ஒறுக்கும் என்பதும் கற்புடைய மாதரை மண்ணும் விண்ணும் வணங்கும் என்பதும் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும் சிலப்பதிகாரத்தில் தெளிவாக உணர்த்தப்படுகின்றன.

# புகழேந்தியின் புலமை

16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழேந்திப் புலவர், ''நள வெண்பா'' என்னும் இனிய காவியத்தை எழுதி அழியாப் புகழ் பெற்றார். வெண்பா என்பது நான்கு வரிகள் கொண்ட ஒரு பாட்டாகும். நள வெண்பாவில் 424 வெண்பாக்கள் உள்ளன. அவை சொற்சுவையும் பொருட்சுவையும் கலந்து படிப்பவர்களுக்குப் பெரும் இன்பம் அளிக்கின்றன. மேலும் பாட்டுகள் எளிய நடையிலும், இனிய ஓட்டத்திலும் அமைந்திருக்கின்றன. நள வெண்பாவில் காணப்படும் உவமான உவமேயங்கள் ஈடும், எடுப்பும் இல்லாதவை என்பது தமிழ் அறிஞர்களின் கருத்தாகும். வெண்பா பாடுவதில் பிரசித்தி பெற்று விளங்கியதால், ''வெண்பாவிற் புகழேந்தி'' என்ற பட்டப்பெயர் அவருக்கு அளிக்கப்பட்டது.

**நள வெண்பா:**

நள வெண்பா தமிழர் மனதைக் கவர்ந்த ஒரு அழகிய காவியமாகும்.அது நளனதும், தமயந்தியினதும் கதையை அழகாக எடுத்துரைக்கிறது. நீர்மை நிறைந்த நிடத நாட்டை, நேர்மை நிறைந்த நளன் சீர்மையுடனும், சிறப்புடனும் அரசாண்டு வந்தான். விதர்ப்ப நாட்டரசன் வீமனின் அருமைப் புதல்வியான தமயந்தி, சுயம்வரம் வைத்து நளனை மணாளனாகத் தேர்ந்தெடுத்தாள். தம்பதியரின் இன்ப வாழ்க்கையில் விதி விளையாடியது. அயல் நாட்டரசனான புட்கரன் வஞ்சக நெஞ்சம் கொண்டு, நளனைச் சூதாட அழைத்தான். மாய விதியின் வலிப்பட்ட நளன், நன் மந்திரிமார் எவ்வளவோ தடுத்தும் கேளாமல் சூதாட இசைந்தான். அவ்வாறு சூதாடிய நளன் பெரும் தோல்வி அடைந்து அவனுடைய நாடு, நகரம், சொத்து யாவும் இழந்தான். அதனால் அவன் மனைவி, மக்களுடன் நிடத

நாட்டை விட்டுப் பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. மனைவியும், பிள்ளைகளும் மாமன் வீமனுடன் இருக்க, நளன் தனியே வாழ்ந்து பல இன்னல்களுக்கு ஆளானான். இதனைக், ''கலித்தொடர் காண்டம்'' என்ற அத்தியாயத்தில் புலவர் அழகாக எடுத்துக் கூறுகிறார். நளன் மீண்டும் சூதாடிப் புட்கரனிடமிருந்து தனது நாட்டையும், செல்வத்தையும் கைப்பற்றுகிறான். தமயந்தியும், அவனும் நன் மக்களுடன் கூடிச் சேர்ந்து இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே நடத்துகின்றனர். காவியம் இன்பமாக முடிவடைகிறது.

புலவரின் கவித்திறனை எடுத்துக்காட்ட சில வெண்பாக்களை ஆராய்வோம். எல்லாம் வல்ல இறைவனாம் சிவபெருமானைப் பற்றிப் புலவர் எவ்வாறு பாடுகிறார் தெரியுமா?

> **''செக்கர் நெடுவானில் திங்கள் நிலாத்துளும்பி**
> **உக்க தெனச்சடைமேல் உம்பர்நீர் – மிக்கொழுகும்**
> **வெள்ளத்தான் வெள்ளி நெடுங்கிரியான் மெய்யன்பர்**
> **உள்ளத்தான் எங்கட் குளன்.''**

வெள்ளி நெடுங்கிரியான இமயமலையில் உறையும் இறைவன் உண்மையான பக்தர்களிடம் கொண்டிருக்கும் அன்பு, முழு நிலா எவ்வாறு வானத்தில் துளும்பிக் கொண்டிருக்கிறதோ, அதைப்போல அளவு கடந்தது என்பதே இந்த வெண்பாவின் கருத்தாகும். எதுகையும், மோனையும் கொண்டு எவ்வளவு அழகாக வெண்பாவைப் படைத்திருக்கிறார்! அடுத்த வெண்பா மங்கையொருத்தியின் அழகை விவரிக்கிறது. மலர் பறிக்கப்போன மங்கையின் முகத்தைத் தாமரை என நினைத்த வண்டு அவள் முகத்தில் போய்ப் படிகிறது. மங்கையோ முகத்திலிருந்து வண்டை விரட்ட கையை வீசுகிறாள். அவள் கையைப் பார்த்த வண்டு அதை அல்லி மலரென நினைக்கிறது. அவ்வாறு நினைத்த

வண்டு, அவள் முகத்திலிருந்து கைகளுக்குப் பாய்கிறது. இதனால் வியர்வை சொட்ட நின்றாளாம் மங்கை எனக் கவிஞர் பின்வருமாறு பாடுகிறார்:

**''மங்கையொருத்தி மலர் கொய்வாள் வான் முகத்தைப்**
**பங்கயம் என்றெண்ணிப் படிவண்டைச் செங்கையாற்**
**காத்தாளக் கைமலரைக் காந்தளெனப் பாய்தலுமே**
**வேர்த்தாளைக் காணென்றான் வேந்து.''**

நளன் புட்கரனுடன் சூதாட நினைத்தபோது அவனது மந்திரிமார் சூதாட வேண்டாமென அவனுக்கு அறிவுரை கூறினர். இதை வெண்பா மூலம் அழகாக எடுத்துரைக்கிறார் கவிஞர். சூதாடுதல் பெரும் பாவங்களில் ஒன்றாகும் எனக் கவிஞர் கூறுகிறார்.

**''காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய் மொழிதல்**
**ஈதன் மறுத்தல் இவையாவும் – போதிற்**
**சினையாமை வைகும் திருநாடா செம்மை**
**நினையாமை பூண்டார் நெறி.''**

அன்னத்தின் நடையையும், அழகையும் புகழாத கவிஞர் இல்லை. தாமரைக் குளத்தில் புகுந்து அன்னத்தைப் பிடித்த நளன், ''அன்னமே அஞ்சாதே! நான் உன்னை வருத்த மாட்டேன். உன்னுடைய நடை அணிநடை என்றும், மங்கையர் நடை மணிநடை என்றும் புலவர்கள் பாடுகிறார்கள். இதில் எது சிறந்தது என நேரில் அறிந்து கொள்ளவே உன்னைப் பிடித்தேன்'' என அன்னத்திடம் கூறினான். இதைப் பின்வரும் வெண்பா இனிதாகச் சொல்லுகிறது:

**''அஞ்சல் மடஅனமே! உன்றன் அணிநடையும்**
**வஞ்சி அனையார் மணிநடையும் – விஞ்சியது**
**காணப் பிடித்ததுகாண்! என்றான் களிவண்டு**
**மாணப் பிடித்ததார் மன்.''**

புட்கரனுடன் சூதாடி யாவும் தோற்றபின், நளன் தனது மடமையை நினைத்து மிகவும் மனம் வருந்தினான். தனது அருமை மக்கள் படும் துயரத்தைக் கண்டு அவன் செய்வதறியாது ஓர் சித்திரம் போல் நின்றான் எனப் புலவர் மிகவும் உருக்கமாக அவனது மனத்துன்பத்தை எடுத்துக் கூறுகிறார். நெறி நிறைந்தவன் தவறு செய்தால் எவ்வளவு துன்பப்படுவான் என்பதை இந்த வெண்பா அழகாக விளக்கிக் காட்டுகிறது:

**"தூயதன் மக்கள் துயர்நோக்கிச் செல்கின்ற**
**மாய விதியின் வலிநோக்கி – யாதும்**
**தெரியாது சித்திரம் போல்நின்றான் செம்மை**
**புரிவான் துயராற் புலர்ந்து."**

புகழேந்திப் புலவர் எழுதிய நளவெண்பா அழகும், இனிமையும் கலந்த காவியமாகும். சொற்சுவையும், பொருட் சுவையும் ஒருங்கே அமைந்த அவரது வெண்பாக்கள் தமிழ் மொழியின் இனிமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன எனக் கூறுவது மிகையாகாது.



# கம்பரின் கவித்திறன்

தமிழ் இலக்கிய வானில் பேரொளி வீசும் ஒப்பற்ற கவிஞர் கம்பர். பாரதியார் 'கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று கூறிக் கம்பரால் தமிழ்நாடு பெருமை பெற்றது என்று பாராட்டுகிறார். தமிழ்நாட்டிலே மாயூரத்துக்கு அருகே ஒரு சிற்றூரில் பிறந்த அவர், உலகின் சிறந்த கவிஞர்களில் ஒருவராக மதிக்கப்படுகிறார். 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்' என்ற பழமொழி கம்பரின் கவித்திறமையை அழகாக எடுத்துக்கூறுகிறது.

கம்பருடைய காலம் 10ஆம் நூற்றாண்டு என ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். அவர் மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்தார். சடையப்பர் என்ற வள்ளல் அவரை ஆதரித்து வளர்த்ததாக வரலாறு கூறுகிறது. நன்றி மறவாத கம்பர், சடையப்ப வள்ளலின் பெருமையைப் போற்றி இராமாயணத்தில் பல பாட்டுகளைப் பாடியுள்ளார். சோழ மன்னன் குலோத்துங்கனின் அவையில் அவர் அரசாங்கக் கவிஞராகப் பணியாற்றினார். இரண்டாம் அவ்வையாரோடு அவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. அவர் பல நூல்களை எழுதினாலும், அவருக்கு புகழைக் கொடுத்தது கம்ப ராமாயணமேயாகும். பத்தாயிரம் பாட்டுகளைக் கொண்ட இராமாயணம் திருவரங்கத்தில் அரங்கேற்றப்பட்டது.

வால்மீகி இயற்றிய ஆதி காவியத்தைப் பின்பற்றிக் கம்பர் தம் காவியத்தை எழுதியபோதிலும், கம்பராமாயணம் வெறும் மொழிபெயர்ப்பு அல்ல என்பதை நாம் உணர வேண்டும். கம்பர் வால்மீகியின் கதையைத் தழுவி ஒரு புதுக் காவியமே இயற்றினார். வால்மீகியின் இராமாயணத்துக்கும், கம்பராமாயணத்துக்கும் பல வித்தியாசங்கள் இருக்கின்றன என்பது அறிஞர் கண்டறிந்த உண்மை. கம்பருக்குப் பிறகே இந்தியா முழுவதும் இராம வழிபாடு பெருகியது என்பதை நாம் மறக்கலாகாது. கம்பரின் கவித்திறனை எடுத்துக்காட்ட அவரின்

உன்னத படைப்பிலிருந்து சில கவிதைகளை எடுத்துக்காட்டி அவற்றிற்கு விளக்கம் கூறுவோம்:

"வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் உரைஇ லாமையால்
ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்."

இந்தப் பாடல் கோசல நாட்டின் சிறப்பைக் கூறுகிறது. ஒரு நல்ல நாடு இப்படி இருத்தல் வேண்டும் என்று அரசியல் ஞானி ஒருவர் வகுத்த நல்ல இலக்கணமாகவும் உள்ளது. அடுத்த பாடல் தசரதச் சக்கரவர்த்தியின் சிறந்த ஆட்சியை எடுத்துக்கூறுகிறது:

"தாய் ஒக்கும் அன்பில்; தவம் ஒக்கும் நலம் பயப்பில்
சேய் ஒக்கும், முன் நின்று ஒரு செல் கதி உய்க்கும் நீரால்
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும்; நுணங்கும் கேள்வி
ஆயப் புகுங்கால், அறிவு ஒக்கும்; – எவர்க்கும் அண்ணான்"

தசரதன் தனது குடிமக்களுக்குத் தாயைப் போலவும், தவத்தைப் போலவும், மகனைப் போலவும், மருந்தைப் போலவும், அறிவைப் போலவும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இருந்தான் எனக் கவிஞர் அழகாக எடுத்துக்கூறுகிறார். அடுத்த பாட்டு சுக்கிரீவனுக்கும், விபீஷணனுக்கும் உள்ள நட்பின் தூய்மையை விளக்கிக் கூறுகிறது:

"தொல்லருங் கால மெல்லாம்
பழகினும் தூய ரல்லார்
புல்லலர் உள்ளம் தூயார்
பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந்து உணர்வும் ஒன்ற
இருவரும் ஒருநாள் உற்ற
எல்லியும் பகலும் போலத்
தழுவினர் எழுவிற் றோளார்."

தேசத்தாலும், குலத்தாலும், நிறத்தாலும் வேறுபட்ட சுக்கிரீவனும், விபீஷணனும் உள்ளங்கலந்து ஒருவரையொருவர் தழுவிய கோலம், பகலொளியும், காரிருளும் கலந்த காட்சியை ஒத்தது என்று கூறுகிறார் கவிஞர். வானர நாட்டிலிருந்து வாலியால் துரத்தப்பட்டவன் சுக்கிரீவன். இலங்கையிலிருந்து இராவணனால் துரத்தப்பட்டவன் விபீஷணன். இருவரும் இராமனைச் சரண் அடைந்தனர். பிறந்த இடத்தில் விளைந்த தீமையாலும், அடைக்கலம் புகுந்த இடத்தில் பெற்ற நன்மையாலும் இருவரும் ஒத்த உணர்ச்சியுற்றார்கள் என அழகாகப் பாடுகிறார் கவியரசர்.

அடுத்த பாட்டு ஒரு உருக்கமான பாட்டாகும். இராவணன் போர்க்களத்தில் மாண்டு கிடக்கும் காட்சியை விவரிக்கும்போது கம்பரின் ஒப்பற்ற திறமை தெள்ளிதிற் புலனாகிறது:

**''வெம்மடங்கல் வெகுண்டனைய சினம்அடங்க**
**மனம்அடங்க வினையும் வீயத்**
**தெம்மடங்கப் பொருதடக்கைச் செயல் அடங்க**
**மயல்அடங்க ஆற்றல் தேயத்**
**தம்அடங்கு முனிவரையும் தலைஅடங்க**
**நிலைஅடங்கச் சாய்த்த நாளின்**
**மும்மடங்கு பொலிந்தனஅம் முறைதுறந்தான்**
**உயிர்துறந்த முகங்கள் அம்மா.''**

பொல்லாத சிங்கம் போன்ற இராவணனது சினம் அடங்கியது; மனம் அடங்கியது; வினையும் அழிந்தது; பகைவர்களை ஒழிக்கும் நீண்ட கைகளின் வீரம் அடங்கியது; அவனுடைய காம மயக்கம் அடங்கியது; வாழ்ந்த காலத்தில் இருந்ததைவிட அவன் உயிர் துறந்து வீழ்ந்து கிடக்கும்போது அவன் முகங்கள் மூன்று மடங்கு பொலிவு பெற்றுவிட்டன என்று உருக்கமாகப் பாடுகிறார் கம்பர்.

மேற்கூறிய உதாரணங்களிலிருந்து கம்பரின் கவித்திறமை தெளிவாகிறது. அவர் ஒரு கவிச்சக்கரவர்த்தி என்பதில் சற்றேனும் ஐயம் இல்லை.

# கொடை வள்ளல் குமணனின் பெருமை

**ப**ண்டைய தமிழ்நாட்டில் பாரியும், ஓரியும், அதியனும், மலையனும், ஆயும், பேகனும், குமணனும் சிறந்த கொடை வள்ளல்களாக விளங்கினர். முதிர மலைத் தலைவனாக வாழ்ந்த குமணன் மிகவும் பரோபகார சிந்தை கொண்டவனாக இருந்தான். வறுமையால் வாடிய பல மக்கள் அவனிடம் சென்று தமது குறைகளை எடுத்துரைப்பார்கள். அப்போதெல்லாம் அவர்களுக்கு வாரி, வாரி வழங்கினான் குமணன். அவனிடம் சென்று தனது வறுமையைப் போக்கிக் கொண்ட ஒரு புலவர் பின்வருமாறு கூறுகிறார்:

**''பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்**
**திருந்து வேல்குமணன் நல்கிய வளனே.''**

இவ்வாறு எல்லோர்க்கும் இல்லையென்று ஈந்த குமணனது புகழ் நாடெங்கும் பரவியது. கொடையில் சிறந்தவன் குமணன் என்று கற்றோரும், மற்றோரும் அவனை வாழ்த்தினார்கள். அவன் தம்பியாகிய இளங்குமணன் அவன் மீது தாங்காத அழுக்காறு கொண்டான். குமணன் ஆண்ட நாட்டைக் கைப்பற்றி அவனைக் காட்டிற்கு ஓட்டினான். மேலும் குமணனது தலையைக் கொண்டு வருபவர்களுக்கு பரிசளிப்ப தாகவும் அறிவித்தான்.

வள்ளலைக் காணாது வறியோர் வாடினர். குலப் பெருமையை அழித்த இளங்குமணனை அவர்கள் அமணன் என்று அழைத்தனர். நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட குமணன் காட்டில் காயும், கனியும் தின்று வாழ்ந்தான். அப்போது ஒரு புலவர் அவனைக் காணச் சென்றார். ''ஐயனே, தாங்காத வறுமையால் வாடுகிறேன். அதனால் உன்னைக் காண

வந்தேன். ஆனால் இப்போது உன் நிலை கண்டு என் உள்ளம் பரிதவிக்கிறது'' என்றார்.

இல்லையென்று ஒருபோதும் சொல்லி அறியாத குமணன் கூறும் வார்த்தைகள் தமிழ் நெஞ்சங்களை உருக வைக்கின்றன. ''புலவரே, உமது வறுமை என் உள்ளத்தை நெகிழ வைக்கிறது. எனது தலையை என் தம்பியிடம் கொண்டு போய்க் கொடுத்து உமது வறுமையை அகற்றுவீராக'' எனக் கூறிய குமணன் தனது உடைவாளைப் புலவரிடம் கொடுக்கிறான். ஈகையே உயிரினும் சிறந்தது என நினைத்த குமணனின் இயல்பை எவ்வாறு எடுத்துரைப்பது?

> **''தலைதனைக் கொடு போய்த் தம்பி கைக்கொடுத்து**
> **விலைதனை மீட்டுநின் வறுமை நோய் களையே.''**

என்ற கூற்று குமணனுக்கு அழியாப் புகழை அளித்தது. புலவ'ர் உடனே அமணனிடம் சென்று குமணன் கூறியதைச் சொல்கிறார். கவிஞரின் கரைந்துருகும் மொழிகளால் அமணன் மனம் நெகிழ்ந்தது. தன் தவறை உணர்ந்து உடனே கானகம் சென்று குமணனை அழைத்து வந்தான். குமணன் முன்போலவே கொடை செய்து அழியாப் புகழ் எய்தி அமரனானான்.



# கலிங்கத்துப் பரணி

கலிங்கத்துப் பரணி தமிழரின் தலைசிறந்த போர்க் காவியமாகும். இந்நூலின் ஆசிரியர் சயங்கொண்டார். அவருடைய நூலே பரணி என்னும் இலக்கிய வகையில் மிகவும் சிறப்பு உடையதாக இருக்கிறது. ஆயிரம் யானைகளைப் போர்க்களத்தில் வென்று வெற்றியை நிலைநாட்டிய வீரன் ஒருவனைப் புகழ்ந்து பாடும் ஒருவகை நூல் பரணியாகும். கி.பி. 11ஆம் நூற்றாண்டில் சோழ அரசன் குலோத்துங்கன் கலிங்கத்தின் மேல் படையெடுத்துப் போர் செய்து வெற்றி பெற்றான். பெருவீரனான கருணாகரத் தொண்டைமான் என்பவன் சோழப் படைகளுக்குத் தலைமை தாங்கினான். தோற்ற அரசனுடைய நாட்டில் பரணி பாடப்படுவதால், தோற்ற நாட்டுப் பெயராலே நூலை வழங்குவது மரபு ஆயிற்று. தோற்ற நாடு கலிங்கம் ஆதலால், நூல் கலிங்கத்துப் பரணி எனப் பெயர் பெற்றது.

இரண்டு அடிகளால் ஆன தாழிசை என்னும் செய்யுள் வகையால் நூல் இயற்றப்பட்டது. போர் நிகழ்ச்சிகளின் வேகத்திற்கும், கொடுமைக்கும் ஏற்ப ஓசைகளை வேறுபடுத்திக் காட்டுவதில் புலவர் வல்லவராக இருந்தார். சொற்களின் ஓசையும் பொருளும் சேர்ந்து படிப்பவரின் மனக்கண்ணின் முன்னே போர்க்களத்தையே நிறுத்திவிடுகின்றன. பின்வரும் செய்யுள்கள் கலிங்கத்துப் பரணியின் புகழை விளக்குகின்றன.

இந்தப் பாடல் போர்க்களத்தின் ஓசைகளைக் குறிக்கிறது.

‘‘எடும்எடும் எடும்என எடுத்ததோர்
இகல்ஒலி கடல்ஒலி இகக்கவே
விடும்விடும் விடுபரி கரிக்குழாம்
விடும்விடும் எனஒலி மிகைக்கவே.

விளைகனல் விழிகளின் முளைக்கவே
மினல்ஒளி கனலிடை பிறக்கவே
வளைசிலை உரும்என இடிக்கவே
வடிகணை நெடுமழை சிறக்கவே.''

இந்தப் பாடல் சோழர் பெற்ற வெற்றியைக் குறிக்கிறது.

''புண்தரு குருதி பாயப்
பொழிதரு கடமும் பாய
வண்டொடும் பருந்தினோடும்
வளைப்புண்ட களிறு அநேகம்!
ஓட்டு அறப்பட்ட போரில்
ஊர்பவர் தம்மை வீசிக்
கட்டு அறுத் தவர்போல் நின்று,
கட்டுண்ட களிறு அநேகம்!
வரை சில புலிக ளோடு
வந்து கட்டுண்ட வேபோல்,
அரைசரும் தாமும் கட்டுண்டு
அகப்பட்ட களிறு அநேகம்!''

இந்த நூல் ஓர் ஒப்பற்ற காவியம் என்பது வெள்ளிடை மலை.



# பாரதியாரின் பாட்டின்பம்

அமரகவி பாரதியாரைப் பற்றிப் படிப்பது இன்பம்! பாடுவது இன்பம்! கேட்பது இன்பம்! நினைப்பது இன்பம்! எழுதுவது இன்பம்!

உலகிலே இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களில் ஒருவர் மகாகவி பாரதியார். அவர் தமிழிலக்கியம் என்னும் வானிலே அன்றும் இன்றும் என்றும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் விண்மீன்! காலத்தால் அழிக்கமுடியாத பாரதியாரின் கவிதைகள் என்றும் தமிழருக்கு உணர்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்துக் கொண்டுதான் இருக்கும்.

பாரதியார் பலவகையான பாடல்களை எழுதினார். அவர் எழுதாத விடயமே கிடையாது எனக் கூறலாம். தேசீய கீதங்கள், பக்திப் பாடல்கள், ஞானப் பாடல்கள், தமிழைப் பற்றிய பாடல்கள் இப்படி அடுக்கடுக்காகக் கூறிக்கொண்டே போகலாம். பின்வரும் பாட்டு தமிழைப் பற்றியது:

**''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்;**
**பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்**
**இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,**
**நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு**
**வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!**
**தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும்வகை செய்தல் வேண்டும்.**

**யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,**
**வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை;**
**உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை;**

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!''

இந்த பாட்டை வாசித்ததும் உணர்ச்சி வெள்ளம் பெருகுகிறது அல்லவா?

பண்டைய தமிழகம் எவ்வளவு சீராகவும், சிறப்பாகவும் இருந்தது என்பதை பாரதியார் படம் பிடித்துக் காட்டுகிறார்.

''வேதம் நிறைந்த தமிழ்நாடு – உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு – நல்ல
காதல் புரியும் அரம்பையர்போல் – இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு.

காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி – என
மேவிய யாறு பலவோடத் – திரு
மேனி செழித்த தமிழ்நாடு.

நீலத் திரைக்கட லோரத்திலே – நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை – வட
மாலவன் குன்றம் இவற்றிடையே – புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் – மணி
யாரம் படைத்த தமிழ்நாடு.

சிங்களம் புட்பகம் சாவக – மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி – அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் – நின்று
சால்புறக் கண்டவர் தமிழ்நாடு.

விண்ணை இடிக்கும் தலையிமயம் – எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார் – சமர்
பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத்தார் – தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு.

சீன மிசிரம் யவனரகம் – இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் – கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு.''

வேதம் நிறைந்த நாடு; வீரம் செறிந்த நாடு; கல்வி சிறந்த நாடு என்றெல்லாம் விவரித்துத் தமிழ்நாட்டின் மீதுள்ள பற்றைக் காட்டுகிறார். ஞான அமுதான குறளை எழுதிய வள்ளுவன் பிறந்ததால் பார் புகழும் பெருமை பெற்றதாம் தமிழ்நாடு எனக் கூறுகிறார். மேலும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று அருந்தமிழ்க் காப்பியத்தை வர்ணிக்கிறார் புலவர். உண்மைதானே! சிலப்பதிகாரம் சிந்தைக்கு இனிமை அளிக்கும் தகைமை படைத்தது அல்லவா?

பாரதியார் சுதந்திரத்தைப் பற்றி எழுதிய பாடல்கள் உணர்ச்சியைப் பெருக்கெடுத்தோட வைக்கின்றன என்று கூறுவது மிகையாகாது. ''என்று எமது சுதந்திர தாகம் தீரப் போகிறது? என்று எமது அடிமைத்தனம் அழியப் போகிறது?'' என்று அவர் பாடிய பாடல் உள்ளத்தை உருக வைக்கிறது அல்லவா?

''என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?
அன்றொரு பாரதம் ஆக்க வந்தோனே!
ஆரியர் வாழ்வினை ஆதரிப் போனே!

வென்றி தருந்துணை நின்னரு ளன்றோ?
மெய்யடி யோம்இன்னும் வாடுதல் நன்றோ?
பஞ்சமும் நோயும்நின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?
தஞ்ச மடைந்தபின் கைவிட லாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?
அஞ்சலென் றருள்செயுங் கடமையில் லாயோ?
ஆரிய! நீயும்நின் அறம்மறந் தாயோ?
வெஞ்செயல் அரக்கரை வீட்டிடு வோனே!
வீர சிகாமணி! ஆரியர் கோனே!''

பாரதியார் சமூகப் புரட்சி புரிவதில் வல்லவர். சமூகத்தில் உள்ள ஏற்ற தாழ்வுகளைக் கண்டு அவர் மனம் வெதும்பியது. 'நடிப்புச் சுதேசிகள்' என்ற பாடலில் தம்முடைய நாட்டு மக்கள் துன்பத்தில் வாடுவது கண்டும் இரங்காதோரைக் கண்டு அவர் மனம் கொதித்து எழுதினார்.

''கூட்டத்திற் கூடிநின்று கூவிப் பிதற்றலன்றி,
நாட்டத்திற் கொள்ளா ரடீ – கிளியே!
நாளில் மறப்பா ரடீ!
சொந்த அரசும்புவிச் சுகங்களும் மாண்பு களும்
அந்தகர்க் குண்டாகுமோ? – கிளியே!
அலிகளுக் கின்ப முண்டோ?
கண்கள் இரண்டிருந்தும் காணுந் திறமையற்ற
பெண்களின் கூட்டமடீ! – கிளியே!
பேசிப் பயனென் னடீ!
யந்திர சாலையென்பர் எங்கள் துணிகளென்பர்
மந்திரத்தாலே யெங்கும் – கிளியே!
மாங்கனி வீழ்வ துண்டோ?
உப்பென்றும் சீனிஎன்றும் உள்நாட்டுச் சேலைஎன்றும்
செப்பித் திரிவா ரடீ! – கிளியே!
செய்வ தறியா ரடீ!

தேவியர் மானம்என்றும் தெய்வத்தின் பக்திஎன்றும்
நாவினாற் சொல்வ தல்லால்! – கிளியே!
நம்புத லற்றா ரடீ!
மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர்செய்யப்
பேதைகள் போலு யிரைக் – கிளியே!
பேணி யிருந்தா ரடீ!"

பாரதியாரின் பக்திப் பாடல்களை நோக்கும்போது அவர் ஒரு சிறந்த கடவுள் பக்தர் என்பது தெள்ளெனத் தெளிவாகிறது. மனிதரிடையே கலகக்காரர் பலர் இருப்பது கண்டு முத்து மாரியிடம் நெஞ்சுருக வேண்டுகிறார் பாரதியார்.

"கலகத் தரக்கர்பலர், – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

பலகற்றும் பலகேட்டும், – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
பயனொன்று மில்லையடி – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

நிலையெங்கும் காணவில்லை – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
நின்பாதம் சரண்புகுந்தோம், – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

துணிவெளுக்க மண்ணுண்டு, – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
தோல்வெளுக்கச் சாம்பருண்டு, – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!"

கண்ணன் மீது வைத்த தீவிர பக்தியின் காரணமாக பல கண்ணன் கவிதைகள் பாடியிருக்கிறார் பாரதியார். எனவே, கண்ணன் என் தாய், கண்ணன் என் தந்தை, கண்ணன் என்

தோழன், கண்ணன் என் சேவகன் எனப் பல பாடல்கள் எழுந்தன. கண்ணன் என் சேவகன் என்ற பாட்டு மிகவும் உருக்கமானது. எங்கிருந்தோ வந்த கண்ணன் தோழனாய், மந்திரியாய், ஆசிரியனாய், சேவகனாய் இருப்பதாகவும் அப்படிப்பட்ட ஒருவனைப் பெற என்ன தவம் செய்தேன்? என்றும் உருக்கமாகக் கேட்கிறார் பாரதியார்.

பாரதியாரின் கவிதைகளை ஆராயும்போது அவரின் கவிதைகள் எளிமையாக எல்லோருக்கும் விளங்கக்கூடிய விதமாக எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமல்லவா? அதனால்தான் அமரகவியின் கவிதைகளைப் படித்தோரும், பாமரரும், அறிந்தோரும், அறியாதோரும் தெரியக்கூடியதாய் இருக்கிறது.

காதல் பாட்டுகள் எழுதுவதிலும் கவிஞர் சளைத்தவரல்ல. கவிதையில் கண்ணம்மாவைக் காதலியாகக் கற்பனை செய்து அவர் எழுதிய பாடல்கள் காதலின் வேகத்தை இனிமையாக எடுத்துக் காட்டுகிறது பாருங்கள்.

***"சுட்டும் விழிச்சுடர் தான், – கண்ணம்மா!***
***சூரிய சந்திரரோ?***
***வட்டக் கரிய விழி, – கண்ணம்மா!***
***வானக் கருமை கொல்லோ?***

***பட்டுக் கருநீலப் – புடவை***
***பதித்த நல் வயிரம்***
***நட்ட நடு நிசியில் – தெரியும்***
***நக்ஷத் திரங்க ளடீ!***

***சோலை மல ரொளியோ – உனது***
***சுந்தரப் புன்னகை தான்?***
***நீலக் கடலலையே – உனது***
***நெஞ்சி லலைக ளடீ!***

கோலக் குயி லோசை – உனது
குரலி னிமை யடீ!
வாலைக் குமரி யடீ, – கண்ணம்மா!
மருவக் காதல் கொண்டேன்!

சாத்திரம் பேசு கிறாய், – கண்ணம்மா!
சாத்திர மேதுக் கடீ!
ஆத்திரங் கொண்டவர்க்கே, – கண்ணம்மா!
சாத்திர முண்டோ டீ!

மூத்தவர் சம்மதியில் – வதுவை
முறைகள் பின்பு செய்வோம்;
காத்திருப் பேனோடி? இதுபார்,
கன்னத்தில் முத்தமொன்று''

இன்னொமொரு பாட்டிலே கண்ணம்மாவுக்கும், தனக்கும் உள்ள நெருக்கமான உறவை அழகாக வர்ணிக்கிறார் பாரதியார்:-

''வீணையடி நீ எனக்கு, மேவும் விரல் நானுனக்கு;
பூணும் வடம் நீ யெனக்கு, புது வயிரம் நானுனக்கு;
காணுமிடந்தோறு நின்றன் கண்ணி னொளி வீசுதடி!
மாணுடைய பேரரசே! வாழ்வு நிலையே! கண்ணம்மா!

வானமழை நீ யெனக்கு, வண்ணமயில் நானுனக்கு
பானமடி நீ எனக்கு, பாண்டமடி நானுனக்கு;
ஞானவொளி வீசுதடி, நங்கை நின்றன் சோதிமுகம்;
ஊனமறு நல்லழகே! ஊறு சுவையே! கண்ணம்மா!

வெண்ணிலவு நீ யெனக்கு, மேவு கடல் நானுனக்கு;
பண்ணுசுதி நீ யெனக்கு, பாட்டினிமை நானுனக்கு;
எண்ணியெண்ணிப் பார்த்திடிலோர் எண்ணமிலை
நின் சுவைக்கே
கண்ணின் மணி போன்றவளே! கட்டியமுதே! கண்ணம்மா!

**வீசுகமழ் நீ யெனக்கு, விரியுமலர் நானுனக்கு;**
**பேசுபொருள் நீ யெனக்கு, பேணுமொழி நானுனக்கு;**
**நேசமுள்ள வான்சுடரே! நின்னழகை யேதுரைப்பேன்?**
**ஆசை மதுவே, கனியே, அள்ளு சுவையே கண்ணம்மா!''**

பாரதியார் காதல் இன்பத்தை அழகாக எடுத்துரைக்கிறார் என்பது தெளிவாகப் புரிகிறதல்லவா?

''குழலினிது, யாழினிது என்பதம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்'' – என்று பாடிய திருவள்ளுவரைப் போலவே பாரதியாரும் பிள்ளைகளிடம் அளவிலா அன்பு பொழிந்தார். ''கண்ணம்மா என் குழந்தை'' என்று பாடிய பாட்டு மிகவும் இனிமையானது. பிள்ளைப் பாசத்தின் அருமையை இந்தப் பாட்டு எடுத்துக்காட்டுகிறது அல்லவா?

**''சின்னஞ் சிறு கிளியே, – கண்ணம்மா!**
**செல்வக் களஞ்சியமே!**
**என்னைக் கலிதீர்த்தே – உலகில்**
**ஏற்றம் புரிய வந்தாய்!**
**பிள்ளைக் கனியமுதே, – கண்ணம்மா**
**பேசும்பொற் சித்திரமே!**
**அள்ளி யணைத்திடவே – என் முன்னே**
**ஆடி வருந் தேனே!**
**ஓடி வருகையிலே – கண்ணம்மா!**
**உள்ளங் குளிரு தடீ;**
**ஆடித் திரிதல் கண்டால் – உன்னைப்போய்**
**ஆவி தழுவு தடீ;**
**உச்சி தனை முகந்தால் – கருவம்**
**ஓங்கி வளரு தடீ;**
**மெச்சி யுனையூரார் – புகழ்ந்தால்**
**மேனி சிலிர்க்கு தடீ.**

கன்னத்தில் முத்தமிட்டால் – உள்ளந்தான்
கள்வெறி கொள்ளு தடீ;
உன்னைத் தழுவிடிலோ – கண்ணம்மா!
உன்மத்த மாகு தடீ;
சற்றுன் முகஞ் சிவந்தால் – மனது
சஞ்சல மாகு தடீ;
நெற்றி சுருங்கக் கண்டால் – எனக்கு
நெஞ்சம் பதைக்கு தடீ;
உன்கண்ணில் நீர்வழிந்தால் – என்னெஞ்சில்
உதிரங் கொட்டு தடீ!
என்கண்ணிற் பாவையன்றோ? கண்ணம்மா!
என்னுயிர் நின்ன தன்றோ?
சொல்லு மழலையிலே கண்ணம்மா!
துன்பங்கள் தீர்த்திடு வாய்!
முல்லைச் சிரிப்பாலே – எனது
மூர்க்கந் தவிர்த்திடு வாய்.
இன்பக் கதைக ளெல்லாம் – உன்னைப்போல்
ஏடுகள் சொல்வ துண்டோ?
அன்பு தருவதிலே – உனைநேர்
ஆகுமொர் தெய்வ முண்டோ?''

பாரதியார் ஒரு சிறந்த சீர்திருத்தவாதி. சமுதாயப் புரட்சி ஏற்படவேண்டும்; சாதி, சமய வேற்றுமைகள் இன்றி பசி, பஞ்சம் இன்றி மக்கள் யாவரும் இன்புற்று வாழவேண்டும் என அவர் கனவு கண்டார். ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதே அவரது இலட்சியம். பின்வரும் பாட்டுகள் அவரது மனநிலையைக் கண்ணாடி போல பிரதிபலிக்கின்றன.

''நெஞ்சு பொறுக்கு திலையே – இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
அஞ்சி யஞ்சிச் சாவார் – இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே;

வஞ்சனைப் பேய்கள் என்பார் – இந்த
மரத்தில் என்பார் அந்தக் குளத்தில் என்பார்;
துஞ்சுது முகட்டில் என்பார் – மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்.
(நெஞ்சு)

மந்திர வாதி என்பார் – சொன்ன
மாத்திரத்தி லேமனக் கிலிபிடிப்பார்;
யந்திர சூனியங்கள் – இன்னும்
எத்தனை ஆயிரம் இவர்துயர்கள்!
தந்த பொருளைக் கொண்டே – ஜனம்
தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம்;
அந்த அரசியலை – இவர்
அஞ்சுதரு பேயென் றெண்ணி நெஞ்சம் அயர்வார்.
(நெஞ்சு)

சிப்பாயைக் கண்டு அஞ்சுவார் – ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்;
துப்பாக்கி கொண்டு ஒருவன் வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்;
அப்பால் எவனோ செல்வான் – அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்துநிற்பார்;
எப்போதும் கைகட்டுவார் – இவர்
யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கிநடப்பார்.
(நெஞ்சு)

நெஞ்சு பொறுக்கு திலையே – இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
கொஞ்சமோ பிரிவினைகள்? – ஒரு
கோடிஎன் றால்அது பெரிதாமோ?
ஐந்துதலைப் பாம்பென் பான் – அப்பன்
ஆறுதலை யென்றுமகன் சொல்லி விட்டால்,
நெஞ்சு பிரிந்திடு வார் – பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்.
(நெஞ்சு)

*சாத்திரங்கள் ஒன்றும் காணார் – பொய்ச்*
*சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே*
*கோத்திரம் ஒன்றா யிருந்தாலும் ஒரு*
*கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ் வார்;*
*தோத்திரங்கள் சொல்லி அவர்தாம் – தமைச்*
*சூதுசெய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்;*
*ஆத்திரங் கொண்டே இவன் சைவன் – இவன்*
*அரிபக்தன் என்றுபெருஞ் சண்டையிடுவார்.*
*(நெஞ்சு)*

*நெஞ்சு பொறுக்கு திலையே – இதை*
*நினைந்து நினைந்திடினும் வெறுக்குதிலையே;*
*கஞ்சி குடிப்பதற் கிலார் – அதன்*
*காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்.''*

பாரதியார் சொல்வது எவ்வளவு உண்மை என்று தெரிகிறதல்லவா? ஆனால் அவரின் கனவின்படி பாரத சமுதாயம் திருந்தவில்லை என்பது வேதனை தரும் விடயம் அல்லவா?

பாரதியார் யாருக்கும் பயப்பட மாட்டார். அவர் அஞ்சா நெஞ்சர். அச்சமில்லாத அவரது தன்மையைக் காட்டும் பாட்டைப் பார்ப்போம்.

*''அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே*
*இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்,*
*அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே*
*துச்சமாக எண்ணி நம்மைத் தூறுசெய்த போதினும்*
*அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே*
*பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்று விட்ட*
*போதிலும்*
*அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே*
*இச்சைகொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட*
*போதிலும்*

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள்வீசு போதினும்,
அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
நச்சைவாயி லேகொணர்ந்து நண்ப ரூட்டு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பச்சையூ னியைந்த வேற் படைகள் வந்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.''

பாரதியார் ஒரு முன்னேற்றவாதி. பெண் விடுதலைக்காக அவர் போரிட்டார், பெரும் பாடுபட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. பெண்களை அடிமைகளாகக் கருதிய காலத்தில் அவர் எழுதிய பாட்டு அவரது புதுமைப் போக்கை எடுத்துக் காட்டுகிறது.

''மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்;
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி னும்ந மக்குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே.''

பாரதியாரின் கவிதைகளை ஆராயும்போது அவரது அறிவும், ஆற்றலும், திறனும் வெள்ளிடை மலைபோல் புலனாகிறது. உலகின் தலைசிறந்த கவிஞர்களில் அவர் ஒருவர் என்பதில் சற்றேனும் ஐயமில்லை. தமிழ் உள்ளளவும், பாரதியாரின் மணிக் கவிதைகள் ஒலித்துக் கொண்டுதானிருக்கும். எனவே, அவர் சாகவில்லை. அமரத்துவம் அடைந்துவிட்டார். அமரகவியின் கனவுப்படி ஒரு புதிய சத்திய யுகத்தை ஏற்படுத்த நாம் எல்லோரும் பாடுபடுவோமாக!

# இறையருள்

# இறைவனின் மகிமை

"இறைவனுடைய எல்லையற்ற ஆற்றல்களையும், படைப்பின் அழகுகளையும், அந்த அழகுகளுக்குள்ளே மறைந்து கிடக்கின்ற ஆழ்ந்த தத்துவங்களையும் உணர்வது அரிது. அந்த உணர்விலே இன்பம் அனுபவித்து, அந்த இன்ப அனுபவத்திலே கலந்து தன்னை மறந்த நிலையில் சுகித்திருப்பது என்பது பேரானந்தமாகும்'' என்பது ஞானிகள் வாக்கு. எழுத்திலும், ஏட்டிலும், பாட்டிலும் நாம் பார்க்கிற தெய்வ அனுபவங்களை யெல்லாம் தமது வாழ்நாளில் உணர்ந்து, அவைகளுக்குச் சான்றாக வாழ்ந்த பெரும் ஞானிகள் பலர் தமிழகத்திலும், ஈழத்திலும் தோன்றியிருக்கிறார்கள். கைலையில் திருநடனமாடும் சிவபிரானையும், கோலமாமயில் மீது குலவும் அழகனான முருகனையும் நினைக்கும்போது அந்தப் பெரும் பக்தர்கள் கண்ணீர் மல்கிக் கசிந்து, நெக்குருகி ஆனந்தப் பரவசம் அடைவார்கள்.

அன்பு வடிவமாகிய சிவபெருமானை அடைவதற்கு அன்பையே சாதனமாகக் கொள்ளுதல் சிறந்தது என்று சைவ சமயம் கூறும். ''அன்பே சிவம்'' என்ற அருமையான தத்துவத்தைச் சைவ சமய நூல்களில் காணலாம். எண்ணிறந்த குணம் வாய்ந்த கைலை நாயகனை அன்பு வடிவமாக எழுதிக் காட்டினார் திருமூலர்.

> ''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
> அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
> அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
> அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.''

இவ்வாறு திருமூலர் அருளிய திருமந்திரம் அன்பு நெறியே சிவநெறி என்பதை நன்கு விளக்குகிறது. இவ்வுலகில் அன்பினால் ஆகாதது ஒன்றுமில்லை. அறத்தைக் காத்து

மறத்தை அழிப்பது அன்பு. இத்தகைய அன்பு நெறியிலே நின்று பணி செய்தால், இன்ப நிலையாகிய சிவகதி தானே வந்தடையும் என்பது சைவ சமயத்தின் உன்னத சித்தாந்தம்.

அடியார்க்கு நல்லாரான சிவபெருமான் புரிந்த திருவிளையாடல்களை, 'திருவிளையாடற் புராணம்' என்னும் காவியம் அழகாக எடுத்துரைக்கிறது. ஒரு ஏழை மூதாட்டியைக் காப்பாற்றப் பிட்டுக்கு மண் சுமந்த பெருமானது கருணை உள்ளமும், அன்பு வெள்ளமும் எம்மை நெகிழ வைக்கின்றன. 'அன்பே சிவம்' என்று கூறுவதன் அர்த்தத்தைச் செவ்வனே செப்புகிறது திருவிளையாடற் புராணம்.

தமிழர் வாழும் நாடு என்றும் முருகனை வழிபடும் தகைமை சான்றது. அல்லல் விளைத்த அசுரர் குலத்தை வேரறுத்து அறத்தை நிலை நிறுத்திய முருகன் தென்தமிழின் தலைமைப் புலவனாகத் திகழ்கிறான். 'கந்த புராணம்' என்னும் ஒப்பற்ற காவியம் முருகனின் திறனை இனிதாக எடுத்து உரைக்கிறது. முக்கண் பெருமானின் மைந்தனாகிய குமரன் எஞ்ஞான்றும் கலை நிறைந்த இன்னொளியாய் இலங்கு கின்றான்; எங்கும் நிறைந்து விளங்குகின்றான்; அகவிருளை அகற்றி அன்பருடைய மனக் கதவைத் திறக்கின்றான். அருவ மாகவும், உருவமாகவும், ஒன்றாகவும், பலவாகவும் நின்ற அரும்பெரும் சோதியே ஆறுமுகமும், பன்னிருகரமும் கொண்டு உலகம் உய்யுமாறு முருகனாகத் தோன்றிற்று. சரவணப் பூம்பொய்கையில் எழுந்தருளிய செந்தூரன் மன்னுயிரைக் காத்தற் பொருட்டு ஆறுமுகங்களைக் கொண்டருளினான்.

கைலையில் வாழும் தன்னிகரில்லாத தலைவனதும், திருச்செந்தூர் வாழும் செல்வக் குமரனதும் அரும்பெரும் கருணையையும், அன்பையும், அருளையும் போற்றிப் புகழ்ந்து, வாழ்த்தி வணங்குவோமாக!

# பக்தி இலக்கியம்

**கி.பி.** ஏழாம், எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் தோன்றிய பக்தி இலக்கியம் உலகின் தலை சிறந்த இலக்கியங்களில் ஒன்றாக மேலைநாட்டு அறிஞர்களால் கருதப்படுகிறது. சைவ சமயப் பெரியார்களான நாயன் மார்களும், வைணவ சமயப் பெரியார்களான ஆழ்வார்களும் தமிழ்நாட்டில் ஊர் ஊராகச் சென்று பக்திப் பாடல்களைப் பாடித் தத்தமது மதங்களைப் பரப்பி வந்தார்கள். ''தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்'' என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு.

பக்தி இலக்கியம் தோன்றிய காலம் தமிழ்நாட்டில் ஓர் இருண்ட காலம். சைனரும் சாக்கியரும் வாழ்க்கை துன்பம் நிறைந்தது என்பதை எடுத்துக் காட்டி மக்களிடையே துறவறத்தை வலியுறுத்திக் கொண்டிருந்த காலம். இந்நிலையில் நாயன் மார்களும், ஆழ்வார்களும், எத்தொழிலைச் செய்தாலும் இல்வாழ்க்கையில் இன்பமாக வாழ்ந்தாலும் இதயத்தை ஈசனுக்கு உரியதாக வைத்து வாழ்க்கை நடத்தினால் போதும் என்று கூறி மக்களுக்கு நம்பிக்கை அளித்தார்கள். இதனால் பக்தி இலக்கியத்தின் செல்வாக்குப் பெருகியது.

பக்தி இலக்கியத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் இறைவனை ஆசானாகவும், தோழனாகவும், காதலனாகவும் கருதிப் பாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பக்தி இலக்கியப் பாடல்கள் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தவையாகவும், உணர்ச்சி நிறைந்தவையாகவும், உயர்ந்த உண்மைகளை எடுத்துக்காட்டும் தன்மை வாய்ந்தவையாகவும் விளங்குகின்றன. உதாரணமாக, திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த போப்பையர், திருவாசகமானது ''எலும்பை உருக்கும் பாடல்கள்'' நிறைந்திருக்கிறது என்று போற்றி

முதலில் முக்கியமான நாயன்மார்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் பாடல்களை ஆராய்வோம்.

**"தோடுடைய செவியன் விடையேறி**
**ஓர் தூவெண் மதிசூடிக்**
**காடுடைய சுடலைப் பொடி பூசி**
**என் உள்ளம் கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான் முனை**
**நாள் பணிந்து ஏத்த அருள் செய்த**
**பீடுடைய பிரமாபுரம் மேவிய**
**பெம்மான் இவன் அன்றே!"**

இந்த இனிமையான பாட்டைத் தேவாரத்தில் திருஞான சம்பந்தர் பாடினார். பாட்டின் கருத்தைப் பார்ப்போம்:

காதணி உள்ள செவி உடையவன்; எருதை வாகனம் ஆக உடையவன்; தூய்மையும் வெண்மையும் நிறைந்த சந்திரனைச் சூடியவன்; சுடுகாட்டில் உள்ள சாம்பலை உடலில் பூசுபவன் – இவன் என் மனதைத் திருடிய கள்வன்.

முற்காலத்தில் தாமரை மலரில் இருக்கும் பிரமன் சிவனை வணங்கித் துதித்தான். சிவன் பிரமனுக்கு அருள் புரிந்தான். பிரமன் பூசித்ததால் சீர்காழி பிரமாபுரம் என்று பெயர் பெற்றது. சீர்காழியில் இருக்கும் இறைவனான சிவன் எனக்கு அருள் புரிந்தான்.

**(குறிப்பு:** தேவாரத்தில் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய நாயன்மார்கள் பாடிய எண்ணாயிரம் (8000) பாடல்கள் இடம் பெற்றுள்ளன.)

பின்வரும் பாடல் அப்பர் என்றழைக்கப்பட்ட திருநாவுக்கரசர் தேவாரம். சிவனின் திருவடி நிழலானது, மாசில்லாத வீணையின் இசையைப் போலவும், மாலை நேரத்தில் இருக்கும் நிலாவைப் போலவும், இளவேனில் காலத்துக் குளிர்ச்சி போலவும், வண்டுகள் ஒலிக்கும் மலர்கள்

உள்ள குளம் போலவும், சிந்தைக்கு இன்பம் தரும் என்பதே இந்தப் பாட்டின் கருத்து.

*"மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே."*

*அடுத்ததாகச் சுந்தரர் பாடிய ஒரு பாடலைப் பார்ப்போம்:*

*"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்*
*பாழ்போவது பிறவிக்கடல் பசி நோய் செய்த பறிதான்*
*தாழாது அறம் செய்மின் தடம் கண்ணான் மலரோனும்*
*கீழ் மேல் உற நின்றான் திருக்கேதாரம் என்றே."*

பாட்டின் கருத்தாவது: வாழ்க்கை மாயமானது; எமது உடல் நிச்சயமாக மண்ணாகிவிடும். பிறவி என்ற கடலே அழிய வேண்டியது. எமது உடம்பு பசி நோயை உண்டாக்குகிற பையைக் கொண்டது. எனவே பிறவி நீங்க வேண்டுமாயின் காலம் தாழ்த்தாது தர்மம் செய்யுங்கள். இறைவனைத் திருமாலும், பிரமனும் நிலத்தின் கீழும் வானின் மேலும் சென்று தேடினார்கள்.அப்படிப்பட்ட இறைவனது இருப்பிடமான திருக்கேதாரத்தை பற்றிப் பாடுங்கள்.

மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகம் மிகவும் மகிமை வாய்ந்த பக்தி இலக்கியமாகும். "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்ற வாக்கியம் அதன் சிறப்பை தெள்ளிதிற்புலனாக எடுத்துக்காட்டுகிறது. திருவாசகத்தில் பெரும் சிறப்பு வாய்ந்தது சிவபுராணம். அதில் இருந்து ஒரு பகுதியை ஆராய்வோம்.

*"நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!*
*இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!*
*கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!*
*ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!*
*ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க!"*

இதன் கருத்தாவது: 'நமச்சிவாய' என்னும் புனித ஐந்தெழுத்துகள் வாழ்க! சிவனது திருவடிகள் வாழ்க! ஒரு கணமும் என் மனதில் இருந்து நீங்காத இறைவன் திருவடிகள் வாழ்க! கோகழி என்னும் திருப்பெருந்துறையில் ஆட்சி புரியும் எனது குருவின் திருவடிகள் வாழ்க! வேதங்களின் பொருளாக இருப்பவர் – இனிமையானவர் – அவரின் திருவடிகள் வாழ்க! ஒருவனாகவும், பலராகவும் இருக்கும் இறைவன் திருவடிகள் வாழ்க!

ஆழ்வார்களில் முக்கியமானவர்கள் பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோர். அவர்கள் எழுதிய பக்திப் பாடல்களை இனி ஆராய்வோம். ஆண்டாள் எழுதிய திருப்பாவை பின்வருமாறு தொடங்குகிறது:

**''மார்கழித் திங்கள் மதி**
**நிறைந்த நன்னாளில்**
**நீராடப் போதுவீர்**
**போதுமினோ நேரிழையீர்**
**சீர் மங்கும் ஆய்பாடிச்**
**செல்வச் சிறுமீர்காள்**
**கூர்வேல் கொடுந் தொழிலன்**
**நந்த கோபாலன் குமரன்**
**ஏரார்ந்த கண்ணி**
**யசோதை இளஞ்சிங்கம்**
**கார்மேனிச் செங்கண் கதிர்**
**மதியம் போல் முகத்தான்**
**நாராயணனே நமக்கே**
**பறை தருவான்**
**பாரோர் புகழப்**
**படிந்தேலோர் எம்பாவாய்.''**

இந்த இனிய பாட்டைப் பாடிய ஆண்டாளின் திருப்பாவை மிகவும் புகழ்பெற்றது. பாட்டின் கருத்தாவது:

ஆயர்பாடியில் உள்ள செல்வச் சிறுமிகளே! மார்கழி மாதத்தில் முழுமதி நிறைந்த நல்ல நாளில் நீராட வாருங்கள். நந்தகோபனது மகன், யசோதையின் இளஞ்சிங்கமாகிய கண்ணன் அழகிய மேனியும், சிவந்த கண்ணும், நிலவைப் போன்ற முகமும் கொண்ட நாராயணன் பாவை நோன்புக்கு உரிய பறையை நமக்கே தருவான். ஆகையால் உலகத்தார் புகழும் படியாக நீராடுவோம், வாருங்கள்.

அடுத்து வருவது பெரியாழ்வார் பாடிய பாட்டு:

**''மன்னு புகழ்க் கௌசலை**
**தன் மணிவயிறு வாய்த்தவனே**
**தென்னிலங்கைக் கோன் முடிகள்**
**சிந்துவித்தாய் செம்பொன் சேர்**
**கன்னி நன் மாமதில் புடைசூழ்**
**கணபுரத்து என் கருமணியே**
**என்னுடைய இன்னமுதே**
**இராகவனே தாலேலோ.''**

இந்தப் பாட்டிலே, இராமனைப் புகழ்ந்து பாடுகிறார் பெரியாழ்வார். ''கோசலையின் அழகிய வயிற்றில் பிறந்தவனே! இராவணன் முடிகளைச் சிதறியவனே! தாடகையின் வலிமையை அம்பால் அழித்தவனே! ஜனகனின் மருமகனே! பரதனுக்கு அரசச் செல்வத்தை அளித்துவிட்டு காட்டுக்குச் சென்றவனே!'' என்று பாடுகிறார் பெரியாழ்வார்.

திருமங்கையாழ்வார் நாட்டு பாடல்களைப் பின்பற்றிப் பாடிய பக்திப் பாடல்கள் நயம் நிறைந்தவை. வீட்டில் பல்லி ஒலித்தால் யாரோ விருந்தினர் வருவார்கள் என்ற பழைய நம்பிக்கை உண்டு. அதையொட்டி, ''திருமால் வருமாறு ஒலி செய், பல்லியே!'' என்று பாடும் பாட்டைப் பார்ப்போம்:

''கொட்டாய் பல்லிக்குட்டி
குடமாடி உலகளந்த
மட்டார் பூங்குழல்
மாதவனை வரக்
கொட்டாய் பல்லிக்குட்டி.''

(குறிப்பு : ஆழ்வார்கள் பன்னிருவர் திருமாலை வழிபட்டுப் பாடிய பக்திப் பாடல்கள் நாலாயிரம் உள்ளன. அவற்றின் தொகுப்பின் பெயர் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் என்பது.)

நம்மாழ்வார் எழுதிய ஒரு பாட்டிலே திருமாலாகிய நாயகரின் பிரிவால் வருந்திப் புலம்பும் மகளின் நிலையைத் தாய் கூறுவதாக அமைந்த பாடல் பக்திச்சுவை நிரம்பியது.

**''மண்ணை இருந்து துழாவி
வாமனன் மண் இது என்னும்
விண்ணைத் தொழுது அவன் மேவு
வைகுந்தம் என்று கை காட்டும்
கண்ணை உள் நீர் மல்க நின்று
கடல் வண்ணன் என்னும் அன்னே என்
பெண்ணைப் பெருமயல் செய்தார்க்கு
என் செய்கேன் பெய்வளையீரே!''**

பாட்டின் கருத்தாவது: ''மண்ணைத் துழாவி இது என் திருமாலின் மண்'' என்கிறாள். வானத்தைப் பார்த்து ''அது அவன் வாழும் வைகுந்தம்'' என்று கை காட்டுகிறாள். கண்களில் நீர் நிறைய ''என் நாயகன் இந்தக் கடல் போன்ற நிறம் உடையவன்'' என்கிறாள். இவ்வாறு என் பெண்ணுக்குப் பெருமயக்கம் செய்த திருமாலை நான் என்ன செய்வது? என்று தாய் கேட்கிறாள்.

மேற்கூறிய உதாரணங்கள் பக்தி இலக்கியத்தின் மகிமையையும், நயத்தையும் பக்திச் சுவையையும் இனிதாக உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக் காட்டுகின்றன அல்லவா?

# சைவ சித்தாந்தம்

தமிழ்நாட்டில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய ஞான தத்துவம்தான் சைவ சித்தாந்தம். அது சமஸ்கிருதத்தில் கூறப்பட்ட வேதாந்தத்தைப் போலவே பழமையும் தொன்மையும் வாய்ந்தது. சைவ சித்தாந்தத்தின் ஆணிவேர் திருமூலர் என்னும் மகரிஷி எழுதிய திருமந்திரமாகும். திருமந்திரம் தமிழரின் பக்தி இலக்கியங்களில் மிகவும் மேன்மை வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. சைவ சித்தாந்தத்தைப் பற்றி அறிய வேண்டுமானால் திருமந்திரம், தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், சைவ ஆகமங்கள், சிவஞானபோதம் போன்ற பக்தி நூல்களைப் படிக்க வேண்டும். ஆனால் அவற்றைப் படித்து யோகர் சுவாமி, சுவாமி சிவானந்தர், சுவாமி சித்பவானந்தர் ஆகியோர் எளிய முறையில் சைவ சித்தாந்தத்தின் முக்கிய அம்சங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தக் கட்டுரையில் சைவசித்தாந்தத்தின் முக்கிய கோட்பாடுகளை ஆராய்வோம்.

சித்தாந்தம் என்ற சொல்லின் பொருள் என்ன? அது "முடிவுகளின் முடிவு" என்று பொருள் படும். சைவ சித்தாந்தத்தின் முக்கியமான அடிப்படை பதி, பசு, பாசம் என்னும் மூன்று மூல அம்சங்கள்.

**பதி :** கடவுள் – சிவனைக் குறிக்கும்.

**பசு :** இது எல்லா உயிரையும் குறிக்கும். பசு என்ற சொல்லுக்குக் கட்டப்பட்டது, பிணிக்கப்பட்டது என்று பொருள்.

**பாசம் :** பிணிப்பைக் குறிக்கிறது. பாசம் மூன்று தன்மைகளைக் கொண்டது. அவை மலங்கள் (அழுக்குகள்) என அழைக்கப்படுகின்றன.

1. **ஆணவம் :** சொல்வழக்கில் இது கிறுக்கு என்று பொருள் படும். ஆனால் அது 'அணு' என்ற சொல்லில் இருந்து

பிறந்தது. ''மிகவும் சிறியது, சிறிய தன்மை வாய்ந்தது'' என்று பொருள் படும். எல்லா உயிர்களும் முதலில் ஆணவம் என்னும் இருட்டால் மூடப்பட்டிருக்கின்றன. அது கடவுள் என்னும் ஒளியைப் பார்க்க முடியாது தடுக்கிறது. எனவே அது பாவங்களுக்கெல்லாம் பாவமாய் விளங்குகிறது. இந்த ஆணவத்திலிருந்து விடுபட்டு பிறவிப் பயனை அடைவதற்கு இறைவன் மாயையையும் கர்மாவையும் படைத்தான்.

2. **மாயை :** எங்களுடைய வாழ்வு, உடல், வாழும் உலகம் யாவும் மாயை.

3. கர்மா : எங்களுக்கு நடப்பதை, எங்களுடைய செயல்களைக் கர்மா என்று குறிக்கிறோம். ஒவ்வொருவரும் புரியும் செயல்கள் படிப்படியாக உயிர்கள் ஆணவம் என்னும் இருட்டிலிருந்து தப்பி இறைவனை அடைய உதவுகின்றன.

ஆணவத்திலிருந்து தப்பி, கர்மாவை அழித்து, மாயைகளை வென்று புனித செயல்கள் புரிந்து சிவபதம் அடைவதே வாழ்வின் நோக்கமாகும் என்று சைவசித்தாந்தம் கூறுகிறது.

**''பரை பசு பாதத்து நாதனை உள்ளி**
**உரை பசு பாசத்தொருங்க வல்லார்க்குத்**
**திரை பசு பாவச் செழுங்கடல் நீந்திக்**
**கரை பசு பாசங் கடந்தெய்தலாமே.''**

இந்தப் பாட்டு திருமூலர் எழுதிய ஞான அறிவுரை. கடவுளிடம் உண்மையான பக்தி கொண்டு, பாசத்திலிருந்து விடுபட்டு, வாழ்க்கைக் கடலைக் கடந்து, மற்றக் கரையில் கடவுளை அடையலாம் என்பது இந்தப் பாட்டின் கருத்து.

அன்பின் சிறப்பையும் திருமூலர் அழகாக எடுத்துக் கூறுகிறார். அன்பைப் பெருக்கி, அன்போடு உருகி மனம் குழைவார் அல்லாமல் மற்றவர்கள் இறைவனை அடைய

முடியாது என அவர் திட்டவட்டமாகக் கூறுகிறார். ''அன்பே சிவம்'' என்பது அவர் கூறும் ஒப்பற்ற தத்துவம். அன்பும், சிவமும் இரண்டு பொருள்கள் அல்ல! அன்பே சிவம் என்பதை உணர்ந்த சிலரே கடவுள் தன்மை பெற்றவர்கள் என்று கூறும் திருமூலரின் இனிய பாட்டைப் பார்ப்போம்:

***''அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்***
***அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்***
***அன்பே சிவமானது ஆரும் அறிந்தபின்***
***அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.''***

இவ்வாறு திருமூலர் அவரது மூவாயிரம் பாடல்களில் பக்தி, யோகம், தவம், ஞானம், அருள் போன்ற விடயங்களைப் பற்றிய அரும் பெரும் உண்மைகளைத் தெளிவாக உணர்த்துகிறார். ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'', ''உடம்புக்குள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்று உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேன்'' என்ற அவரது பொன் வாக்குகள், அவரது அருள் நிலையை அழகாகப் பிரதி பலிக்கின்றன.

அடுத்ததாகச் சைவ சித்தாந்தத்தின் சில முக்கிய அம்சங்களை ஆராய்வோம்.

**சக்தியின் மேன்மை:**

இறைவன் உருவத்தில் இன்னுமொரு காட்சியைக் காணலாம். ''மாதொருபாகன்'' (அர்த்தநாரீசுவரன்) என்பதும் அவரது வடிவம். மாது ஒரு பாகம் ஆனவர் என்று அது பொருள் படுகின்றது. ஒரே வடிவத்தில் பாதி ஆணாகவும், பாதி பெண்ணாகவும் இருப்பது இயற்கைக்கு ஒவ்வுமோ? என்னும் கேள்வி எழுகிறது. ஆனால் துருவி ஆராய்ந்தால் இதுவே இயற்கையின் இயல்பு என்பது விளங்கும். உலகில் ஒரே வடிவத்தில் ஆண் இயல்பு, பெண் இயல்பு இரண்டும்


சேர்ந்திருக்கின்றன. உயிரும் மெய்யும் சேர்ந்திருப்பது வாழ்க்கை. உயிர்த் தத்துவம் சிவம்! உடல் தத்துவம் சக்தி! உடல் இல்லாது உயிர் தன்னை விதவிதமாக விளக்காது. உயிர் இல்லாது உடல் ஒன்றுக்கும் உதவாது. உயிரும் மெய்யும் கொள்ளும் கூட்டுறவால் இயற்கைத் திட்டம் இனிது நிறைவேறுகிறது. எனவே சிவன் இல்லையேல் சக்தி இல்லை; சக்தி இல்லையேல் சிவன் இல்லை என்பது தெளிவாகிறதல்லவா? இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் சங்க காலத்துத் தமிழர்கள் பெண்ணுக்குச் சம உரிமை வழங்கினர். பெண்ணை "வாழ்க்கைத் துணை நலம்" என்று கூறினர். சீதனம் வாங்கும் வழக்கமும், பெண்ணை அடிமையாக நடத்தும் வழக்கமும் பழந்தமிழ் நாட்டில் இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**சிவலிங்கம் :** சிவனின் புனிதமான சின்னமாக இருப்பது சிவலிங்கம். எனவே அது சைவத்தில் முக்கிய இடம்பெறுகிறது. அது உருவமாகவும், அருவமாகவும் இருக்கிறது. தமிழ்நாட்டில் பல கோயில்களில் சிவலிங்கத்தையே பூசை செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**சிவதாண்டவம் :** எங்கள் சிவன் நடமாடும் தெய்வம். ஆதலால் "நடராஜா" என்று அழைக்கப்படுகிறான். நடராஜர் சிலையில் காணப்படும் அற்புத தத்துவத்தை உணர்வது அரிது. ஒரே நேரத்தில் படைத்தும், அழித்தும் இறைவன் உலகைக் காக்கிறான். அதே நேரத்தில் "அஞ்சேல், அஞ்சேல்" என அபயம் அளிக்கிறான்.

**சிவம் :** சிவம் என்னும் சொல்லுக்குப் பொருள் 'மங்களம்' உலகைச் சிவமயமாகக் காணுமிடத்து அது மங்களகரமானது. 'எல்லாம் சிவமயம்' என்ற உண்மையை உணர்ந்து அதற்கு ஒப்ப வாழ்பவர்களுக்குப் பரமானந்தம் ஏற்படுகிறது.

சாதாரண மனிதர்களான நாம் செய்ய வேண்டியது யாது? என்பதை ஆராய்வோம். இதற்கு யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மகான் யோகர் சுவாமிகளின் அறிவுரைகள் பெரிதும் உதவுகின்றன. எப்படிப்பட்ட தொழிலைச் செய்தாலும் அது உயர்வானது என்று சொல்கிறார் சுவாமிகள். நாம் செய்யும் தொழிலெல்லாம் சிவத்தொண்டு என்பதை அவர் வலியுறுத்துகிறார். 'செய்யும் தொழிலே தெய்வ வழிபாடு' என்பது அவர் பொன்வாக்கு. ''சிவதியானம் புரி. இப்போது போய் உன்னுடைய வேலையை ஒழுங்காகச் செய்'' என்று அவரிடம் வருவோருக்கெல்லாம் அவர் அறிவுரை கூறுவார். செய்யும் தொழிலை ஒழுங்காகச் செய்வதாலும் சிவ தியானம் புரிவதாலும் சிவபதம் பெற்றுப் பேரின்பம் அடையலாம் என்பது அவர் கருத்து. யோகர் சுவாமிகள் எழுதிய இந்தப் பாட்டு அவர் அறிவுரையை இனிதே எடுத்துக் காட்டுகிறது.



# சும்மா விருந்துபார் தம்பி

நல்ல சமயமிது தம்பி
நம்மைநா மறிந்துகொள்ளத் தம்பி.
எல்லார்க்கும் நன்மைசெய் தம்பி
இறைவனுன் னிடமுண்டு தம்பி.
கொல்லாதே கோபம்வை யாதே
கும்பிடு காலைமாலை தம்பி.
சொல்லாலே பயனில்லை தம்பி
சும்மா விருந்துபார் தம்பி.
கண்ணல்ல காதல்ல தம்பி
கண்ணுக்குக் கண்ணடா தம்பி.
எண்ணிலடங் காதடா தம்பி
எல்லா மதுவடா தம்பி.
மண்ணாசை வையாதே தம்பி
மற்றிரண்டும் அப்படியே தம்பி.
ஒன்றுக்கு மஞ்சாதே தம்பி
ஓடி ஒளியாதே தம்பி.
பண்டுமின்றும் உள்ளதடா தம்பி
பாடிப் பணியடா தம்பி.
அகம்பிர மாஸ்மியென்று தம்பி
அனுதினமுஞ் சாதனைசெய் தம்பி.
இகலோகம் பரலோகந் தம்பி
இங்கேநீ கண்டுகொள்வாய் தம்பி.

– நற் சிந்தனை (யோகர் சுவாமிகள்)

சைவ சித்தாந்தமானது பல அரிய உண்மைகளை எடுத்துக்காட்டி வாழ்வென்னும் பெருங்கடலைக் கடக்க உதவுகிறது என்பதில் சற்றேனும் ஐயமில்லை அல்லவா?

# கவிதைகள்

# புது மொழிகள்

1. வாழ்வு வரும்; தாழ்வு வரும்;
ஊழ்வினையின் வலியை மாற்றல் அரிது.

2. கடமையை மறப்பது நன்றன்று;
பகைமையை மறப்பது நன்று.

3. மது உள்ளே போக மதி வெளியே வருதலால்
அஃது வெறுக்கப்பட வேண்டும்.

4. தாமரையில் நீர்க்குமிழி போல் வாழ்வதன்றி
வாழ்க்கைப் படகைச் செலுத்துவது அரிது.

5. கடமையைச் செவ்வனே செய்வது சாலச் சிறந்தது;
மடமையிலும் மடமை பயனை எதிர்பார்ப்பது.

6. பற்றின் வருவது பெரும் துன்பம்;
பற்றற்ற நிலையில் வருவது பேரின்பம்.

7. அன்பு தழைத்து அருள் பரிணமித்தால்
இன்பம் பெருக்கெடுத்தோடும்.

8. நண்பனும் பகைவனாகலாம், பகைவனும்
நண்பனாகலாம் – ஆனால்
உண்மை அன்பு என்றும் நிலைத்து நிற்கும்.

# தமிழே! தமிழே!

**ப**ண்டைய நாளில் உலகத்துக்கு முன்னோடியாக இருந்த தமிழினம் இன்று சீர்குலைந்து நிலை தடுமாறுகிறது. தமிழினம் மறுமலர்ச்சி அடைய வேண்டுமெனில் தமிழர்கள் தமது துர்க்குணங்களாகிய அழுக்காறு, வஞ்சனை, சுயநலம், பதவி மோகம், சாதிப் பிரிவினைகள் ஆகியனவற்றைக் கைவிட வேண்டும் என்பது வெள்ளிடை மலை.

தமிழன்பனாகிய நான் எனது உயிரினும் அரிய தமிழ்த் தாய்க்கு அஞ்சலி செலுத்துகிறேன்:

**"தமிழே! தமிழே!**
**அறம் வளர்த்த தமிழே!**
**ஆழ்ந்த தத்துவங்களை அளித்த தமிழே!**
**இன்ப இலக்கியங்களை ஈந்த தமிழே!**
**ஈடும் எடுப்பும் இல்லாத் தமிழே!**
**உலகின் முதுமொழியான தமிழே!**
**ஊனம் இல்லா நல்மொழியே! தமிழே!**
**என்றும் அழியாத தமிழே!**
**ஏற்றம் நிறைந்த மொழியே! தமிழே!**
**ஐங்கரன் உவக்கும் தமிழே!**
**ஒப்புவமை இல்லாத் தமிழே!**
**ஒரு காலத்தில் அவனியெலாம் பவனி வந்த தமிழே!**
**ஔவையார் போற்றிப் பாடிய தமிழே!**
**தமிழே! தமிழே! நீ என்றென்றும் வாழியவே!"**

# பாரதியார்

பாரதியெனும் பெரும் கவிஞன் வாழ்ந்தானடா,
பாரதத்தின் தனிப்பெரும் புலவன் அவனடா,
பார் புகழும் பாக்களை அமைத்தானடா,
பாரிலே அவனுக்கு ஈடு இணையில்லையடா.

பாரதியின் பாட்டு

உள்ளத்தை உருக்குதடா, உயர்வை அளிக்குதடா,
தெள்ளுதமிழை அள்ளி அள்ளி வீசுதடா,
இன்பத்தை வழங்குதடா, இதயத்தைத் துடிக்க வைக்குதடா,
அன்பை ஆழி பொங்குவது போல் பெருக்குதடா.

பாரதியின் பாட்டு

நல்லறத்தை நவில்கிறதடா, நன்மையைப் போதிக்கிறதடா,
அல்லல் படுவோருக்கு ஆறுதல் தருகிறதடா,
அமிர்தம் போலிருக்கிறதடா, அமைதியைக் கொடுக்கிறதடா,
தமிழின் தனிச்சிறப்பை எடுத்துரைக்கிறதடா.

பாரதியென்னும் ஒப்பில்லாப் பாவேந்தனின்
வீரக் கவிதைகளைப் போற்றுவோமடா; அவனது
தரம் நிறைந்த பாக்களைத் தரணியெல்லாம்
பரவச் செய்து மாந்தரை மகிழ்விப்போமடா.




# இன்னுமோர் ஆத்திசூடி

*(**குறிப்பு:** இன்னுமோர் ஆத்திசூடி என்ற தலைப்பில் இந்தக் கவிதையை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். வித்தியாசம் என்னவெனில் ஓர் எழுத்தை இருமுறை உபயோகித்திருக்கிறேன். இடப் பக்கத்தில் செய்ய வேண்டியவையும், வலப் பக்கத்தில் செய்யக்கூடாதவையும் கூறப்பட்டிருக்கின்றன.)*

| | |
|---|---|
| அன்பை வளர். | அகந்தையை அகற்று. |
| ஆர்வத்தைப் பெருக்கு. | ஆணவத்தை அழி. |
| இனிமையாகப் பேசு. | இழிவை ஒழி. |
| ஈயாமல் இருக்காதே. | ஈயோட்டிக் கொண்டிருக்காதே. |
| உண்மையாக நடந்து கொள். | உதவாக்கரை என்று பெயரெடுக்காதே. |
| ஊக்கத்தோடு செயலாற்று. | ஊரோடு பகைக்காதே. |
| எழுச்சியை ஏற்படுத்து. | எதிரியாக இருக்காதே. |
| ஏற்றத்தோடு பணிபுரி. | ஏளனம் செய்யுமாறு நடக்காதே. |
| ஐக்கியத்தை உண்டு பண்ணு. | ஐயத்தோடு பழகாதே. |
| ஒப்பில்லாப் பெரியோரைப் பேண். | ஒற்றுமையின்றி வாழாதே. |
| ஓதுவதை மறக்காதே. | ஓரவஞ்சனை செய்யாதே. |
| ஔவையார் வழியைக் கடைப்பிடி. | ஔடதம் கொடுக்க மறுக்காதே. |

| | |
|---|---|
| கடமையைச் செய். | களவு புரியாதே. |
| காந்தியத்தைப் போற்று. | காலத்தை வீணாக்காதே. |
| கிருபையை வழங்கு. | கிராக்கி பண்ணாதே. |
| கீர்த்தியைப் பரப்பு. | கீழ்மையை உதறித் தள்ளு. |
| சமரசத்துடன் வாழ். | சர்ச்சையை விலக்கு. |
| சாந்தமாகப் பேசு. | சாதிவேற்றுமை பார்க்காதே. |
| சிக்கனமாக வாழ். | சிக்கலில் அகப்பட்டுக் கொள்ளாதே. |
| சீர்தூக்கி நட. | சீர்குலைவை உண்டாக்காதே. |
| தர்மத்தைக் கடைப்பிடி. | தருணத்தைக் கைவிடாதே. |
| தாட்சண்யம் காட்டு. | தாபத்தை வளர விடாதே. |
| தியாகம் செய்யத் தயாராயிரு. | திமிரோடு வாழாதே. |
| தீரமாக நடந்துகொள். | தீயவர்களோடு தொடர்பு வைக்காதே. |
| நன்மையையே நாடு. | நயவஞ்சகர்களோடு பழகாதே. |
| நாவைக் கட்டுப் படுத்து. | நாடகமாடாதே. |
| நிதியைச் சேர்த்து வை. | நிந்தனையில் ஈடுபடாதே. |
| நீதியை நிலைநாட்டு. | நீலிக்கண்ணீர் வடிக்காதே. |
| பண்புடன் பழகு. | பகைமையை ஏற்படுத்திக் கொள்ளாதே. |

| | |
|---|---|
| பாங்குடன் வாழ முயல். | பாசாங்கு செய்யாதே. |
| பிரபலம் பெறு. | பிரச்சனைகளை வளர்க்காதே. |
| பீதியை விட்டொழி. | பீத்தலில் ஈடுபடாதே. |
| மறையைப் பின்பற்று. | மரியாதையைத் தவிர்க்காதே. |
| மானம் பெரிதென நினை. | மாண்பில்லாமல் வாழாதே. |
| மிச்சப் படுத்து. | மிக ஆசை வைக்காதே. |
| மீண்டும் மீண்டும் முயல். | மீறும் செயல்களைச் செய்யாதே. |
| வழிகாட்டியாக இரு. | வம்புச் சண்டைக்குப் போகாதே. |
| வாகை சூடு. | வாக்கு வாதத்தில் ஈடுபடாதே. |
| வித்தைகள் பல கற்றுக்கொள். | விறுவிறுப்பில்லாமல் வேலை புரியாதே. |
| வீம்பைக் குறைத்துக்கொள். | வீணர்களோடு பழகாதே. |



Donated by
International Movement for
Tamil Culture N.Z. (Inc.)

# நூலாசிரியரைப் பற்றி...



இந்த நூலை எழுதிய டாக்டர் மகேசன் இராசநாதன், MBBS MRNZCGP FRNZCGP நியூசிலாந்தில் 27 ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மருத்துவர். இலங்கையில் கொழும்புக்கு அருகே உள்ள கந்தானை என்னும் கிராமத்தில் பிறந்த இவர், கொழும்பு மருத்துவக் கல்லூரியில் பயின்று 1967-ல் டாக்டராகப் பதவியேற்றார். ஆறு வருடங்கள் இலங்கையில் பணியாற்றிய பின் 1974-ல் அவர் நியூசிலாந்து வந்து சேர்ந்தார். நியூசிலாந்து வருவதற்கு முன் 1973-ல் அவர் 'அறிவுக் களஞ்சியம்' என்னும் நூலை எழுதி வெளியிட்டார்.

நியூசிலாந்திலே ஆக்லாந்திலே பல மருத்துவ மனைகளில் அவர் இரு வருடங்கள் பணியாற்றினார். அதன் பின் 1975 - ஐப்பசி மாதத்தில் தனிப்பட்ட முறையில் மருத்துவத் தொழிலைத் தொடங்கினார். அன்று முதல் ஆக்லாந்தில் தனிப்பட்ட முறையில் மருத்துவத் தொழில் நடத்தி வருகிறார். சிறு வயதில் இருந்தே அவருக்குத் தமிழில் தனி ஆர்வம் இருந்தது. நியூசிலாந்திலே அந்த ஆர்வம் மிகவும் பெருகியது. 1983-ல் தொடங்கப்பட்ட நியூசிலாந்து தமிழ்ச் சங்கத்தில் தலைவர் செயலாளர், ஆசிரியர் எனப் பல பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுத் தமிழ்த் தொண்டு புரிந்தார். சங்கத்தின் செய்தித்தாளான தமிழ் மலருக்கு ஆசிரியராக அவர் பல வருடங்கள் பணிபுரிந்தார். அதன் பின் 1990-ல் நியூசிலாந்திலே உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் கிளையை நிறுவினார். அந்தக் கிளைக்குத் தலைவராக ஏழு வருடங்கள் (1990-1997) உழைத்துத் தமிழ்ப் பணி புரிந்தார்.

1992-ல் அவுஸ்திரேலியக் குழுவுடன் சேர்ந்து நியூசிலாந்துக் கிளை சிட்னி நகரில் 5-வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாட்டை நடத்தியது. அந்த மகாநாட்டில் அவர் 'தமிழ்ச் சங்க இலக்கியங்களின் மகிமை' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்தார். தற்போது நியூசிலாந்து உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 'தமிழ் மஞ்சரிக்கு' ஆசிரியராகவும் தமிழ்ப் பள்ளிக்கூட ஆசிரியராகவும் பணியாற்றுகிறார். இதைவிட மாதத்துக்கு ஒரு முறை தமிழ் வானொலி நிகழ்ச்சியையும் அளிக்கிறார். இயக்கத்தின் தமிழ் மன்றங்களிலும் அவர் அடிக்கடி தமிழ் சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றுகிறார்.